# பகுதி IV

# பகுதி IV

மத்திய வங்கியினதும் இலங்கையிலுள்ள வங்கித் தொழில் நிறுவனங்களினதும் கடமைகளும் தொழிற்பாடுகளும் தொடர்பான 2006ஆம் ஆண்டின் முதன்மைச் சட்டவாக்கங்கள்


| | பக்கம் |
|---|---|
| 1. 2006ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க, பணம் தூய்தாக்கல் தடைச்சட்டம் | I |
| 2. 2006ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நிதிசார் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல் சட்டம் | XIII |
| 3. 2006ஆம் ஆண்டின் 09ஆம் இலக்க, பணச் சட்டம் (திருத்தச்) சட்டம் | XXXIII |
| 4. 2006ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க நிதச் சட்டம் | XXXIV |
| 5. 2006ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க, வங்கித் தொழில் (திருத்தச் சட்டம்) | XXXIX |
| 6. 2006ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க, தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் | XLI |
| 7. 2006ஆம் ஆண்டின் 30ஆம் இலக்கக் கொடுப்பனவு உபாயங்களின மோசடிகள் சட்டம் | LI |

## 2006ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க, பணம் தூய்தாக்கல் தடைச்சட்டம் சட்டம்

[2006ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 06ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

**இலங்கையில் பணம் தூய்தாக்கலைத் தடைசெய்வதற்கும்; பணம் தூய்தாக்கலை எதிர்த்து நிற்பதற்கும், தடுப்பதற்கும் அவசியமான வழிமுறைகளை ஏற்பாடு செய்வதற்கும், அத்துடன் அதனுடன் தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

1. இச்சட்டம் 2006ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க, பணம் தூய்தாக்கல் தடைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. இச்சட்டத்தின் ஏற்பாடுகள் பின்வருவன தொடர்பில் ஏற்புடையதாதல் வேண்டும் :-

(அ) இலங்கையில் வதிகின்ற பொழுதிலே இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் தவறொன்றைப் புரிகின்ற ஆளொருவர்;

(ஆ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ்த் தவறொன்றைப் புரிவதற்குப் பயன்படுத்தப்பட்ட, இலங்கையில், ஒன்றில் கூட்டிணைக்கப்பட்ட அல்லது பதிவு செய்யப்பட்ட வியாபாரத்தைக் கொண்டு நடாத்தும் நிறுவனமொன்று அல்லது இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட அல்லது பதிவு செய்யப்பட்டதான ஏதேனும் வங்கியொன்றின் கூட்டிணைக்கப்பட்ட அல்லது பதிவு செய்யப்பட்டதான ஏதேனும் கிளை;

(இ) இலங்கையில் புரியப்பட்ட எந்தச் செயல், இச்சட்டத்தின் கீழ் தவறொன்றாக அமைகின்றதோ அந்தச் செயல்.

### பாகம் I

### பணம் தூய்தாக்கல்

3. (1) அத்தகைய ஆதனம், நேரடியாக அல்லது நேரடியாகவல்லாது ஏதேனும் சட்டமுறையற்ற செயற்பாட்டிலிருந்து அல்லது ஏதேனும் சட்டமுறையற்ற செயற்பாட்டு வருவாய்களிலிருந்து அடையப்பெற்றது அல்லது தேறிப் பெறப்பட்டது என அறிந்து கொண்டு அல்லது நம்புவதற்கான காரணமிருக்க-

(அ) ஏதேனும் சட்டமுறையற்ற செயற்பாட்டிலிருந்து அல்லது எதேனும் சட்டமுறையற்ற செயற்பாட்டு வருவாய்களிலிருந்து நேரடியாக அல்லது நேரடியாகவல்லாது அடையப்பெற்ற அல்லது தேறிப்பெறப்பட்ட ஏதேனும் ஆதனம் தொடர்பிலான ஏதேனும் கொடுக்கல் வாங்கலில், நேரடியாக அல்லது நேரடியாகவல்லாது ஈடுபடுகின்ற;

(ஆ) ஏதேனும் சட்டமுறையற்ற செயற்பாட்டிலிருந்து அல்லது ஏதேனும் சட்டமுறையற்ற செயற்பாட்டு வருவாய்களிலிருந்து நேரடியாக அல்லது நேரடியாகவல்லாது அடையப்பெற்ற அல்லது தேறிப் பெறப்பட்ட ஏதேனும் ஆதனத்தைப் பெறுகின்ற, உடைமையில் வைத்திருக்கின்ற, மறைத்து வைத்திருக்கின்ற, கையுதிர்கின்ற அல்லது இலங்கைக்குள் கொண்டுவருகின்ற, இலங்கைக்கு வெளியே கைமாற்றுகின்ற அல்லது இலங்கையில் முதலீடு செய்கின்ற.

ஆளெவரும், பணம் தூய்தாக்கல் என்னும் தவறுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், மேல் நீதிமன்றத்தின் முன்னரான விளக்கத்தின்பின் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், தவறு எவ்வாதனம் தொடர்பில் புரியப்பட்டதோ அவ்வாதனத்தின் பெறுமதிக்குக் குறையாததும், அவ்வாதனத்தின் பெறுமதியின் மூன்று மடங்குக்கு மேற்படாததுமான குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஐந்து ஆண்டுகளுக்கு குறையாததும் இருபது ஆண்டுகளை விஞ்சாததுமானதொரு காலப்பகுதிக்கான கடுழிய மறியற்றண்டனை அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும். இப்பிரிவின்கீழ் பணம் தூய்தாக்கல் தவறுக்கு குற்றவாளியாகக் காணப்பட்ட எவரேனும் ஆளின் சொத்துக்கள் இச் சட்டத்தின் II ஆம் பாகத்தின் நியதிகளின்படி இழப்பிக்கப்படுவதற்கு இலக்காதல் வேண்டும்.

(2) பணம் தூய்தாக்கல் தவறைப் புரிய எத்தனிக்கின்ற அல்லது சதிசெய்கின்ற அல்லது அத்தவறைப்புரிய உதவுகின்ற அல்லது உடந்தையாயிருக்கின்ற ஆளெவரும், இச்சட்டத்தின் கீழ்த் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், மேல் நீதிமன்றத்தின் முன்னரான விளக்கத்தின் பின்னர் பணம் தூய்தாக்கல் தவறுக்குக் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறான அதே தண்டனையால் தண்டிக்கப்படுவதற்கு ஆளாதலும் வேண்டும்.

இவ்வுட்பிரிவில் "உடந்தையாயிருத்தல்" என்பது, தண்டனைச் சட்டகோவையின் 100ஆம், 101ஆம் பிரிவுகளிலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) ஐயங்களைத் தவிர்ப்பதற்காக, குற்றஞ்சாட்டப்பட்டவரால் புரியப்பட்ட சட்ட முறையற்ற செயற்பாட்டுக்காக குற்றத்தீர்ப்பு ஒன்று, இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ்த் தவறொன்றை எண்பிப்பதற்கு அவசியமானதாக இருத்தலாகாது என இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது.

4. இச்சட்டத்தின் ஏதேனும் வழக்கு நடவடிக்கைகளின் நோக்கங்களுக்காக முரணாக இருப்பது எண்பிக்கப்படும்வரையில், ஆளொருவரால் கொள்ளப்பட்ட ஏதேனும் அசையும் அல்லது அசையா ஆதனம் ஏதேனும் சட்டமுறையற்ற செயற்பாட்டில் இருந்து நேரடியாக அல்லது நேரடியாக அல்லாத அடையப்பெற்றதென அல்லது தேறிப் பெறப்பட்டதென அல்லது ஏதேனும் சட்டமுறையற்ற செயற்பாட்டின் வருவாய்களாக இருக்கின்றதெனப் பின்வரும் சந்தர்ப்பங்களில் கருதப்படுதல் வேண்டும்.

(அ) பணமாக இருக்கின்ற அத்தகைய ஆதனம், -

(i) அத்தகைய ஆளின் அறியப்பட்ட வருமானம் அல்லது பெறுகைகளின் பகுதியாக; அல்லது

(ii) அவருடைய அறியப்பட்ட வருமானம் அல்லது பெறுகைகள், எந்தப் பணமாக மாறப்பட்டுள்ளதாக அல்லது மாற்றப்பட்டிருந்துள்ளனவோ அந்தப் பணமாக,

இருக்கமுடியாதிருந்தால் அல்லது இருந்திருக்கமுடியாதிருந்தால்; அல்லது

(ஆ) பணம் தவிர்ந்த வேறு ஆதனமாக இருக்கின்ற அத்தகைய ஆதனம் :-

(i) அவருடைய அறியப்பட்ட வருமானத்தின் அல்லது பெறுகைகளின் ஏதேனும் பாகத்தால் கொள்ளப்பட்ட ஆதனமாக; அல்லது

(ii) அவருடைய அறியப்பட்ட வருமானத்தின் அல்லது பெறுகைகளின் பாகமாக இருக்கின்ற அல்லது பாகமாக இருந்த ஆதனமாக; அல்லது

(iii) அவருடைய அறியப்பட்ட வருமானம் அல்லது பெறுகைகளின் ஏதேனும் பாகம் எந்த ஆதனமாக மாற்றப்பட்டுள்ளதோ அல்லது மாற்றப்பட்டிருந்துள்ளதோ அந்த ஆதனமாக,

இருக்கமுடியாதிருந்தால் அல்லது இருந்திருக்க முடியாதிருந்தால்,

5.(1) எவ்வாள் அவரால் கொண்டு நடாத்தப்படும் ஏதேனும் வியாபாரத்தின்போது, உயர்தொழிலின்போது, செய்தொழிலின்போது அல்லது தொழிலின்போது அவரால் பெறப்பட்ட தகவலிலிருந்து அல்லது வேறு விடயங்களிலிருந்து ஏதேனும் ஆதனமானது ஏதேனும் சட்டமுறையற்ற செயற்பாட்டிலிருந்து அடையப்பெற்றதென அல்லது தேறிப் பெறப்பட்டதென அறிந்துள்ளாரோ அல்லது நம்புவதற்குக் காரணம் கொண்டுள்ளாரோ அத்தகையவரான எவரேனும் ஆள் நடைமுறைச் சாத்தியமானளவு விரைவாகத் தமது அறிவுபற்றி அல்லது நம்பிக்கைபற்றி நிதிசார் உளவறிதற் கூறுக்கு வெளிப்படுத்துதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகத் தவறுகின்ற ஆள் எவரும், இச்சட்டத்தின் கீழ்த் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், மேல் நீதிமன்றத்தின் முன்னரான விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கும் அல்லது ஆறு மாதங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(3) பணிப்பாளர் அல்லது அலுவலர் அல்லது சேவையாள் 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க, நிதிசார் கொடுக்கல் வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி நிறுவனத்தில் ஏதேனும் ஆதனம் சட்டமுறையற்ற செயற்பாட்டிலிருந்து அடையப்பெற்றது அல்லது தேறிப்பெற்றதெனும் தமது அறிவை அல்லது நம்பிக்கையை வெளிவிடுதலானது, (1) ஆம் உட்பிரிவினால் அத்தகைய பணிப்பாளர், அலுவலர் அல்லது சேவையாளர் மீது சுமத்தப்பட்ட கடமையுடன் போதியளவு இணங்கியொழுகியமையாதல் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது வேறுவகையில் சுமத்தப்பட்டதான ஏதேனும் இரகசியம் பேணுதலுக்கான கடப்பாடு அல்லது தகவல் வெளிவிடுதல் மீதான வேறு மட்டுப்பாடு, எது எவ்வாறிருப்பினும் பயனுடையதாதல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்க, (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்கியொழுகுமாறு எவரேனும் ஆளினால் செய்யப்பட்ட வெளிவிடுகை எதுவும் அத்தகைய கடப்பாட்டின் அல்லது மட்டுப்பாட்டின் மீறல் ஒன்றாகக் கருதப்படுதலுமாகாது.

(5) இரண்டாம் உட்பிரிவின் கீழான தவறொன்றுக்கான குற்ற வழக்கொன்றில் குற்றஞ்சாட்டப்பட்டவர் தமது அறிவை அல்லது நம்பிக்கையை வெளியிடாமைக்கு அவருக்கு நியாயமான ஏதுக்கள் இருந்தன என்பதை நிகழ்தகவுச் சமநிலையில் நீதிமன்றத்துக்கு எண்பித்தலானது குற்றஞ்சாடடப்பட்டவருக்கான எதிர்க்காப்பாதல் வேண்டும்.

6. பணம் தூய்தாக்கல் தவறு புரியப்பட்டது பற்றி புலனாய்வொன்று செய்யப்பட்டுள்ளது, செய்யப்படுகின்றது அல்லது செய்யப்படவுள்ளது என அறிந்திருக்கின்றவரும் அல்லது நம்புதற்குக் காரணமுள்ளவரும் :-

(அ) இச்சட்டத்தின் கீழ் தமது கடமைகளை நிறைவேற்றுகையில் அல்லாது அந் நிகழ்வை அல்லது அத்தகைய புலனாய்வு தொடர்பான வேறு தகவலை வெளிப்படுத்துவதால் புலனாய்வு பாதிப்படையக்கூடிய சாத்தியமுள்ளதென அறிந்துகொண்டு, ஏதேனும் நீதிமன்றத்துக்கு அல்லது வேறு எவரேனும் ஆளுக்கு அதனை வெளிவிடுகின்றவரும்; அல்லது

(ஆ) இச்சட்டத்தின் கீழ் தமது கடமைகளைப் புரிகையில் அல்லாது எவ்வாளுக்கெதிராக அத்தகைய புலனாய்வு செய்யப்பட்டதோ செய்யப்படுகின்றதோ அல்லது செய்யப்படவுள்ளதோ அவ்வாளின் ஆளடையாளத்தை வெளிப்படுத்துகின்றவரும்;

(இ) அப்புலனாய்விற்கு இயைபாக இருக்கின்ற அல்லதுஇயைபாக இருக்கக்கூடிய சாத்தியங்கொண்ட ஏதேனும் ஆவணத்தை அல்லது பொருளை தெரிந்து கொண்டே பொய்புனைகின்றவரும், மறைக்கின்றவரும், அழிக்கின்றவரும் அல்லது வேறு வகையில் கையுதிர்க்கின்றவரும் அல்லது அவ்வாவணம் அல்லது பொருள் பொய்புனையப்பட, மறைக்கப்பட, அழிக்கப்பட அல்லது கையுதிர்க்கப்படச் செய்விக்கின்றவரும் அல்லது அனுமதிக்கின்றவரும்,

ஆன ஆள் எவரும், இச்சட்டத்தின்கீழ்த் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், மேல் நீதிமன்றத்தின் முன்னரான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்துக்கு அல்லது ஆறுமாத காலப்பகுதியொன்றை விஞ்சாத இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

பாகம் II

## பணம் தூய்தாக்கல் தவறு தொடர்பில் சொத்துக்களை முடக்குதலும் மற்றும் இழப்பிக்கப்படுதலும்

7.(1) எவரேனும் ஆள் பணம் தூய்தாக்கல் தவறொன்று தொடர்பில் ஏதேனும் செயற்பாட்டில் சம்மதப்பட்டிருக்கின்றார் என நம்பக்கூடிய நியாயமான ஏதுக்கள் இருக்கின்றவிடத்தும், அத்துடன் அத்தகைய தவறு தொடர்பில் மேலும் செயல்கள் புரியப்பட்டிருக்கின்றமையைத் தடுப்பதற்காக அது அவசியமாக இருக்கின்றவிடத்தும் பொலிசு அத்தியட்சகர் பதவி வரிசைக்குக் குறையாத பதவி வரிசையிலுள்ள பொலிசு அலுவலர் ஒருவர் அல்லது அத்தகைய அலுவலர் இல்லாதவிடத்து உதவிப் பொலிசு அத்தியட்சகர் ஒருவர் அத்தகைய தவறு தொடர்பாகப் பயன்படுத்தப்பட்டுள்ள அல்லது பயன்படுத்தப்பட உத்தேசிக்கப்படக்கூடியதான ஏதேனும் கணக்கு, ஆதனம் அல்லது முதலீடு தொடர்பில் எவையேனும் கொடுக்கல் வாங்கல்களைத் தடுக்கின்ற (இதனகத்துப் பின்னர் "முடக்குதற் கட்டளை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) கட்டளை ஒன்றை வழங்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் குறிப்பிடப்பட்ட முடக்குதல் கட்டளையானது -

(அ) (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள செயற்பாட்டில் தொடர்புபட்டுள்ளார் என நம்பப்பட்டுள்ளவரான ஆள்; அத்துடன்

(ஆ) அத்தகைய கட்டளைக்குப் பயன்கொடுக்குமாறு தேவைப்படுத்தப்படக் கூடியவாறான ஏதேனும் வேறு ஆள் அல்லது நிறுவனத்தின்,

மீது வழங்கப்படுதல் வேண்டும்.

(3) எட்டாம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக (1)ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட முடக்குதல் கட்டளை ஒன்று, அது ஆக்கப்பட்டதிலிருந்து ஏழு நாட்கள் கொண்ட காலப்பகுதி ஒன்றுக்கு வலுவில் இருத்தல் வேண்டும்.

(4) அவர்மீது வழங்கப்பட்ட முடக்குதல் கட்டளை ஒன்றினை மீறிச் செயலாற்றுகின்ற எவரேனும் ஆள், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், மேல் நீதிமன்றத்தின் முன்னரான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது முடக்குதற் கட்டளையை மீறிக் கையாளப்பட்டுள்ள அத்தகைய கணக்கிலுள்ள பணம், ஆதனம் அல்லது முதலீட்டின் பெறுமதியின் ஒன்றரை மடங்கு இதில் எது கூடுதலானதோ அதற்கு அல்லது ஒரு வருட காலத்தை விஞ்சாத இருவகையிலொருவகையிலான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

8. (1) ஆறாம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் முடக்குதல் கட்டளையை வழங்குகின்ற பொலிசு அலுவலர் அத்தகைய கட்டளை வலுவில் இருக்க வேண்டிய ஏழுநாட்களினுள் அத்தகைய முடக்குதற் கட்டளையின் உறுதிப்படுத்தலைக்கோரி மேல் நீதிமன்றத்திற்கு விண்ணப்பமொன்றைச் செய்தல் வேண்டும் என்பதுடன், சூழ்நிலைகள் அவ்வாறு தேவைப்படுத்தினால் ஏழு நாட்கள் ஆரம்பகாலப் பகுதியை நீடிக்குமாறும் வேண்டுகோள் விடுக்கலாம்.

(2) அத்தகைய முடக்குதற் கட்டளை ஆக்குவதற்கான போதுமான காரணங்கள் இருக்கின்றவென மேல் நீதிமன்றம் திருப்திப்படுகின்றவிடத்து, நீதிமன்றம் முடக்குதல் கட்டளையை உறுதிப்படுத்தலாம் என்பதுடன் அவசியமானதென கருதுகின்றவிடத்து எவ்வாறாயினும் விடயத்திற்கேற்ப அத்தகைய காலப்பகுதிக்கு நீடிப்புக்காக ஆக்கப்பட்ட விண்ணப்பத்தை பின்வருவதற்கமைவாக வழங்கலாம்:-

(அ) பன்னிரண்டாம் பிரிவின்கீழ் ஆக்கப்படக்கூடிய ஏதேனும் கட்டளைக்கு; அத்துடன்

(ஆ) அவ்வாறு வழங்கப்பட்ட ஏதேனும் நீடிப்பின் ஆகக் கூடிய காலப்பகுதி பொலிசு அலுவலரால் முடக்குதல் கட்டளை ஆக்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு வருடத்தை விஞ்சுதலாகாது என்ற தேவைப்பாட்டிற்கு,

ஆயின், முடக்குதற் கட்டளை எந்தக் கணக்கு, ஆதனம் அல்லது முதலீடு தொடர்பானதோ அந்தக் கணக்கு, ஆதனம் அல்லது முதலீடு தொடர்பில் பணம் தூய்தாக்குதல் தவறுக்கெனக் குற்றவழக்கொன்று கோப்பிடப்பட்டிருக்கின்றவிடத்து, அத்தகைய முடக்குதற் கட்டளையானது, பதியப்பட வேண்டிய காரணங்களுக்காக நீதிமன்றத்தினால் வறிதாக்கப்பட்டால் அன்றி, அத்தகைய தவறு தொடர்பிலான விசாரணை முடியும்வரை அல்லது அத்தகைய தவறுக்கான குற்றத் தீர்ப்புக்கெதிராக மேன்முறையீடொன்று செய்யப்படுமிடத்து, அத்தகைய மேன் முறையீடானது தீர்மானிக்கப்படும் வரையில் வலுவில் இருத்தல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் முடக்குதற் கட்டளை ஒன்றை மேல் நீதிமன்றம் உறுதிப்படுத்துகின்றவிடத்து அது அத்தகைய கட்டளை பற்றிய அறிவித்தலை சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளிவருகின்ற ஆகக் குறைந்தது ஒரு செய்தித் தாளிலாவது வெளியிடப்படச் செய்வித்தல் வேண்டும். முடக்குதற் கட்டளைக்கு உட்படுத்தப்பட்டு இருக்கக்கூடிய கணக்கு, ஆதனம் அல்லது முதலீட்டுக்குத் தங்களது உரிமைக் கோரிக்கைக்கு ஆதரவாக நீதிமன்றத்திற்கு நல்லெண்ணத்துடன் மூன்றாம் திறத்தவர்கள் விண்ணப்பத்தைச் செய்வதற்கு வசதி அளிக்குமுகமாகவே அத்தகைய கட்டளை பற்றிய அறிவித்தலானது வெளியிடப்படுகின்றது.

9. கொடுக்கல் வாங்கல் எதுவும், முடக்குதற் கட்டளை வலுவில் இருக்கின்றபொழுது அத்தகைய கணக்கு, ஆதனம் அல்லது முதலீடு தொடர்பில் செய்யப்படுதலாகாது என்பதுடன், அவ்வாறு செய்யப்பட்ட எதேனும் கொடுக்கல் வாங்கல் வெற்றும் வறிதானதுமாதல் வேண்டும்.

10. ஏழாம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட முடக்குதற் கட்டளையொன்றை உறுதிப்படுத்துவதில் மேல் நீதிமன்றமானது அத்தகைய கட்டளை ஒன்று அதனால் பாதிக்கப்பட்டுள்ள எவரேனும் ஆளின் சட்டமுறையான தொழிலை அல்லது வேறு அக்கறைகளைச் சேதப்படுத்தும் எனவும் அத்துடன் அத்தகைய முடக்குதற் கட்டளையால் தடைசெய்யப்பட்டிருக்கக் கூடியவாறான அத்தகைய கணக்கு, ஆதனம் அல்லது முதலீடு தொடர்பான அத்தியாவசியக் கொடுக்கல் வாங்கல்கள் சட்டமுறையாகக் கொண்டு நடாத்தப்படலாம் எனவும் மேல் நீதிமன்றம் அபிப்பிராயப்படின், நீதிமன்றத்தால் அதன்சார்பில் நியமிக்கப்பட்ட ஆளொருவரின் அல்லது 11ஆம் பிரிவின்கீழ் அதன்சார்பாக நியமிக்கப்பட்ட பெறுநர் ஒருவரின் மேற்பார்வைக்கு அமையவும் அவரின் பணிப்பின் கீழும் அத்தகைய கொடுக்கல் வாங்கல் கொண்டு நடாத்தப்படுவதை அனுமதிக்கின்ற கட்டளையை ஆக்கலாம்.

11. மேல் நீதிமன்றம் பொலிசு அத்தியட்சகர் பதவி வரிசைக்குக் குறையாத பதவி வரிசையிலுள்ள பொலிசு அலுவலர் ஒருவரால் அல்லது அத்தகைய அலுவலர் இல்லாதிருக்கையில் உதவிப் பொலிசு அத்தியட்சகரால் ஆக்கப்பட்ட விண்ணப்பத்தின்மீது, அதன் சார்பில் நீதிமன்றத்தினால் கொடுக்கப்படக் கூடியவாறான அத்தகைய பணிப்புரைகளுக்கு இணங்க முடக்குதற் கட்டளைக்கு உள்ளாக்கப்பட்ட கணக்கு, ஆதனம் அல்லது முதலீட்டின் உடைமையை எடுப்பதற்கும் மற்றும் அவற்றை வேறுவகையில் கையாள்வதற்கும் எனப் பெறுநர் ஒருவரை நியமிக்கலாம்.

12.(1) பொலிசு அத்தியட்சகர் பதவி வரிசைக்குக் குறையாத பதவி வரிசையிலுள்ள எவரேனும் பொலிசு அலுவலர் முடக்குதல் கட்டளையொன்றுக்கு உள்ளாக்கப்பட்ட ஏதேனும் கணக்கை, ஆதனத்தை, முதலீட்டை உடைமையில் எடுக்கலாம் மற்றும் வேறுவகையில் கையாளலாம் என்பதுடன், நீதிமன்றமானது சொல்லப்பட்ட பொலிசு அலுவலரின் விண்ணப்பத்தின் மீதும், முடக்குதல் கட்டளையானது எவ்வாதனம் சம்பந்தமானதோ அவ்வாதனத்தின் சொத்தாண்மை, உடைமை அல்லது கட்டுப்பாடு எவரிடம் உள்ளது என்பதைத் தீர்மானிக்கும் நோக்கத்திற்காகவும் -

(அ) (i) அவ்வாதனத்தை இனங்காண்பதற்கு, அது இருக்குமிடத்தைக் கண்டுபிடிப்பதற்கு அதனை அளவிடுவதற்கு;

(ii) அவ்வாதனத்தின் சொத்தாண்மையை, உடைமையை அல்லது கட்டுப்பாட்டைத் தாபிப்பதற்கு,

இயைபான ஏதேனும் ஆதனத்தை அத்தகைய பொலிசு அலுவலரிடம் உடனடியாக ஒப்படைக்குமாறு கட்டளை இடலாம்; அத்துடன்

(ஆ) நீதிமன்றம் பணிக்கக் கூடியவாறான கட்டளைத் தேதிக்கு முன்னரான அல்லது பின்னரான அத்தகைய காலப்பகுதியின்போது நிறுவனத்துடன் அத்தகைய ஆளினால் அல்லது ஆளுக்காக நடாத்தப்பட்ட ஏதேனும் வியாபாரக் கொடுக்கல் வாங்கல் பற்றி நிறுவனத்தினால் பெறப்பட்ட தகவல் யாவற்றையும் பெறுநருக்குக் கொடுத்துதவுமாறு, பெயரிடப்பட்ட நிறுவனம் ஒன்றுக்குக் கட்டளையிடலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ்க் கட்டளையொன்றை ஆக்குகின்ற நீதிமன்றம்,(1)ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளை ஒன்றுடன் எவரேனும் ஆள் இணங்கியொழுகத் தவறுகின்றார் என, அக்கட்டளை நிறைவேற்றப்படுவதில் தாமதம் காட்டுகின்றார் அல்லது நிறைவேற்றப்படுவதற்கு வேறுவகையில் முட்டுக்கட்டைபோடுகின்றார் எனத் திருப்தி அடைந்ததன்மேல், அத்தகைய கட்டளையை நிறைவேற்றும் நோக்கத்துக்காக அவ்வாளின் வளவுகள் எவற்றுக்குள்ளும் பொலிசு அலுவலர் புகுந்து வளவுகளில் தேடுதல் நடாத்தி ஏதேனும் ஆவணத்தை, பொருளை அல்லது வேறுசாமானை அகற்றிச் செல்வதற்கு அதிகாரமளிக்கின்ற கட்டளையை ஆக்குதல் வேண்டும்.

(3) முடக்குதல் கட்டளை எவ்வாதனம் தொடர்பானதோ அவ்வாதனம் எதனதும் சொத்தாண்மை, உடைமை அல்லது கட்டுப்பாடு எவரிடம் இருக்கின்றது என்பது தீர்மானிக்கப்படுவதன்மேல் பொலிசு அலுவலர் விடயத்திற்கேற்றவாறு அத்தகைய சொத்தாண்மையை, உடைமையை அல்லது கட்டுப்பாட்டைத் தாபிக்கின்ற ஆவணங்களின் ஆதாரத்தோடு அது பற்றி முடக்குதல் கட்டளையை ஆக்கி நீதிமன்றத்திற்கு அறிவித்தல் வேண்டும்.

13.(1) ஆளொருவர் பணம் தூய்தாக்கல் தவறொன்றைப் புரிந்ததற்காக அவருக்கு குற்றத் தீர்ப்பளிக்கப்படுகின்றவிடத்து, அத்தகைய ஆளிற்கு குற்றத் தீர்ப்பளிக்கின்ற நீதிமன்றம், (2)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய ஏதேனும் சட்டமுறையற்ற செயற்பாட்டில் இருந்து நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாதோ அடையப்பெற்ற அல்லது தேறிப் பெறப்பட்ட அத்தகைய ஆளினது ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் எல்லாப் பணிப்புகளிலிருந்து விடுபட்டு அரசுக்கு இழப்பிக்கப்படுதல் வேண்டும் என்ற கட்டளையை ஆக்குதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் இழப்பித்தல் கட்டளையொன்று ஆக்கப்பட வேண்டும் எனத் தீர்மானிப்பதில், நீதிமன்றமானது, அத்தகைய ஆதனத்தை பெறுமதிக்காக கொள்வனவு செய்துள்ள நல்லெண்ணக் கொள்வனவுக்காரர் ஒருவரின் உரிமைகளுக்கு அல்லது பெறுமதிக்காக அவ் ஆதனத்திலுள்ள நல்லெண்ணத்துடன் கூடிய அக்கறையொன்றைக் கொள்ளல் செய்திருக்கின்ற வேறு எவரேனும் ஆளின் உரிமைக்குப் பங்கம் விளைவிக்கக்கூடிய சாத்தியக்கூறு இருக்கின்றதா என்ற நிகழ்வைக் கருத்திற்கொள்வதற்கு உரித்துடையதாதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்று -

(அ) இழப்பித்தற் கட்டளைக்குஎதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு அல்லது உயர் நீதிமன்றத்திற்கு மேன்முறையீடொன்று செய்யப்பட்டுள்ளவிடத்து, இழப்பித்தற் கட்டளையை உறுதி செய்கின்ற அல்லது ஏற்றுக்கொள்ளுகின்ற அத்தகைய மேன்முறையீட்டின் தீர்மானத்தின்மேல்;

(ஆ) அதற்கென அனுமதிக்கப்பட்ட காலப்பகுதியினுள் இழப்பித்தற் கட்டளைக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு மேன்முறையிடு எதுவும் செய்யப்பட்டிருக்காதவிடத்து, அத்தகைய இழப்பித்தற் கட்டளைக்கு எதிராக எக்காலப் பகுதிக்குள் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு மேன்முறையீடொன்று செய்யப்படலாமோ, அக்காலப்பகுதி முடிவுற்ற பின்னர்,

பயனுக்கு வருதல் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக இழப்பித்தல் கட்டளையை ஆக்குகின்ற நீதிமன்றமானது, பணம் தூய்தாக்கல் தவறொன்றுக்குக் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட ஆளிற்குச் சொந்தமாகவுள்ள ஏதேனும் அசையும் அல்லது அசையா ஆதனம், அத்தகைய ஆளின் அறியப்பட்ட வருமான மூலங்களுக்கு ஒத்ததாகவில்லாதிருப்பின், அத்துடன் அத்தகைய ஆதனத்தை வைத்திருப்பதற்கான காரணத்தை நிகழ்தகவுச் சமநிலையின்மீது நீதிமன்றத்தின் திருப்திக்கு விளங்கப்படுத்தப்பட முடியாதிருந்தால் ஏதேனும் சட்டமுறையற்ற செயற்பாட்டில் இருந்து நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாதோ அடையப்பெற்ற அல்லது தேறிப் பெறப்பட்டதென ஊகிக்கலாம்.

14.(1) இச்சட்டத்தின் 13ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட இழப்பித்தற் கட்டளையொன்றினால் பாதிக்கப்பட்ட ஆளெவரும் அத்தகைய கட்டளை ஆக்கப்பட்டதன் விளைவாகத் தமக்கு இழப்பு ஏற்பட்டிருக்கின்றதெனக் கூறுகின்ற விண்ணப்பமொன்றை ஆக்கட்டளை ஆக்கப்பட்டதிலிருந்து முப்பது நாட்காலப் பகுதியொன்றுக்குள் இழப்பித்தல் கட்டளையை ஆக்கிய நீதிமன்றத்திற்குச் செய்யலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் இழப்பித்தற் கட்டளையை ஆக்கிய நீதிமன்றத்திற்கு விண்ணப்பமொன்று செய்யப்படுகின்றவிடத்து, நீதிமன்றமானது அதன் கட்டளையின் விளைவாக விண்ணப்பக்காரருக்கு இழப்பு ஏற்பட்டிருக்கின்றதெனத் திருப்திப்பட்டதன்மேல், இழப்பித்தல் செய்யப்பட்ட சொத்திலிருந்து அத்தகைய ஆளுக்கு நஷ்டஈடு வழங்கப்படுதல் வேண்டுமெனக் கட்டளையொன்றை ஆக்கலாம்.

15. இச்சட்டத்தின் 13ஆம் பிரிவின்கீழ் ஏதேனும் ஆதனம் அரசுக்கு இழப்பிக்கப்பட்டிருக்கின்றவிடத்து, இழப்பித்தல் கட்டளையை ஆக்குகின்ற நீதிமன்றமானது, அவ்வாறு இழப்பித்தல் செய்யப்பட்ட ஆதனத்திற்குப் பொறுப்பாகவிருப்பதற்கெனப் பெறுநர் ஒருவரை நியமிக்கலாம்.

16. இச்சட்டத்தின் இப்பாகத்தின் ஏற்பாடுகள் எழுத்திலான ஏதேனும் சட்டத்தினால அல்லது வேறுவகையில் தகவல் வெளியிடுதல்மீது சுமத்தப்பட்ட இரகசியம் பேணல் அல்லது வேறு மட்டுப்பாடு போன்ற ஏதேனும் கடப்பாடு எது எப்படியிருப்பினும் பயனுள்ளதாதல் வேண்டும். அத்துடன் அதற்கிணங்க இச் சட்டத்தின் இப்பாகத்தின் ஏற்பாடுடன் இணங்கி ஒழுகும்போது எவரேனும் ஆளினால் தரப்பட்ட தகவலின் வெளிவிடுகை எதுவும் அத்தகைய கடப்பாட்டின் அல்லது மட்டுப்பாட்டின் மீறுகையொன்றாகக் கருதப்படுதலுமாகாது.

## பாகம் III

## பொது

17. இச்சட்டத்தின் கீழான தவறு ஒன்று, 1979ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள்ளும் என்றும் அதன் நோக்கங்களுக்காகவும் பிடியாணையின்றி கைதுசெய்தகு தவறுதல் வேண்டுமென்பதுடன், பிணையில் விடமுடியாத தவறொன்றாதலும் வேண்டும்.

18. இச் சட்டத்தின் கீழ்த் தவறொன்று ஆட்கள் குழுவினால் புரியப்படுகின்றவிடத்து அவ் ஆட்கள் குழுவானது -

(அ) கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக இருக்கின்றவிடத்து, அக்கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஒவ்வொரு பணிப்பாளரும் அல்லது வேறு அலுவலரும்; அத்துடன்

(ஆ) குழுமம் ஒன்றாக இருக்கின்றவிடத்து, அக்குழுமத்தின் பங்காளர் ஒவ்வொருவரும்; அத்துடன்

(இ) குழுமம் ஒன்று அல்லாத வேறு கூட்டிணைக்கப்படாத குழுவொன்றாக இருக்குமிடத்து அத்தகைய குழுவின் உறுப்பினராக இருக்கின்ற தனியாள் ஒவ்வொருவரும் அத்துடன் அதனுடைய முகாமைத்துவம் மற்றும் கட்டுப்பாட்டிற்குப் பொறுப்புடையவரான அக்குழுவின் அலுவலர் ஒவ்வொருவரும்;

தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

ஆயின், எவ்வாறாயினும் அத்தகைய ஆளெவரும், அத்தவறானது அவரது, அறிவுக்கு எட்டாத விதத்தில் புரியப்பட்டது என அல்லது அத்தவறு புரியப்படுவதைத் தடுப்பதற்கு அவர் எல்லா முறையான விழிப்புக் கவனத்தையும் எடுத்தார் என அவர் எண்பித்தால் தவறொன்றுக்குக் குற்றவாளி எனக் கருதப்படுதலாகாது.

19. (1) துடர்ச்சி அல்லது குற்றவழக்கு எதுவும் -

(அ) நிதிசார் உளவறிதற் கூறினால் அல்லது அதன் சார்பில் செயலாற்றுவதற்கு நீதிசார் உளவறிதற் கூறினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளினால் இச்சட்டத்தின்கீழ் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கருதப்பட்ட சட்டமுறையான ஏதேனும் செயலுக்காக நிதிசார் உளவறிதற் கூறிற்கு எதிராக அல்லது அத்தகைய ஆளிற்கு எதிராக;

(ஆ) இச் சட்டத்தினால் அல்லது அதிகாரசபையின் பணிப்புரையின்மீது சுமத்தப்பட்ட ஏதேனும் கடமைகளைப் புரிகையில் அத்தகைய நிறுவகத்தினால் அல்லது பணிப்பாளரினால், அலுவலரினால் சேவையாளரினால், முகவரினால் அல்லது 3ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட எவரேனும் ஆளினால் அவரது ஊழியத்தின்போது நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கருதப்பட்ட ஏதேனும் சட்டமுறையான செயலுக்காக நிறுவனத்துக்கு பணிப்பாளருக்கு, அலுவலருக்கு, சேவையாளருக்கு, முகவருக்கு, முகவராண்மைக்கு அல்லது ஆளுக்கெதிராக;

இருத்தலாகாது.

(2) இச்சட்டத்தின் கீழ் சொல்லப்பட்ட நிதிசார் உளவறிதற் கூறினால் அல்லது அதிகாரசபையின் சார்பில் செயலாற்ற அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளினால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட ஏதேனும் அறிக்கை தொடர்பில் நிதிசார் உளவறிதற் கூறிற்கு அல்லது அத்தகைய ஆளுக்கு எதிராக ஏதேனும் நீதிமன்றத்தில் அல்லது நியாயசபையில் குடியியல் அல்லது குற்றவியல் வழக்கு நடவடிக்கைகள் எவையும் தொடுக்கப்படுதலாகாது.

(3) இச்சட்டத்தின்கீழ் சொல்லப்பட்ட நிதிசார் உளவறிதற் கூறினால் அல்லது நிதிசார் உளவறிதற்கூறின் சார்பில் செயலாற்றுவதற்கென அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரினால் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் சட்டவிரோத செயல் தொடர்பில் சொல்லப்பட்ட நிதிசார் உளவறிதற் பிரிவினால் அல்லது அதற்கு எதிராக அல்லது சொல்லப்பட்ட நிதிசார் உளவறிதற் கூறின் சார்பில் செயலாற்றுவதற்கென அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளினால் அல்லது அவருக்கு எதிராக கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சி அல்லது குற்ற வழக்கில் சொல்லப்பட்ட நிதிசார் உளவறிதற் கூறினால் உறப்பட்ட எவையேனும் செலவினங்களும் ஏதேனும் அத்தகைய துடர்ச்சி அல்லது குற்ற வழக்கில் சொல்லப்பட்ட நிதிசார் உளவறிற் கூறினால் அல்லது அத்தகைய ஆளினால் செலுத்தப்பட்ட அல்லது அறவிடப்பட்ட எவையேனும் கிரயங்கள் சொல்லப்பட்ட நிதிசார் உளவறிதற் கூறின் கணக்கில், விடயத்திற்கு ஏற்றவாறு செலுத்தப்படுதல் வேண்டும் அல்லது வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

(4) இச்சட்டத்தின்கீழ் அல்லது நிதிசார் உளவறிதற் கூறின் பணிப்பின்மீது நிறுவனமொன்றினால் அல்லது அலுவலரொருவரினால், சேவையாளரொருவரினால், முகவரொருவரினால் அல்லது ஆளொருவரினால் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பில் ஏதேனும் நீதி மன்றத்தில் அல்லது தொழில் நியாயசபையின் முன்னர் அத்தகைய நிறுவனத்தினால் அல்லது அத்தகைய அலுவலரினால் அத்தகைய சேவையாளரினால், அத்தகைய முகவரினால் அல்லது ஆளினால் அல்லது அவருக்கு எதிராக, அவற்றுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்ற வழக்கில் (1)ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட அத்தகைய நிறுவனத்தினால் அல்லது அத்தகைய அலுவலரினால், சேவையாளரினால், அத்தகைய முகவரினால் அல்லது ஆளினால் உறப்பட்ட எவையேனும் செலவினங்கள் நீதிமன்றம் அல்லது தொழில் நியாயசபை அச் செயலானது நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட செயல் எனத் தீர்த்தால், அத்தகைய செலவு அத்தகைய துடர்ச்சி அல்லது குற்ற வழக்கில் அத்தகைய நிறுவனத்தினால் அல்லது அலுவலரினால், சேவையாளரினால், முகவரினால் அல்லது ஆளினால் அறவிடப்பட்டிருந்தாலன்றி சொல்லப்படட நிதிசார் உளவறிதற் கூறினால் செலுத்தப்படுதல் வேண்டும்.

20.(1) ஆளெவரும், இச்சட்டத்தின்கீழ் ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியை பிரயோகிப்பதற்கு, புரிவதற்கு இயைபாக இருக்கின்ற அல்லது இயைபாக இருக்கக்கூடிய சாத்தியக் கூறுகொண்ட ஏதேனும் ஆவணத்தை அல்லது பொருளை அல்லது சாமானை பொய்யாகப் புனைதலோ மறைத்து வைத்தலோ, சட்டமுறையற்ற விதத்தில் அழித்தலோ அல்லது வேறு வகையில் கையுதிர்த்தலோ அல்லது பொய்யாகப் புனையச் செய்வித்தலோ, மறைத்து வைப்பித்தலோ, சட்டமுறையற்ற விதத்தில் அழிப்பித்தலோ அல்லது கையுதிர்க்கச் செய்வித்தலோ அல்லது இவற்றிற்கு அனுமதித்தலோ ஆகாது.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற ஆளெவரும் இச்சட்டத்தின் கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், மேல் நீதிமன்றத்தின் முன்னரான விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றிற்கு அல்லது ஓராண்டை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கான இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

21. (1) ஆளெவரும் -

(அ) இச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையை நிறைவேற்றுவதற்கு இயைபானதாக இருக்கின்ற அல்லது இயைபானதாக இருக்கக் கூடிய சாத்தியமுள்ள ஏதேனும் ஆவணத்தை அல்லது பொருளை அல்லது சாமானை பொய்யாகப் புனைதலோ, மறைத்து வைத்தலோ, அழித்தலோ அல்லது வேறு வகையில் கையுதிர்த்தலோ அல்லது இவை பொய்யாகப் புனையப்படுதலோ, மறைத்துவைத்திருக்கப்படுதலோ, அழிக்கப்படுதலை அல்லது கையுதிர்க்கப்படுதலை செய்வித்தலோ அல்லது அனுமதித்தலோ ஆகாது.

(ஆ) பணம் தூய்தாக்கல் தவறொன்று தொடர்பிலான அல்லது வெளிநாடொனதும் சட்டத்தின் கீழ்ப்பணம் தூய்தாக்கல் தவறொன்றுக்கு நேரொத்த தவறொன்று தொடர்பிலான புலனாய்வொன்று நடைபெற்றுக்கொண்டிருக்கிறது அல்லது நடைபெறவிருக்கிறது என்பது பற்றிய தகவலை வெளியாக்குதலாகாது;அல்லது வேறு ஏதேனும் தகவலை இன்னோர் ஆளுக்கு வெளிவிடுவதால் அத்தகைய புலனாய்விற்குப் பங்கம் ஏற்படக்கூடிய சாத்தியக்கூறு இருக்கின்ற அத்தகைய வேறேதேனும் தகவலை வெளியாக்குதலாகாது.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற ஆளெவரும் இச்சட்டத்தின் கீழ்த் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் மேல் நீதிமன்றத்தின் முன்னரான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணத்துக்கு அல்லது ஓராண்டை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கான இருவகையில் ஒருவகை மறியற்றண்டனைக்கு அல்லது குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

22. நீதி அமைச்சருடனான கலந்தாலோசனையுடன் அமைச்சர், சர்வதேச ஒழுங்கொன்று அவ்வாறு தேவைப்படுத்தப்படுகின்றது அல்லது அனுமதிக்கின்றது என்பதற்காக அல்லது அனைத்து நாட்டுச் சட்ட ஒப்புரவுப் பண்பின் காரணமாக உகந்ததெனக் கருதினால் அவர், இச்சட்டத்தின் இப்பாகத்தின் ஏற்பாடுகளின் கீழ் இழப்பிக்கப்பட்ட ஏதேனும் சொத்து முழுவதையும் அல்லது அதன் பாகம் எதனையும் அல்லது அதன் பெறுமதியை வேண்டுகோள் விடுக்கும் நாட்டுக்கு வழங்குதல் வேண்டும் அல்லது அனுப்புதல் வேண்டும் எனக் கட்டளை இடலாம்.

23. நிதி நிறுவனமொன்றில் அலுவலர் அல்லது சேவையாளர் எவரும், ஏதேனும் ஆதனம் சட்டவிரோத செயற்பாட்டின் மூலம் அடையப் பெற்றது அல்லது தேறிப் பெறப்பட்டது என்ற தமது அறிவை அல்லது நம்பிக்கையை இதன் முன்னர் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு வெளிவிடுகின்றவிடத்து, அத்தகைய ஆதனத்தின் சொந்தக்காரருடன் அத்தகைய நிறுவனத்தால், அலுவலரால், அல்லது சேவையாளரால் செய்யப்பட்ட ஏதேனும் அடுத்துப் பின்னரான கையாளுகையானது, இச் சட்டத்தின் கீழான தவறொன்றுக்கு, அத்தகைய நிறுவனம், அலுவலர் அல்லது சேவையாளர் உதவியாக அல்லது உடந்தையாக இருந்தார் என்ற தவறை உருவாக்குவதாகக் கருதப்படுதலாகாது.

## பாகம் IV

## பணம் தூய்தாக்கல் தவறு தொடர்பில் ஒப்படைத்தல் மற்றும் பரஸ்பர உதவி தொடர்பான ஏற்பாடுகள்

24. 1977ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க, மீள ஒப்படைத்தல் சட்டத்துக்கான அட்டவணை, அதன் "ஆ" என்னும் பாகத்திற்கு உடன் முன்னர் பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.:-

"(47) 2006ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க, பணம் தூய்தாக்கல் தடைச் சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட்ட பணம் தூய்தாக்கல் தவறொன்று."

25. 1977ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க, மீள ஒப்படைத்தல் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது எது எப்படியிருப்பினும், இச் சட்டத்தின் நியதிகளின்படியான தவறொன்று, அச் சட்டத்தின் கீழான மீள ஒப்படைத்தல் நோக்கங்களுக்காக மட்டும் வருமானம் பற்றிய தவறொன்று அல்லது அரசியல் தன்மையிலான தவறொன்று அல்லது அரசியல் தவறொன்றுடன் தொடர்புபட்ட தவறொன்று அல்லது அரசியல் நோக்கத்தால் தூண்டப்பட்ட தவறொன்று ஆகவிராது எனக் கருதப்படுதல் வேண்டும்.

26. இச் சட்டத்தின் கீழான தவறொன்றிற்காகக் குற்றஞ்சாட்டப்பட்ட அல்லது குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட எவரேனும் ஆளின் மீளவொப்படைத்தலுக்காக வேறொரு நாட்டின் அரசாங்கத்தினால் அல்லது அரசாங்கத்தின் சார்பில் இலங்கை அரசாங்கத்திற்கு வேண்டுகோள் ஒன்று விடுக்கப்படுகின்றவிடத்து, அமைச்சர், இலங்கை அரசாங்கத்தின் சார்பில் அவ்வாளின் குற்ற வழக்குத் தொடுப்பிற்காக அல்லது மீள் ஒப்படைத்தலுக்காக இலங்கை அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கை அல்லது எடுக்க உத்தேசித்துள்ள நடவடிக்கை பற்றி வேண்டுகோள் விடுக்கும் அரசின் அரசாங்கத்திற்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

27. (1) 2002ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க, குற்றவியல் கருமங்களிலான பரஸ்பர உதவிச் சட்டத்தின் ஏற்பாடுகள், இச் சட்டத்தின் 2ஆம் பிரிவின் கீழான தவறொன்றிற்கான புலனாய்வு மற்றும் குற்ற வழக்குத் தொடுத்தல் எந்த இடங்களில் அவசியமாக இருக்கின்றதோ அந்த இடங்களில் எல்லாம் இலங்கை அரசாங்கத்திற்கும் மற்றும் ஒன்றில் மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 2ஆம் பிரிவின் கீழான கட்டளையினால் குறித்துரைக்கப்பட்ட பொதுநலவாய நாடுகளாக இருக்கின்ற வேறு அரசுகளுக்கும் அல்லது எந்தப் பொதுநலவாயமற்ற நாடுகளுடன் இலங்கை அரசாங்கம் மேற் சொல்லப்பட்ட சட்டத்தின் நியதிகளின்படி உடன்படிக்கை ஒன்றைச் செய்துள்ளதோ அந்த அரசாங்கத்திற்கும் இடையில் உதவிகளை வழங்குவது தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(2) இரண்டாம் பிரிவின் கீழான கட்டளையினால் அமைச்சரினால் குறித்துரைக்கப்பட்ட சமவாய நாடொன்றுக்காகவோ அல்லது மேற்கூறப்பட்ட சட்டத்தின் நியதிகளின்படி இலங்கை அரசாங்கம் எந்தச் சமவாயமற்ற நாடொன்றுடன் உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொண்டுள்ளதோ அந்தச் சமவாயமற்ற நாடொன்றாகவோ அல்லாத நாடொன்றின் விடயத்தில், 3ஆம் பிரிவின் கீழான தவறொன்றின் புலனாய்வுக்கும் வழக்குத் தொடுத்தலுக்கும் அவசியமாகக் கூடியவாறு ஐக்கிய நாடுகள் சமவாயத்தின் கீழ் அதன் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்குத் தேவைப்படும் அளவிற்கு அத்தகைய எல்லா உதவியையும் வழங்குவது அரசாங்கத்தின் கடமையாகும் என்பதுடன் அத்தகைய நாடொன்றிடமிருந்து அத்தகைய எல்லா உதவியையும் (சாட்சியத்தையும் வாக்கு மூலங்களையும் எடுத்தல், மன்றாணையை சேர்ப்பித்தல் அத்துடன் தேடுகைகளை நடாத்துதல் என்பன தொடர்பான உதவி உட்பட) அமைச்சருடாகக் கோரலாம்.

(3) அத்தகைய நாடொன்றுக்கான உதவி வழங்குதலானது அமைச்சர் கருதுகின்றவாறான அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைந்ததாகச் செய்யப்படலாம்.

28.(1) இச்சட்டத்தின் கீழான தவறொன்றுக்கு இலங்கைப் பிரசை ஒரவரல்லாத ஆளொருவர் கைதுசெய்யப்படுகின்றவிடத்து, அவர் எந்த நாட்டைச் சேர்ந்த ஒருவராக இருக்கின்றாரோ அந்த நாட்டின், மிக அண்மையிலுள்ள தோதான பிரதிநிதியுடன் அல்லது அவர் நாடற்ற ஒருவராக இருந்தால் அவர் வழமையாக வதிகின்ற நாட்டின், மிக அண்மையிலுள்ள பிரதிநிதியுடன் தாமதமின்றித் தொடர்புகொள்வதற்கு அத்தகைய ஆள் உரித்துடையவராதல் வேண்டும்.

(2) இருபத்தியாறாம் பிரிவின் கீழான வேண்டுகோளொன்று 27ஆம் பிரிவின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகத் தவறுகின்ற காரணத்தினால் ஏதேனும் சட்ட நடவடிக்கைகளின் நோக்கங்களுக்காகச் செல்லுபடியற்றதாக்கப்பட்டதெனக் கருதப்படுதலாகாது. ஆயினும், நீதிசார் உளவறிதற் கூறானது வேண்டுகோளை முறையாக நிறைவேற்றுவதனை இயலச் செய்வதற்கென அவ் ஏற்பாடுகள் போதுமானளவு இணங்கியொழுகப்பட்டுள்ளதெனத் திருப்திப்பட்டிருத்தல் வேண்டும்.

29.(1) ஆளொருவர் பணம் தூய்தாக்கல் தவறொன்றுக்காக கைதுசெய்யப்படுகின்றவிடத்து, இச் சட்டத்தின் நிருவாகம் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சர், அத்தகைய ஆள் தொடர்பில் 26ஆம் பிரிவின்கீழ் அவ்வாளுக்கெதிராகக் குற்றவழக்குத் தொடுப்பதற்கு அல்லது அவ்வாளை மீள ஒப்படைப்பதற்கு இலங்கை அரசாங்கம் எடுத்திருக்கின்ற அல்லது எடுக்க உத்தேசித்திருக்கின்ற நடவடிக்கைகள் பற்றி அறிவிக்குமாறு எந்த அரசு வேண்டுகோளொன்றைச் செய்திருக்கின்றதோ அவ்வரசின் இயைபான அதிகாரிகளுக்கு, அறிவிக்குமாறு வெளிநாட்டலுவல்கள் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரைக் கோருதல் வேண்டும்.

(2) பணம் தூய்தாக்கல் தவறொன்றுக்கு நேரொத்த தவறொன்று தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள அல்லது குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டிருக்கின் எவரேனும் ஆளை மீள ஒப்படைப்பதற்கு என ஏதேனும் அரசின் அரசாங்கத்தினால் அல்லது அரசாங்கத்தின் சார்பில் இலங்கை அரசாங்கத்திற்கு வேண்டுகோளொன்று செய்யப்படுகின்றவிடத்து, வெளிநாட்டலுவல்கள் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர், அவ்வாளுக்கெதிராகக் குற்றவழக்குத் தொடுப்பதற்கு அல்லது அவ்வாளை மீள ஒப்படைப்பதற்கு இலங்கை அரசாங்கம் எடுத்திருக்கின்ற அல்லது எடுக்க உத்தேசித்திருக்கின்ற நடவடிக்கைகள் பற்றி, இலங்கை அரசாங்கத்தின் சார்பில், வேண்டுகோள் விடுக்கின்ற அரசின் அரசாங்கத்துக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

(3) ஏதேனும் நாட்டின் அரசாங்கத்தினால் ஆளெவரையும் ஒப்படைப்பதற்கெனச் செய்யப்பட்ட வேண்டுகோளொன்றைப் பின்பற்றி, பணம் தூய்தாக்கல் தவறொன்றை நேரொத்ததான தவறொன்றுக்குக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள அல்லது குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ள ஆளெவரையும் மீள ஒப்படைப்பதற்காக 1977ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க, மீள ஒப்படைத்தல் சட்டத்தின்கீழ்க் கட்டளையெதுவும் ஆக்கப்படுதலாகாதென முடிவு செய்யப்படுகின்றவிடத்து, இலங்கைச் சட்டத்தின்கீழ்த் தவறுக்கான குற்ற வழக்கு தொடுப்பது பற்றி அல்லது வேறு ஏதேனும் தோதான நடவடிக்கை எடுப்பது பற்றிப் பரிசீலனை செய்வதற்காக வழக்கானது சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகளிடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

30.(1) இருபத்தேழாம் பிரிவின்கீழ் உதவிக்காகச் செய்யப்படும் வேண்டுகோளொன்று -

(அ) பணம் தூய்தாக்கல் தவறொன்றுக்கு நேரொத்த தவறொன்று தொடர்பில் அத்தகைய தவறொன்றுக்காக வேண்டுகோள் விடுக்கும் அரசின் சட்டத்தின்கீழ் ஒன்றில் புலனாய்வொன்று அல்லது வழக்கு நடவடிக்கையொன்று நடாத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது என்று அல்லது ஆளொருவருக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டிருக்கின்றது என்று உறுதி செய்தல் வேண்டும்;

(ஆ) அத்தகைய தவறுக்காக, எந்த ஏதுக்கள் மீது எவரேனும் ஆள் புலனாய்வு செய்யப்படுகின்றாரோ அல்லது அவருக்கு எதிராகக் குற்ற வழக்குத் தொடுக்கப்பட்டிருக்கின்றதோ அவ் ஏதுக்களைக் கூறுதல் வேண்டும். அல்லது அத்தகைய ஆளின் குற்றத்தீர்ப்புப் பற்றிய விபரங்களைக் கொடுத்தல் வேண்டும்;

(இ) வேண்டுகோளில் குறிப்பீடு செய்யப்பட்ட எவரேனும் ஆளை அடையாளம் காண்பதற்குப் போதுமான விபரங்களைக் கொடுத்தல் வேண்டும்;

(ஈ) பந்தி(அ)வில் குறிப்பீடு செய்யப்பட்ட புலனாய்விற்கு அல்லது குற்றவழக்குத் தொடுப்பிற்கு இயைபான தகவலை, ஆவணங்களை அல்லது பொருட்களை அல்லது சாமான்களை வைத்திருக்கின்றார் என நம்பப்படும் நிறுவனத்தை அல்லது வேறு ஆளை அடையாளம் காண்பதற்குப் போதுமான விபரங்களைக் கொடுத்தல் வேண்டும்.

(உ) எவ்வதிகாரசபைக்கு வேண்டுகோள் முகவர் இடப்படுகின்றதோ அவ்வதிகாரசபையை (ஈ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள நிறுவனத்திடமிருந்து அல்லது வேறு ஆளிடமிருந்து (ஈ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டிருக்கும் தகவல், ஆவணங்கள் அல்லது பொருள் அல்லது சாமான் எல்லாவற்றையும் அல்லது அவற்றில் எவற்றையும் பெற்றுத் தருமாறு வேண்டுகோள் விடுத்தல் வேண்டும்;

(ஊ) வேண்டுகோளைத் தொடர்ந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல், ஆவணம் பொருள் அல்லது சாமான் எதுவும் எம்முறையில் மற்றும் எந்த ஆளுக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டுமோ அந்த முறையையும் மற்றும் அந்த ஆளையும் குறித்துரைத்தல் வேண்டும்;

(எ) முடக்கிவைத்தல் கட்டளையொன்று அல்லது இழப்பித்தற் கட்டளை ஒன்று தேவைப்படுகிறதா அல்லது தேவைப்படவில்லையா என்பதைக் கூறுதல் வேண்டும்;

(ஏ) வேண்டுகோளை நிறைவேற்றுவதற்கு உதவக்கூடியவாறான அத்தகைய வேறு தகவலைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) நிதிசார் உளவறிதற்கூறு இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க ஆக்கப்பட்ட கட்டளையைப் பின்பற்றி நிதிசார் உளவறிதற் கூறினால் கைப்பற்றப்பட்ட அல்லது நிதிசார் உளவறிதற் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்ட அதன் முன்வைக்கப்பட்ட ஏதேனும் தகவலை, ஆவணத்தை, பொருளை, அல்லது சாமானை இப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆளிற்கு அனுப்பி வைக்கச் செய்வித்தல் வேண்டும்.

31. இலங்கை அரசாங்கத்திற்கும் வேறு ஏதேனும் நாட்டின் அரசாங்கத்திற்குமிடையில் ஆளை மீள ஒப்படைப்புச் செய்வதற்கான ஒழுங்கொன்று வலுவில் இருக்கின்றவிடத்து, அத்தகைய ஒழுங்கானது, 1977ஆம் ஆண்டின், 8ஆம் இலக்க, மீள் ஒப்படைத்தல் சட்டத்தின் நோக்கங்களுக்காக இச் சட்டத்தில் வரைவிலக்கணம் கூறப்பட்டுள்ளவாறான பணம் தூய்தாக்கல் தவறு தொடர்பில் மற்றும் அத்தகைய தவறைப் புரிவதற்கு எத்தனித்தல் அல்லது சதி செய்தல் தவறு தொடர்பில், அத்துடன் அத்தகைய தவறு புரியப்படுவதற்கு உதவியாகவும் உடந்தையாகவும் இருந்த தவறு தொடர்பில் ஒப்படைப்பதற்கான ஏற்பாட்டை உள்ளடக்குவதாகக் கருதப்படுதல் வேண்டும்.

32. பணம் தூய்தாக்குதல் தவறொன்றுக்கு நேரொத்த தவறொன்று தொடர்பில் வேறு அரசின் சட்டத்தின்கீழ் எவரேனும் ஆளுக்கு எதிராக அந்நாட்டில் தொடுக்கப்பட்ட குற்றவியல் வழக்கு நடவடிக்கைகள் தொடர்பில் அவசியமாகக் கூடியவாறான அத்தகைய உதவியை (அதன் வசமுள்ள ஏதேனும் இயைபான சான்றை வழங்குதல் உட்பட) ஏதேனும் வெளிநாட்டு அரசின் இயைபான அதிகாரிகளுக்கு அரசாங்கம் வழங்குதல் வேண்டும்.

33. (1) அமைச்சரானவர் இச் சட்டத்தின் கீழ் ஆக்கப்படுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட அல்லது தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் விடயத்திற்காகவும் அல்லது, இச் சட்டத்தின் கோட்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காகவும் மற்றும் அதன் ஏற்பாடுகளுக்குப் பயனளிக்கும் நோக்கத்திற்காகவும் இச்சட்டத்தின்கீழ் ஒழுங்கு விதிகளை ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்படுத்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது ஒழுங்கு விதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்குவிதியும், அது வர்த்தமானியில் வெளியிடப்பட்டதன் பின்னர் வசதியான விரைவாக அங்கீகாரத்துக்கெனப் பாராளுமன்றத்தின் முன்னர் கொண்டுவரப்பட வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒவ்வோர் ஒழுங்குவிதியும் அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, ஒழிக்கப்பட்டு விட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) ஏதேனும் ஒழுங்குவிதி அவ்வாறு ஒழிக்கப்பட்டு விட்டதாகக் கருதப்படும் தேதி பற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

34. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

35. இச் சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலன்றி -

"பெயர் குறிப்பிடப்பட்ட நிதிசாராத் தொழில்" என்பது பின்வருவனவற்றை உள்ளடக்கும் :-

(அ) தனிப்பட்ட மற்றும் கூட்டு முதலீடுகளின் முகாமைத்துவம்;

(ஆ) வேறு ஆட்களின் சார்பில் நிதியங்களை அல்லது பணத்தை முதலீடு செய்தலும், நிர்வகித்தலும் அல்லது முகாமை செய்தலும் ;

(இ) வேறு ஆட்களின் சார்பில் காசை அல்லது திரவப் பிணையங்களை காப்பாக வைத்திருத்தலும் நிர்வகித்தலும்;

(ஈ) கட்டுக்காப்பில் வைத்திருக்கும் சேவைகள்;

(உ) காப்புறுதியினைப் பொறுப்பேற்றலும் நிலைப்படுத்தலும், அத்தோடு முகவர்களினாலும் தரகர்களினாலும் காப்புறுதி இடைத்தரகு;

(ஊ) நம்பிக்கைப் பொறுப்பாளர் நிர்வாகம் அல்லது முதலீட்டு முகாமைத்துவம் அல்லது ஓய்வூதியத் திட்டமொன்று;

(எ) விதித்துரைக்கப்பட்ட அளவிற்கு சமமாக அல்லது அதற்கு மேற்பட்ட நிதிசார் வாங்கல்களால் அவர்களின் வாடிக்கையாளர்களால் இணையத் தளத்தினூடாக ஈடுபடுவதனூடாக அத்தகைய ஒரு தொழிலைச் செய்கின்ற ஆளொருவர் உள்ளடங்கலாக, கசினோஸ், சூதாட்ட விடுதிகள் அல்லது லொத்தர் ஒன்றினை நடாத்துதல்;

(ஏ) அசைவற்ற ஆதனமுகவர், அசைவற்ற ஆதனங்களை வாங்குதல், விற்றல் தொடர்பில் தமது வாடிக்கையாளருக்காகக் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடுகின்றமை;

(ஐ) விலையுயர்ந்த உலோகங்களின் வணிகர்கள் அத்துடன் விலையுயர்ந்த மற்றும் அல்லது விலையிளக்கக்கற்களின் வணிகர்கள் 1993ஆம் ஆண்டின் 50ஆம் இலக்க மாணிக்கக்கல் மற்றும் ஆபரணங்கள் சட்டத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட உலோகங்கள் மற்றும் கற்கள் உட்பட, ஆனால் அதற்கு மட்டுப்பாடின்றி அவர்கள் விதித்துரைக்கப்பட்டிருந்த தொகைக்குச் சமமாக அல்லது அதற்கு மேலாக வாடிக்கையாளர் ஒருவருடன் காசுக் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுகின்றமை;

(ஒ) பின்வரும் ஏதேனும் நடவடிக்கைகள் தொடர்பில் தமது வாடிக்கையாளர்களுக்காக சட்டத்தரணிகள் நொத்தாரிசுமார் வேறு சுயாதீனச் சட்ட உயர் தொழில்களை மற்றும் கணக்காளர்கள் அவர்களது வாடிக்கையாளர்களுக்கு கொடுக்கல் வாங்கல்களை தயாரிக்கின்றபோது, கொண்டு நடாத்துகின்றமை;

(i) அசைவற்ற சொத்துக் கொள்வனவும் விற்பனவும்;

(ii) வாடிக்கையாளரின் பணம், பிணையங்கள் அல்லது வேறு சொத்துக்கள் என்பனவற்றை முகாமை செய்தல்;

(iii) வங்கிசேமிப்பு அல்லது பிணையக் கணக்குகள் என்பவற்றை முகாமை செய்தல்;

(iv) கம்பனிகளின் செயற்படுத்துதல் அல்லது முகாமைத்துவம் என்பவற்றுக்கான உதவுதொகைகள் நிறுவனம்; அத்துடன்

(v) சட்ட ஆட்களின் உருவாக்கம், செயற்படுத்துதல் அல்லது முகாமைத்துவம் அல்லது தொழிற்தாபனங்களின் கொள்வனவு மற்றும் விற்பனை என்பனவற்றை ஏற்பாடு செய்தலும் மற்றும் அவற்றின் கொள்வனவும் விற்பனையும்;

(ஞ) மூன்றாம் திறத்தவருக்குப் பின்வரும் சேவைகளில் ஒன்றை அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவற்றை ஏற்பாடுசெய்கின்ற தொழிலான ஒரு நம்பிக்கைப் பொறுப்பு அல்லது இந்த வரைவிலக்கணத்தால் வேறுவகையில் மேவப்பட்டதல்லாத கம்பெனிசேவை வழங்குநர்;

(i) சட்டவாட்களின் உருவாக்கம் அல்லது முகாமைத்துவம்;

(ii) பணிப்பாளர் ஒருவர் அல்லது கம்பெனியின் செயலாளர், பங்காளர் ஒருவர் அல்லது பங்குடைமை ஒன்று அல்லது வேலை சட்ட ஆட்கள் தொடர்பில் அதே பதவி நிலை ஒன்றாகச் செயலாற்றுதல் அல்லது வேறொரு ஆள் அவ்வாறு செயற்படுவதற்கு ஏற்பாடு செய்தல்;

(iii) கம்பெனி, பங்குடைமை ஒன்றுக்கான அல்லது வேறு எவரேனும் சட்ட ஆள் அல்லது ஒழுங்குகளுக்கான பதிவுசெய்யப்பட்ட அலுவலகம், தொழில் முகவரி அல்லது இடவசதி, கடிதத் தொடர்பு அல்லது நிர்வாகம் முகவரி என்பவற்றை ஏற்பாடு செய்தல்;

(iv) வெளிப்படையான நம்பிக்கைப் பொறுப்பொன்றின் நம்பிக்கைப் பொறுப்பாளராகச் செயற்படுகின்றமை அல்லது நம்பிக்கைப் பொறுப்பாளராகச் செயற்படுவதற்கு வேறு ஆளை ஒழுங்கு செய்கின்றமை;

(v) வேறு ஆளுக்காகப் பங்குதாரர் நியமத்தர் ஒருவராகச் செயற்படுதல் அல்லது அவ்வாறு செயற்படுவதற்கு வேறு ஆளை ஒழுங்குப்படுத்தல்;

(ஔ) வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தில், கரைகடந்த தொழில் என்னும் சொல்லுக்கு வழங்கப்பட்ட அதே வரைவிலக்கணத்திற்கு இணங்க கரைகடந்த தொழில்; அத்துடன்

(க) தேசிய பொருளாதாரத்தின் நலனைக் கருத்திற் கொண்டு அமைச்சரினால் காலத்திற்குக் காலம் விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய வேறு தொழில்;

நிதிசார் உளவறிதற்கூறு (நி.உ.கூ)என்பது 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க, நிதிசார் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடற் சட்டத்தின் ஆம் பிரிவின் கீழ்த் தாபிக்கப்பட்ட நிதிசார் உளவறிதற்கூறு எனப் பொருள்படும்.

“நிதித்தொழில்” என்பது (பின்வரும் தொழில்களில் அல்லது செயற்பாடுகளில் ஏதேனும் ஒன்றை உள்ளடக்கும்:-

(அ) பொது மக்களிடமிருந்து வைப்புக்களை அல்லது வேறு மீளச் செலுத்தப்படற்பாலதான நிதியங்களை ஏற்றுக் கொள்ளுதலை உள்ளடங்கலாக 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க, வங்கித் தொழில் சட்டத்தில் வரையறுக்கப்பட்டவாறான வங்கித் தொழில்;

(ஆ) (சட்டத்தின் கீழ்ப்பதிவு செய்யப்பட்டிருப்பினும் சரி அல்லது உரிமமளிக்கப்பட்டிருப்பினும்சரி) 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க, நிதிக் கம்பெனிகள் சட்டத்தில் வரையறுக்கப்பட்டதான நிதித் தொழில்;

(இ) பாவனையாளர் கடன், ஈட்டுக்கடன் காரணியப்படுத்தல் உதவிகளுடனோ அல்லது உதவிகள் இன்றியோ அத்துடன் வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்களுக்கு நிதியளித்தல்;

(ஈ) பாவனையாளர் உற்பத்திப் பொருட்கள் தொடர்பான கொடுக்கல் வாங்கல் அல்லாத வேறு நிதிசார் குத்தகை;

(உ) பணத்தை அல்லது பெறுமதியைக் கைமாற்றுதல்;

(ஊ) பணம் மற்றும் நாணய மாற்றல் சேவைகள்;

(எ) கொடுப்பனவு வழிகளை வழங்குதலும் முகாமை செய்தலும் (அதாவது, கடன் அட்டைகள், பயணிகள் காசோலைகள் காசுக் கட்டளைகள் அத்துடன் வங்கியாளர் உண்டியல்கள் அத்துடன் இலத்திரனியல் பணம்);

(ஏ) பாவனையாளர் கடன்கள், உதவிகளுடன் அல்லது உதவிக் காரணியப்படுத்தல் மற்றும் இழப்பித்தல்கள் உட்பட வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்களுக்கு நிதியளித்தல் உள்ளடங்கலாக ஆனால் இதற்குள் மட்டும் மட்டுப்படுத்தப்படாத நிதிசார் உத்தரவாதங்களையும் நம்பிக்கைப் பொறுப்புக்களையும் வழங்கல்;

(ஐ) தனது சொந்தக் கணக்கிற்காக அல்லது வாடிக்கையாளர்களின் கணக்கிற்காக, பணச்சந்தை சாதனங்களில் (அதாவது காசோலைகள், நாணயமாற்று உண்டியல்கள், வைப்புச் சான்றிதழ்கள் மற்றும் வரும்படிகள்) வெளிநாட்டு நாணயமாற்றம், பரிவர்த்தனை, வட்டிவீதம், குறியீட்டு சாதனங்கள், எதிர்நோக்கப்படும் பயன்பாட்டுப் பொருட்கள், கைமாற்றத்தகு பிணையங்களின் வியாபாரம்;

(ஒ) வியாபாரம் கைமாற்றப்படக்கூடிய பிணையங்கள் என்பவற்றில் வியாபாரம் செய்தல் பிணையங்கள் வழங்குதல்களில் பங்குகொள்ளுதலும் அத்தகைய வழங்குதல்கள் தொடர்பில் நிதிசார் சேவைகளின் ஏற்பாடுகள்; அத்துடன்

(ஓ) தேசிய பொருளாதார நலன்களை கருத்திற் கொண்டு காலத்திற்குக்காலம் அமைச்சரினால் விதித்துரைக்கப் படக்கூடியவாறான அத்தகைய வேறு தொழில்;

"நிறுவனம்" என்பது இச்சட்டத்தின் கருத்தெல்லைக்குள் ஏதேனும் நிதித் தொழிலில் அல்லது பெயர் குறிப்பிடப்பட்ட நிதிசாராத் தொழிலில் ஈடுபட்டுள்ள அல்லது அதனை நிறைவேற்றிக் கொண்டிருக்கின்ற எவரேனும் ஆள் அல்லது ஆட்கள் குழு என்று பொருள்படும்;

"கரைகடந்தகூறு" என்பது கரைகடந்த வங்கித் தொழிலைக் கையாளுகின்ற, 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க, வங்கித் தொழில் சட்டத்தின் பாகம் iv இன் ஏற்பாடுகளுக்கமைய வங்கித் தொழிலைக் கொண்டுநடாத்தும் உரிமம்பெற்ற வங்கியொன்றின் அல்லது உரிமம் பெற்ற விசேட வங்கியொன்றின் கூறு ஒன்று அல்லது திணைக்களம் ஒன்று என்றுபொருள்படும்;

"ஆள்" என்பது ஆட்களின் குழுவொன்றை உள்ளடக்கும்;

"ஆதனம்" என்பது ஏதேனும் நாணயம் என்று பொருளாவதுடன், பருப்பொருளாயினுஞ்சரி பருப்பொருளற்றதாயினுஞ்சரி, அசையும் அல்லது அசையாத அருவமான அல்லது உருவமான, இலங்கையில் இருப்பினும்சரி அல்லது வேறெங்காயினும் இருப்பினும்சரி எவ்வகையினதுமான ஏதேனும் சொத்தை உள்ளடக்கும் என்பதுடன், வங்கி.வரவுகள், பயணிகள் காசோலைகள், வங்கிக் காசோலைகள், காசுக்கட்டளைகள், பங்குகள், பிணையங்கள், பிணைப்பத்திரங்கள், நாணய உறுதிப்பத்திரங்கள் உள்ளடங்கலாக, ஆயின் இவற்றுக்கு மட்டுப்படுத்தப்படாது. இலத்திரனியல் அல்லது எண்கள் வடிவம் உட்பட எத்தகையனவுமான சட்ட ஆவணங்கள் அல்லது சாதனங்கள் அல்லது அத்தகைய சொத்திலுள்ள அக்கறை என்று பொருளாவதுடன் மற்றும் அத்தகைய ஏதேனும் ஆதனத்திலுள்ள ஏதேனும் சட்டரீதியான அல்லது ஒப்புரவான அக்கறையையும் உள்ளடக்கும்;

"கொடுக்கல் வாங்கல்" என்பது நிதித்தொழில் அல்லது பெயர் குறிப்பிடப்பட்ட நிதிசாராத் தொழிலுடன் தொடர்புபட்ட ஏதேனும் செயற்பாடு எனப் பொருள்படும்;

"ஆதனம்" தொடர்பிலான "கொடுக்கல் வாங்கல்" பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது:-

(அ) ஒரு கொள்வனவு, விற்பனை, கடன், விதிப்பனவு, ஈடு, சோந்தை, அடமானம், கைமாறல், விநியோகம், ஒதுக்கீடு, சாட்டுதல், கொடை, நன்கொடை, நம்பிக்கைப்பொறுப்பொன்றை உருவாக்குதல், கொடுப்பனவு, ஏதேனும் பொருளின் வைப்பு உட்பட ஏதேனும் வைப்பு, மீளப்பெறல், சொத்துக்களிடையிலான மாற்றுதல், கடன்நீடித்தல்;

(ஆ) எவரேனும் முகவராண்மை அல்லது அற்றோனித்தத்துவத்தை வழங்குதல்;

(இ) எந்த வடிவிலாயினுஞ்சரி அல்லது எந்த விவரத்திணதாயினும், அல்லது தன்மையினதாயினும்சரி, எவ்வாறு விபரணப்படுத்தப்படினும்சரி அது எவரேனும் ஆளின்மேல் ஏதேனும் உரிமையை, உரித்தை அக்கறையை அல்லது சிறப்புரிமையை தற்போதுள்ளதாயினுஞ்சரி அல்லது எதிர்காலத்திலாயினுஞ்சரி அல்லது அத்தகைய ஆதனத்தின் முழுமைக்குமோ அல்லது ஏதேனும் பாகத்திற்குமோ சரி உரித்தாக்கினாலும்சரி அல்லது எதிர்காலத்தில் உரித்தாக்கினாலுஞ்சரி அளிக்கின்றதான ஆதனத்தின் ஏதேனும் வேறு கையாளுகை அல்லது கையுதிர்ப்பு.

"சட்டமுறையற்ற செயற்பாடு" என்பது பின்வரும் சட்டங்களின் கீழ் தவறு ஒன்றை உருவாக்குகின்ற ஏதேனும் செயல் எனப்பொருள்படும் :-

(அ) (அத்தியாயம் 218) நச்சுப்பொருள், அபின் மற்றும் அபாயகரமான ஔடதங்கள் கட்டளைச் சட்டம்;

(ஆ) பயங்கரவாத தடுப்பு மற்றும் ஒடுக்குதல் தொடர்பாக அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் சட்டம் அல்லது ஒழுங்குவிதி ;

(இ) (அத்தியாயம் 26) இலஞ்சச் சட்டம்;

(ஈ) (அத்தியாயம் 182) வெடிமருந்துகள் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 183) வெடி பொருட்கள் கட்டளைச் சட்டம் அல்லது 1966ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க, தீங்கு விளைவிக்கும் ஆயுதங்கள் சட்டம்;

(உ) (அத்தியாயம் 423) செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம்;

(ஊ) 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க, வங்கித் தொழிற் சட்டத்தின் 83இ என்னும் பிரிவின் கீழான தவறொன்று;

(எ) நாடுகளுக்கிடையிலான ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல் தொடர்பாக அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் சட்டம்;

(ஏ) கணனிவழிக் குற்றம் தொடர்பாக அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் சட்டம்;

(ஐ) சிறுவர்களுக்கு எதிரான தவறுகள் தொடர்பாக அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் சட்டம்;

(ஒ) ஆட்களை விலைப்படுத்தலுடன் தொடர்புபட்ட தவறுகள் தொடர்பாக அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் சட்டம்; அத்துடன்

(ஓ) மரணதண்டனை அல்லது ஏழு வருட காலப்பகுதி ஒன்றுக்கான அல்லது அதற்கு மேலான காலப்பகுதியொன்றுக்கான மறியற்றண்டனை மூலம் தண்டிக்கப்படக் கூடியதான அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் வேறு சட்டத்தின் கீழான தவறொன்று.

## 2006ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல் சட்டம்

[2006ஆம் ஆண்டின் மாச்சு மாதம் 06ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

**பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தவறுகளை முறையே தடுப்பதற்கும், கண்டுபிடிப்பதற்கும், புலனாய்வு செய்வதற்கும் அத்துடன் குற்றவழக்குத் தொடுப்பதற்கும் வசதியளிப்பதற்காக சந்தேகத்திற்கிடமான நிதிசார் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான தரவுகளைத் திரட்டுவதற்கும்: பணம் தூய்தாக்குதலையும் பயங்கரவாதத்திற்கு நிதியளிப்பதனையும் முறியடிப்பதற்கு உரிய விழிப்புக்கவன வழிமுறைகளை மேற்கொள்ளுமாறு குறித்தசில நிறுவனங்களைத் தேவைப்படுத்துவதற்கும், இச்சட்டம் எந்த நிறுவனங்களுக்கு ஏற்புடைத்தாகின்றதோ அந்த நிறுவனங்களின் செயற்பாடுகளைக் கண்காணிப்பதற்குப் பொறுப்பாயிருக்கும் அதிகாரசபையை இனம்காண்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும்: அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடை நேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

1. இச்சட்டம் 2006ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க, நிதிசார் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடற் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

### பாகம் 1

### நிறுவனங்களின் கடமைகள்

2. (1) கணக்கை வைத்திருப்பவரை இனம்காணமுடியாதவிடத்து, ஏதேனும் அநாமதேயக் கணக்கு அல்லது இலக்கத்தினால் மாத்திரம் இனம்காணப்படும் கணக்கு அல்லது நிறுவனத்தின் அறிவுக்கு எட்டியவரை புனைப் பெயரொன்றில் தொழிற்படுத்தப்படும் ஏதேனும் கணக்கு உள்ளடங்கலாக, நிறுவனம் எதுவும் கணக்கொன்றை ஆரம்பித்தலோ தொழிற்படுத்துதலோ அல்லது பேணுதலோ ஆகாது.

(2) நிறுவனமொன்று, (3) ஆம் உட்பிரிவின் கீழ் நிதிசார் உளவறிதற் கூறினால் வழங்கப்பட்ட எவையேனும் விதிகளுக்கமைய-

(அ) தொடர்வதான தொழில் உறவொன்றைச் செய்து கொள்ளுகின்றவிடத்து அல்லது அத்தகைய உறவொன்று இல்லாது எவரேனும் வாடிக்கையாளருடன் கொடுக்கல் வாங்கல் எதனையும் மேற்கொள்ளுகின்றவிடத்து;

(ஆ) எவையேனும் விதித்துரைக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் தவிர்ந்த வாடிக்கையாளர் ஒருவரால் இலத்திரனியல் நிதிமாற்றமொன்று மேற்கொள்ளப்படுவதைக் கண்டிக்குமிடத்து;

(இ) சட்டவிரோதமான செயலொன்று புரியப்படுதல் தொடர்பான சந்தேகமொன்றைக் கொண்டிருக்குமிடத்தும்; அல்லது

(ஈ) அது முன்னர் பெற்றுக் கொண்டிருந்த வாடிக்கையாளரின் இனங்காணலும் செவ்வைபார்த்தலும் ஆவணப்படுத்துகையின் அல்லது தகவலின் உண்மைத்தன்மை அல்லது போதுமாந்தன்மை பற்றி சந்தேகத்தைக் கொண்டிருக்குமிடத்து,

வாடிக்கையாளரின் இனம் காண்பதனைச் செவ்வைபார்க்கும் ஏதேனும் அலுவலக முறையான ஆவணத்தின் அல்லது வேறு நம்பத்தகுந்ததும் சுயேச்சையானதுமான மூல ஆவணத்தின் அடிப்படையில் வாடிக்கையாளர் ஒருவரை நியாயமாக இனம்காணும் ஆற்றலுள்ளவாறு வாடிக்கையாளர் ஒருவர் தொடர்பில் ஒவ்வொரு வாடிக்கையாளரையும் இனம்காணுதலும் அவரது வாடிக்கையாளரை இனம்காணும் தரவை அல்லது தகவலைச் செவ்வை பார்த்தலும் வேண்டும்.

(3) நிதிசார் உளவறிதற் கூறு -

(அ) குறிப்பிட்ட எவரேனும் வாடிக்கையாளரை அல்லது வாடிக்கையாளர்களின் வகுப்பை இனம்காண்பதற்கு அல்லது செவ்வைப் பார்ப்பதற்குத் தேவைப்படுத்தப்பட்ட அலுவலக முறையான அல்லது இனம்காணும் ஆவணத்தை அல்லது ஆவணங்களை அல்லது நம்பகமானதும் சுயேச்சையானதுமான மூல ஆவணங்களை, தரவை அல்லது தகவலை அல்லது வேறு சான்றையும்;

(ஆ) இப்பிரிவின்கீழ் இனம் காணுதலினதும் செவ்வைப் பார்த்தலினதும் நேர நிர்ணயத்தையும்; அத்துடன்

(இ) நிறுவனமொன்றின் வாடிக்கையாளர்களால் கொண்டுநடாத்தப்பட்ட கொடுக்கல் வாங்கல்களுக்கு இப்பிரிவின் ஏல்தகவுக்கான ஆரம்பத்தை அல்லது அவை ஏற்புடைத்தாகவேண்டிய சூழ்நிலைகளை,

விதித்துரைத்து விதிகளை வழங்கலாம்.

(4) மூன்றாம் உட்பிரிவின் கீழ் வழங்கப்படும் விதிகளால் சுமத்தப்பட்ட நியதி, நிபந்தனைகள் வெவ்வேறு வகுதிகளைச் சேர்ந்த நிறுவனங்கள், வெவ்வேறு வகுதிகளைச் சேர்ந்த நிறுவனங்கள், வெவ்வேறு வகுதிகளைச் சேர்ந்த கொடுக்கல் வாங்கல்கள் அல்லது வெவ்வேறு வகுதிகளைச் சேர்ந்த வாடிக்கையாளர்கள் தொடர்பில் வேறுபடலாம்.

(5) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகள் -

(அ) கொடுக்கல், வாங்கல் சந்தேகத்திற்கிடமானது அல்லது வழமைக்கு மாறானது எனச் சந்தேகிப்பதற்கான காரணம் நிறுவனத்திற்கிருந்தாலன்றி, ஆளடையாளம் பற்றிய திருப்திகரமான சான்றை ஏற்கனவே முன்வைத்துள்ள ஆளொருவருடனான உளதாம் மற்றும் கிரமமான தொழில் உறவொன்றின் பாகமாக இருப்பின்;

(ஆ) கொடுக்கல் வாங்கல் சந்தேகத்திற்கிடமானது அல்லது வழமைக்கு மாறனது எனச் சந்தேகிப்பதற்கான காரணம் நிறுவனத்திற்கிருந்தாலன்றி, கொடுக்கல் வாங்கலானது விதித்துரைக்கப்பட்ட பணத்தொகையொன்றை விஞ்சாத சமயாசமய கொடுக்கல் வாங்கலொன்றாக இருப்பின்;

(இ) ஆளெவரும் மூன்று ஆண்டுகளை விஞ்சாதிருக்க வேண்டிய படிப்படியாக இடம்பெறும் காலப்பகுதியொன்றிற்கமைய இச்சட்டம் சட்டமாக்கப்படுவதற்கு முன்னர் நிறுவனத்தின் வாடிக்கையாளரொருவராக இருந்திருப்பின்: ஆயினும், அத்தகைய காலப்பகுதி வடிவமையும்போது நிறுவனம் ஒவ்வொன்றும் அதன் சார்பில் விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய ஒழுங்கு விதிகளுக்கமைய இதன் (2)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அத்தகைய ஆட்களுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்; அத்துடன்

(ஈ) அதன் சார்பில் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகளினால் விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய வேறு சூழ்நிலைகளில்,

ஏற்புடையனவாதலாகாது.

(6) ஐந்தாம் உட்பிரிவின் நோக்கத்திற்கு "சமவாய கொடுக்கல் வாங்கல்" என்பது, ஆளெவரும் எந்தக் கணக்கொன்று தொடர்பில் வாடிக்கையாளராக இருக்கின்றாரோ அந்தக் கணக்கின் ஊடாகத் தவிர அவ்வாளினால் மேற்கொள்ளப்படும் பணததினதும் இலத்திரனியல் நிதியினதும் மாற்றங்கள் தொடர்பிலான ஏதேனும் கொடுக்கல் வாங்கல் என்று பொருள்படும்.

3. இரண்டாம் பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி தேவைப்படுத்தப்பட்டவாறு ஆளடையாளம் பற்றிய திருப்திகரமான சான்று நிறுவனமொன்றுக்குச் சமர்ப்பிக்கப்படாதுவிடின் அந்நிறுவனம் இச்சட்டத்தின் நியதிகளின்படி தாபிக்கப்பட்ட நிதிசார் உளவறிதற் கூறினால் பணிக்கப்பட்டாலன்றி கொடுக்கல் வாங்கலுடன் மேற்கொண்டு முன்னெடுத்தல் எதையும் செய்தலாகாது என்பதுடன், எத்தனிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கலை 7ஆம் பிரிவின் கீழ் சந்தேகத்திற்குரிய கொடுக்கல் வாங்கலொன்றாக நிதிசார் உளவறிதற் கூறுக்கு அறிக்கையிடுதலும் வேண்டும்.

4.(1) ஒவ்வொரு நிறுவனமும் -

(அ) கொடுக்கல் வாங்கல்களின் பதிவேடுகளையும் கொடுக்கல் வாங்கல் தொடர்பிலான கடிதத் தொடர்புகளையும், நிதிசார் உளவறிதற் கூறுக்குக் கொடுத்துதவப்பட்ட எல்லா அறிக்கைகளையும், விடயத்திற்கேற்ப கொடுக்கல் வாங்கலின் அல்லது கடிதத் தொடர்பின் தேதியிலிருந்து அல்லது அறிவித்தல் கொடுத்துதவப்பட்ட தேதியிலிருந்து ஆறு ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்கும்; அத்துடன்

(ஆ) இரண்டாம் பிரிவின் நியதிகளின்படி பெறப்பட்ட ஆளடையாளம் பற்றிய பதிவேடுகளை விடயத்திற்கேற்ப கணக்கு மூடப்பட்ட அல்லது தொழில் உறவுகள் இல்லாதொழிக்கப்பட்ட தேதியிலிருந்து ஆறு ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்கும்.

அத்தகைய பதிவேடுகள் அல்லது கடிதத்தொடர்புகள் அதைவிட நீண்டவொரு காலப்பகுதிக்கு வைத்திருக்கப்படுதல் வேண்டும் என நிதிசார் உளவறிதற் கூறினால் பணிப்புரைகள் வழங்கப்பட்டிருந்தாலன்றி, (அத்தகைய பணிப்புரை வழங்கப்பட்ட விடயத்தில் பதிவேடுகள் அல்லது கடிதத் தொடர்பு அத்தகைய நீண்டகாலத்திற்கு வைத்திருக்கப்படுதல் வேண்டும்) பேணுமாறு தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ்ப் பேணப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட பதிவேடுகள் -

(அ) (i) கொடுக்கல் வாங்கலை நடாத்துகின்ற; அத்துடன்

(ii) ஏற்புடைத்தானவிடத்து எந்த ஆளின் சார்பில் கொடுக்கல் வாங்கல் நடாத்தப்படுகின்றதோ அந்த

ஆள் ஒவ்வொருவரினதும் பெயரையும், முகவரியையும் அத்துடன் வாழ்க்கைத் தொழிலையும் (அல்லது தோதானவிடதது தொழிலையோ அல்லது பிரதான செயற்பாட்டையோ);

(ஆ) கொடுக்கல் வாங்கலின் தன்மையையும் தேதியையும்;

(இ) சம்பந்தப்பட்ட நாணயத்தின் வகையையும் தொகையையும்;

(ஈ) கொடுக்கல் வாங்கல்கலுக்கான திறத்தவர்களையும்;

(உ) பதிவேட்டைத் தயாரிக்கின்ற ஊழியரின் பெயரையும் முகவரியையும் ;

(ஊ) நிதிசார் உளவறிதற் கூறினால் வழங்கப்பட்ட விதிகளின் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய வேறு தகவலையும்.

இனம்காண்பதற்குப் போதியளவு விவரங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) இச் சட்டத்தின்கீழ் ஏதேனும் பதிவேடு பேணப்படுதல் வேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுமிடத்து -

(அ) அது நிதிசார் உளவறிதற் கூறிடமிருந்து அல்லது சட்டத்தை நடைமுறைப்படுத்தும் முகவராண்மையொன்றிடமிருந்து செய்யப்பட்ட தகவலுக்கான வேண்டுகோள்களுடன் உடனடியாக இணங்கியொழுகுவதை நிறுவனமொன்றுக்கு இயலச் செய்யும் ஒருமுறையிலும் மற்றும் படிவத்திலும் பேணப்படுதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) அதன் பிரதியொன்று

(i) அதிலிருந்து கடதாசிப் பிரதியொன்றை உடனடியாகத் தயாரிக்கக்கூடியதான பொறியினால் வாசிக்கத்தகு வடிவமொன்றில்; அல்லது

(ii) அதிலிருந்து கடதாசிப் பிரதியொன்றைத் தயாரிக்கவும் மற்றும் செவ்வைப் பார்க்கும் நோக்கங்களுக்கெனப் பதிவேடுகளை வைத்திருக்கும் ஆளின் இலத்திரனியல் கையொப்பமொன்றை வைத்திருக்கக் கூடியதுமான இலத்திரனியல் வடிவமொன்றில்.

வைத்திருக்கப்படலாம்.

(4) இச்சட்டத்துடன் இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்தும் நோக்கங்களுக்கென நிதிசார் உளவறிதற் கூறுக்கு, வேண்டுகோள் விடுக்கப்படுவதன்மீது (1) ஆம் உட்பிரிவின் கீழ் பேணப்படும் பதிவேடுகள் கிடைக்கச் செய்யப்படுதல் வேண்டும்.

5. நிறுவனமொன்று 2ஆம் பிரிவின் கீழான அதன் கடப்பாடுகள் திருப்திப்படுத்தப்படுவதையும் மற்றும் மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல்கள் அதன் வாடிக்கையாளரைப் பற்றியும், வாடிக்கையாளரின் தொழில் விபரம் பற்றியும் நிறுவனம் கொண்டுள்ள தகவலுக்கு இசைவானதாகவிருப்பதையும் உறுதிப்படுத்துவதற்காக,

(அ) அதன் வாடிக்கையாளர்களுடனான தொழில் உறவுகள் மீதான தொடர்ந்துறுகின்ற முறையான விழிப்புக் கவனத்தை மேற்கொள்ளுதலும்

(ஆ) மேற்கொள்ளப்படுகின்ற ஏதேனும் கொடுக்கல் வாங்கல் அவசியமானவிடத்து, நிதிகளின் தோற்றுவாய் உட்பட வாடிக்கையாளரினதும், வாடிக்கையாளரினதும் தொழிலினதும் மற்றும் எதிர்மறை விளைவினதும் விவரத்தைப் பற்றிய நிறுவனத்தின் அறிவுக்கு இசைவாகச் செய்யப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்துவதற்கு வாடிக்கையாளர் ஒருவருடனான தொழில் உறவின் நெறிமுறை முழுவதும் பொறுப்பேற்கப்பட்ட ஏதேனும் கொடுக்கல் வாங்கலைப் பற்றிய தொடர்ந்துறுகின்ற நுண்ணாய்வையும் நடாத்துதல் வேண்டும்.

6. நிறுவனமொன்று -

(அ) (பெறுநரும் மற்றும் அனுப்புநரும் மத்திய வங்கியால் உரிமமளிக்கப்பட்ட வங்கியொன்றாக இருந்தாலன்றி) வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம் அமைச்சரால் விதித்துரைக்கப்பட வேண்டியவாறான அத்தகைய பணத்தொகையை அல்லது ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமானதை விஞ்சிய பணத்தொகையிலான கொடுக்கல் வாங்கல் எதனையும்; அத்துடன்

(ஆ) நிதிசார் உளவறிதற் கூறினால் வழங்கப்பட்ட விதிகளினால் விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய படிவத்திலும், முறையிலும் மற்றும் அத்தகைய காலப்பகுதிக்குள்ளும் ஒழுங்குவிதியால் விதித்துரைக்கப்பட வேண்டியவாறான அத்தகைய பணத்தொகையை விஞ்சிய நிதிகளின் ஏதேனும் இலத்திரனியல் கைமாற்றுதலை.

நிதிசார் உளவறிதற் கூறுக்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

7. (1) நிறுவனமொன்று -

(அ) ஏதேனும் கொடுக்கல் வாங்கல் அல்லது எத்தனிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல் ஏதேனும் சட்டவிரோதமான செயற்பாட்டை அல்லது வேறு ஏதேனும் குற்றவியல் தவறைப் புரிதல் தொடர்பிலானதாக இருக்கக்கூடும் எனச் சந்தேகிப்பதற்கு நியாயமான காரணத்தைக் கொண்டிருக்குமிடத்து, அல்லது

(ஆ) அது -

(i) 2005ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாயச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் தவறொன்றுக்கு ஆயத்தம் செய்கின்றவோர் செயலொன்றுக்கு இயைபுள்ளதென;

(ii) சட்டவிரோதமான செயற்பாடொன்றை அமைத்துருவாக்கும் செயலொன்றுக்கான புலனாய்வொன்றுக்கு அல்லது வேறுவகையில் இச்சட்டத்தை அல்லது 2006ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க, பணம் தூய்தாக்குதலைத் தடைசெய்யும் சட்டத்தை அல்லது 2005ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாயச் சட்டத்தை வலுவுக்கிடுவதில் உதவக்கூடிய இயைபுள்ளதென, சந்தேகிக்கின்ற தகவலைக் கொண்டிருக்குமிடத்து, நிறுவனம் அச்சந்தேகம் உருவாகிய பின்னர் சாத்தியப்படக்கூடியளவு விரைவில் ஆனால் அதிலிருந்து இரண்டு வேலை நாட்களுக்குப் பிந்தாமல் கொடுக்கல் வாங்கலை அல்லது தகவலை நிதிசார் உளவறிதற் கூறுக்கு அறிக்கையிடுல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழான அறிக்கையொன்று -

(அ) எழுத்தில் இருத்தல் வேண்டும் என்பதுடன், அஞ்சல் மூலம் வழங்கப்படலாம், தொலைபேசி மூலம் எனின் இருபத்து நான்கு மணித்தியாலங்களுக்குள் எழுத்தில் உறுதிப்படுத்தல் வேண்டும். தொகைநகலில் அல்லது இலத்திரனியல் அஞ்சலில் அல்லது நிதிசார் உளவறிதற் கூறினால் விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய வேறுமுறையில் கொடுக்கப்படலாம் ;

(ஆ) நிதிசார் உளவறிதற் கூறினால் விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய படிவத்தில் இருத்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய விவரங்களைக் கொண்டிருத்தலும் வேண்டும்;

(இ) நிறுவனம் எந்த ஏதுக்கலின்மீது சந்தேகத்தைக் கொண்டிருக்கின்றதோ அந்த ஏதுக்கள் பற்றிய கூற்றொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்;

(ஈ) நிறுவனத்தால் கையொப்பமிடப்பட்டிருத்தலும் அல்லது வேறுவகையில் சான்றுதிப்படுத்தப்பட்டிருத்தலும் வேண்டும்;

(3) அறிக்கையொன்றைச் செய்துள்ள அல்லது நிதிசார் உளவறிதற்கூறுக்கு தகவல் எதனையும் கொடுத்துள்ள ஆளொருவர், நிதிசார் உளவறிதற் கூறினால் அவ்வாறு வேண்டுகோள் விடுக்கப்படின், கொடுக்கல் வாங்கலை அல்லது எத்தனிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கலை அல்லது கொடுக்கல் வாங்கலுக்கான திறத்தவர்களைப் பற்றிய, மேலும் ஏதேனும் தகவலை நிதிசார் உளவறிதற்கூறுக்கு வழங்குதல் வேண்டும்.

8. நிறுவனம் ஒவ்வொன்றும் அத்தகைய நிறுவனத்துடன் கொடுக்கல் வாங்கலை நடத்துகின்ற எவரேனும் ஆள் தொடர்பில்,

(அ) அதன் அறிவுக்கு எட்டியவரை அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின் நியதிகளின்படி ஏதேனும் பயங்கரவாதச் செயற்பாட்டைப் புரிவதினின்று பெறப்பட்ட ஆதனமாக இருக்கின்றதென அது நியாயமாகச் சந்தேகிக்கின்ற ஏதேனும் ஆதனம் அதன் உடைமையில் அல்லது கட்டுப்பாட்டில் இருப்பதைப்பற்றி;

(ஆ) குறித்துரைக்கப்பட்ட அமைப்பொன்றிற்குச் சொந்தமான அல்லது அதனால் அல்லது அதன் சார்பில் கட்டுப்படுத்தப்படுகின்ற அல்லது எந்தப் பொருள் குறித்துரைக்கப்பட்ட அமைப்பொன்றுக்குச் சொந்தமாயுள்ளதென அல்லது அதனால் அல்லது அதன் சார்பில் கட்டுப்படுத்தப்படுகின்றது எனச் சந்தேகிப்பதற்கு நியாயமான ஏதுக்கள் இருக்கின்றனவோ அந்த ஏதேனும் ஆதனம் அவரது உடைமையில் அல்லது கட்டுப்பாட்டில் இருப்பதைப்பற்றி;

(இ) அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின் நியதிகளின்படி ஏதேனும் பயங்கரவாதச் செயற்பாட்டைப் புரிவதினின்று பெறப்பட்ட ஆதனம் தொடர்பில் கொடுக்கல் வாங்கலொன்றை அல்லது உத்தேசிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கலொன்றைப் பற்றிய ஏதேனும் தகவலை; அல்லது

(ஈ) கொடுக்கல் வாங்கலொன்றைஅல்லது உத்தேசக் கொடுக்கல் வாங்கலொன்றையும் அத்துடன் அத்தகைய கொடுக்கல் வாங்கல் அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின் நியதிகளின்படி ஏதேனும் பயங்கரவாதச் செயற்பாட்டைப் புரிவதினின்று பெறப்பட்ட ஆதனத்துடன் சம்பந்தப்படக்கூடும் எனச் சந்தேகப்படுவதற்கு நியாயமான ஏதுக்கள் இருப்பது பற்றிய தகவலை,

உடனடியாக நிதிசார் உளவறிதற் கூறிற்கு வெளியிடுதல் வேண்டும்.

## பாகம் 11

## நிறுவனங்களுக்கும் வேறு ஆட்களுக்கும் ஏற்புடைத்தான ஏற்பாடுகள்

9. (1) ஆளொருவர் -

(அ) இச்சட்டத்தின் எவையேனும் ஏற்பாடுகளின் நியதிகளின்படி நிதிசார் உளவறிதற் கூறுக்கு அறிக்கையொன்று செய்யப்பட்டுள்ளது அல்லது தகவல் வழங்கப்பட்டுள்ளது என;

(ஆ) ஏழாம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டவாறு கொடுக்கல் வாங்கலொன்று தொடர்பில் ஏதேனும் சந்தேகம் உருவாகியுள்ளது என ; அல்லது

(இ) எந்த ஆளுக்குத் தகவல் வெளிவிடப்படுகின்றதோ ஆந்த ஆள் எந்தத் தகவலிலிருந்து சந்தேகமொன்று உருவாக்கப்பட்டுள்ளது அல்லது அறிக்கையொன்று செய்யப்பட்டுள்ளது அல்லது செய்யப்படக்கூடும் என ஊகிக்கலாம் என நியாயமாக எதிர்பார்க்கலாமோ அந்த வேறு ஏதேனும் தகவலை,

வேறு எவரேனும் ஆளுக்கு வெளிவிடுதலாகாது.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் -

(அ) இச்சட்டத்தின்கீழ் அறிக்கையிடும் ஆளின் அலுவலர் அல்லது ஊழியர் அல்லது முகவர் ஒருவருக்கு அத்தகைய ஆளின் கடமைகளை நிறைவேற்றுதலுடன் தொடர்புபட்ட ஏதேனும் நோக்கத்திற்காக;

(ஆ) ஏதேனும் கருமம் தொடர்பில் சட்ட ஆலோசனையை அல்லது பிரதிநிதித்துவத்தைப் பெறும் நோக்கத்திற்காக வழக்கறிஞர், சட்டத்தரணி அல்லது சட்ட ஆலோசகர் ஒருவருக்கு; அல்லது

(இ) இயைபான நிறுவனத்தின் மேற்பார்வை அதிகாரிக்கு மேற்பார்வை அதிகாரியின் பணிகளைப் புரிதலுடன் தொடர்புபட்டுள்ள அத்தகைய அளவுக்கு,

செய்யப்படும் வெளிவிடுதல்களுக்கு ஏற்புடைத்தாகமாட்டாது.

(3) இரண்டாம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட எந்த ஆளுக்குத் தகவலின் வெளிவிடுதல் எதுவும் செய்யப்பட்டுள்ளதோ, அந்த ஆள் எவரும் அத்தகவலை -

(அ) முதலாவதாகக் குறிப்பிடப்பட்ட ஆளின் கடமைகளைப் புரிவதற்கு; அல்லது

(ஆ) கருமம் தொடர்பில் சட்ட ஆலோசனை அல்லது பிரதி நிதித்துவம் பெறுவதற்கு,

அவசியமாகக் கூடிய அளவுக்கு அதன்கண் குறிப்பீடு செய்யப்பட்ட ஆளொருவருக்குத் தவிர வேறு எவருக்கும் வெளிவிடுதலாகாது.

(4) இரண்டாம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட எந்த ஆளுக்கு ஏதேனும் தகவல் வெளியிடப்பட்டுள்ளதோ அந்த ஆளெவரும், அவ்வுட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட நோக்கத்திற்குத் தவிர அல்லது அக்கருமம் தொடர்பில் சட்ட ஆலோசனையை அல்லது பிரதிநிதித்துவத்தைப் பெறுகின்ற நோக்கத்திற்குத் தவிர நிதிசார் உளவறிதற் கூறிற்கு அத்தகவலை வெளிவிடுதலாகாது.

10. (1) ஆளொருவர் -

(அ) எந்தக் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் இச் சட்டத்தின்கீழ் சந்தேகத்திற்கிடமான கொடுக்கல் வாங்கல் பற்றிய அறிக்கையொன்று செய்யப்பட்டுள்ளதோ அந்தக் கொடுக்கல் வாங்கல் ஒன்றைக் கையாண்டிருக்கும் ஆளை;

(ஆ) அத்தகைய சந்தேகத்திற்கிடமான கொடுக்கல் வாங்கல் பற்றிய அறிக்கையொன்றைத் தயாரித்திருக்கும் ஆளை;

(இ) அத்தகைய சந்தேகத்திற்கிடமான கொடுக்கல் வாங்கல் பற்றிய அறிக்கையைச் செய்துள்ளவரான ஆளை; அல்லது

(ஈ) சந்தேகத்திற்கிடமான கொடுக்கல் வாங்கல் பற்றிய அறிக்கையொன்றில் அல்லது 7ஆம் பிரிவைப் பின்பற்றி வழங்கப்பட்ட தகவல் ஒன்றில் அடங்கியுள்ள தகவலை -

(i) சட்டவிரோதமான செயற்பாடொன்றுக்காக அல்லது முறையே 2006ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க, பணம் தூய்தாக்கலைத் தடைசெய்யும் சட்டத்தின்கீழ் அல்லது 2005ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க, பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாயச் சட்டத்தின் கீழான தவறொன்றிற்காக ஆளொருவரை அல்லது ஆட்களைப் புலனாய்வு செய்யும் அல்லது அவ்வாளுக்கெதிராக அல்லது ஆட்களுக்குக்கெதிராக வழக்குத் தொடரும் ; அல்லது

(ii) 2006ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க, பணம் தூய்தாக்கலைத் தடைசெய்யும் சட்டத்தின் அல்லது 2005ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க, பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாயச் சட்டத்தின் ஏற்பாடுகளை வலுவுக்கிடும் அல்லது நடைமுறைப்படுத்தும்.

நோக்கத்திற்குத் தவிர, இனங்காட்டும் அல்லது இனங்காட்டும் சாத்தியமுள்ள ஏதேனும் தகவலை வெளிவிடுதலாகாது.

(2) இப் பிரிவிலுள்ள எதுவும் 7ஆம் பிரிவின் எவையேனும் ஏற்பாடுகளின் மீறுகைக்காக எவரேனும் ஆளுக்கெதிராக வழக்குத் தொடரும் நோக்கங்களுக்காகத் தகவல் எதனையும் வெளியிடுவதனைத் தடைசெய்வதாகக் கருதப்படுதலாகாது.

11. இச் சட்டத்தினதும் அத்தகைய வெளியிடுதலைத் தடைசெய்யும் அப்போதைக்கு வலுவிலுள்ள வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய 9ஆம் அல்லது 10ஆம் பிரிவில் அடங்கியுள்ள எதுவும் நீதிமன்றமொன்றின் முன்னிலையிலுள்ள வழக்கு நடவடிக்கைகள் தொடர்பில் அல்லது அவற்றின் நெறிமுறையின்போது ஏதேனும் தகவலை வெளிவிடுவதனைத் தடுத்தலாகாது என்பதுடன், தகவலை வெளிவிடுதல் நீதியின் நலனுக்கு அவசியமானதென நீதிபதி அல்லது தலைமை தாங்கும் வேறு அலுவலர் திருப்தியுற்றலாலன்றி, எந்தத் தகவலுக்கு இப்பிரிவு ஏற்புடைத்தாகின்றதோ அந்தத் தகவலை எவையேனும் நீதித்துறை நடவடிக்கைகளில் வெளியிடுமாறு ஆளெவரும் தேவைப்படுத்தலாகாது.

12. (1) இச் சட்டத்தின்கீழ் அல்லது இச் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகளுடன் அல்லது இச் சட்டத்தின் நியதிகளின்படி நிதிசார்ந்த உளவறிதற் கூறினால் வழங்கப்பட்ட பணிப்புரைகளுடன் இணங்கியொழுகுகையில் நிறுவனத்தினால், கணக்காய்வாளர்கள் கழகத்தினால் அல்லது மேற்பார்வை அதிகாரசபையால் அல்லது அத்தகைய நிறுவனத்தின், கழகத்தின் அல்லது அதிகார சபையின் பணிப்பாளர், பங்காளர், அலுவலர், ஊழியர் அல்லது முகவர் ஒருவரால் மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பில் -

(அ) அத்தகைய நிறுவனத்திற்கு அல்லது நிறுவனமொன்றின் கணக்காய்வாளருக்கு அல்லது மேற்பார்வை அதிகாரிக்கு; அல்லது

(ஆ) அத்தகைய ஆளினது தொழில் நெறிமுறையின்போது நிறுவனமொன்றின் முகவராண்மையின், கணக்காய்வாளர்கள் கழகமொன்றின் அல்லது மேற்பார்வை அதிகாரசபையின் தொழில் நெறிமுறையின்போது செயலாற்றும் பணிப்பாளர் , பங்காளர், அலுவலர், ஊழியர் அல்லது முகவர் ஒருவருக்கெதிராக .

குடியியல், குற்றவியல் அல்லது ஒழுங்காற்று வழக்கு நடவடிக்கைகள் எவையுமிருத்தலாகாது.

(2) ஒராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் இச்சட்டத்தின் 8ஆம் பிரிவில் விபரிக்கப்பட்டுள்ள கீழான தகவலொன்றுக்கான எவையேனும் வழக்கு நடவடிக்கைகள் தொடர்பில் ஏற்புடையனவாதலாகாது.

(3) நிறுவனமொன்று கணக்காய்வாளர் கழகமொன்று அல்லது மேற்பார்வை அதிகாரசபையின் அல்லது ஏதேனும் நிறுவனத்தின், கழகத்தின் அல்லது அதிகாரசபையின் எவரேனும் பணிப்பாளர், பங்காளர், அலுவலர், ஊழியர் அல்லது முகவர் இச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அறிக்கையொன்றைச் செய்தால் அத்தகைய ஆள் பணம் தூயதாக்கல் என்னும் தவறுக்காக வழக்குத் தொடுக்கும் நோக்கங்களுக்கு ஏதேனும் நேரத்தில் அத்தகவலைத் தம்மகத்தே கொண்டிருக்கவில்லை எனக் கருதப்படுதல் வேண்டும்.

13. (1) இச் சட்டத்தின் 4ஆம், 5ஆம், 6ஆம், 7ஆம் அல்லது 8ஆம் பிரிவுகளில் அடங்கியுள்ள எதுவும் ஏதேனும் சிறப்புரிமை பெற்ற தகவல் தொடர்பை வெளியிடுவதற்கு வழக்கறிஞர் ஒருவரைத் தேவைப்படுத்துவதாகப் பொருள் கொள்ளப்படுதல் ஆகாது.

(2) இப்பிரிவின் நோக்கங்களுக்குத் தகவல் தொடர்பொன்று -

(அ) வாய்மொழியாவிருப்பினுஞ்சரி அல்லது எழுத்திலிருப்பினுஞ்சரி -

(i) தமது உயர் தொழில்சார் தன்மையில் வழக்குரைஞர் அல்லது சட்ட ஆலோசகர் ஒருவருக்கும், மற்றும் அத்தகைய தன்மையில் வேறோர் பரிஸ்டருக்கும், மன்றாடியாருக்கும், வழக்குரைஞர்களுக்கும், சட்டத்தரணிக்கும் அல்லது சட்ட ஆலோசகருக்கும் இடையில் ; அல்லது

(ii) தமது உயர் தொழில்சார் தன்மையில் வழக்குரைஞர் ஒருவருக்கும் அல்லது சட்ட ஆலோசகருக்கும் அத்துடன் கட்சிக்காரருக்குமிடையில் ஒன்றில் நேரடியாகவாயினுஞ்சரி அல்லது முகவர் ஒருவரூடாக நேரடியாகவில்லாமலாயினுஞ்சரி பரிமாறப்படும் அந்தரங்கத் தகவல் தொடர்பாகவிருக்குமாயின் ; அத்துடன்

(ஆ) சட்ட ஆலோசனை அல்லது உதவிபெறும் அல்லது வழங்கும் நோக்கத்திற்காக, ஆக்கப்பட்டிருக்குமாயின் அல்லது உருவாக்கப்பட்டிருக்குமாயின்; அத்துடன்

(இ) ஏதேனும் சட்டவிரோதமான அல்லது சட்டத்திற்கு முரணான செயலைப் புரிகின்ற அல்லது புரிவதனை முன்னெடுத்துச் செல்லும் நோக்கத்திற்காகச் செய்யப்பட்டிருக்கவில்லையெனின் அல்லது உருவாக்கப்பட்டிருக்கவில்லையெனின்.

மாத்திரமே சிறப்புரிமைபெற்ற தகவல் தொடர்பொன்றாகும்.

(3) தகவல் முற்றிலும் அல்லது பகுதியளவில் ஆளொருவரின் பெறுகைகள், கொடுப்பனவுகள், வருமானம், செலவினம் அல்லது நிதி சார்ந்த கொடுக்கல் வாங்கல்களைக் கொண்டதாயிருக்குமிடத்து, அல்லது முற்றிலும் அல்லது பகுதியளவில் அவை தொடர்பிலான தாக இருக்குமிடத்து (ஒரு வழக்குரைஞராக இருப்பினுஞ்சரி அல்லது அவரது கட்சிக்காரராக அல்லது வேறு எவரேனும் ஆளாக இருப்பினுஞ்சரி) வழக்குரைஞரின் நம்பிக்கைப் பொறுப்புக் கணக்கொன்று தொடர்பில் தயாரிக்கப்பட்ட அல்லது வைத்திருக்கப்பட்ட ஏதேனும் கணக்குப் புத்தகத்தில், கணக்கில், கூற்றில் அல்லது வேறு பதிவேட்டில் அடங்கியிருக்குமாயின் அல்லது ஏதேனும் புத்தகம், கணக்கு, கூற்று அல்லது வேறு பதிவேடு முழுவதையும் அல்லது பாகத்தைக் கொண்டிருக்குமாயின் அது சிறப்புரிமை பெற்ற தகவல் தொடர்பொன்றாக இருத்தலாகாது.

14. (1) நிறுவனம் ஒவ்வொன்றும் -

(அ) நிறுவனம் இச்சட்டத்தின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுவதை உறுதிப்படுத்துவதற்குப் பொறுப்பாயிருக்க வேண்டிய இணங்கியொழுகும் அலுவலகர் ஒருவரை நியமிக்குமாறும் -

(ஆ) (i) இரண்டாம் பிரிவின்கீழ் வாடிக்கையாளரை இனம்காணும் தேவைப்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கும்;

(ii) நான்காம் பிரிவின் கீழ் பதிவேடுகளை வைத்திருக்கும் நடவடிக்கை முறைகளையும் தடுத்து வைக்கும் தேவைப்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கும் ;

(iii) ஐந்தாம் பிரிவின்கீழ் கண்காணிக்கும் தேவைப்பாட்டு முறையை நடைமுறைப்படுத்துவதற்கும்;

(iv) கணக்காய்வாளர்கள் தொடர்பில் 6ஆம், 7ஆம், 8ஆம் அத்துடன் 22ஆம் பிரிவுகளின் கீழான அறிக்கையிடும் தேவைப்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கும் ;

(v) பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பிலான சட்டங்களை அதன் அலுவலர்களும் ஊழியர்களும் அறிந்துகொள்ளச் செய்வதற்கும் ; அத்துடன்

(vi) எல்லா ஆட்களையும் ஊழியர்களாக சேவைக்கு எடுக்க முன்னர் அவர்களைப் பற்றி அறிவதற்கும்,

ஆன நடவடிக்கை முறைகளையும் முறைமைகளையும் தாபித்துப் பேணுமாறும் -

(இ) அதன் நடவடிக்கை முறைகளும் முறைமைகளும் இச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகுவதனைச் சோதிப்பதற்கான கணக்காய்வுப் பணியொன்றைத் தாபிக்குமாறும் ;

(ஈ) சந்தேகத்திற்கிடமான கொடுக்கல் வாங்கல்களை இனம்கண்டு கொள்வதற்கு அதன் அலுவலர்களையும் ஊழியர்களையும் அத்துடன் முகவர்களையும் பயிற்றுவிக்குமாறும்.

தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் தமது தொழிலை மேற்கொண்டிருக்கும் நெறிமுறையின்போது வேறு எவரேனும் ஆளைத் தொழிலுக்கமர்த்தாத அல்லது அவருடன் இணைந்து செயற்படாத தனியாள் ஒருவருக்கு ஏற்புடைத்தாதல் ஆகாது.

(3) நிறுவனமொன்று அதன் வெளிநாட்டுக் கிளைகளும் துணை நிறுவனங்களும் இச்சட்டத்தின் பாகங்கள் 1,11, அத்துடன் 111 என்பவற்றுடன் இசைந்திருக்கும் வழிமுறைகளை உள்ளூர்ச் சட்டங்களும் ஒழுங்குவிதிகளும் அனுமதிக்கும் அளவுக்கு, கடைப்பிடிப்பதனையும் அனுசரிப்பதனையும் உறுதிப்படுத்துதல் வேண்டும் என்பதுடன், வெளிநாட்டுக் கிளை அல்லது துணை நிறுவனம் அத்தகைய வழிமுறைகளைக் கடைப்பிடிக்கவும் அனுசரிக்கவும் இயலாதிருக்குமிடத்து, அவ்விடயத்தை மேற்பார்வை அதிகாரசபைக்கு அல்லது மேற்பார்வை அதிகாரசபையொன்று இல்லாதவிடத்து, நிதிசார் உளவறிதற் கூறிற்கு அறிக்கையிடுதலும் வேண்டும்.

பாகம் 111

**நிதிசார் உளவறிதல் கூறின் தத்துவங்களும் பணிகளும்**

15.(1) நிதிசார் உளவறிதற் கூறு -

(அ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி செய்யப்பட்ட அறிக்கைகளையும் வேறோர் நாட்டின் ஏதேனும் முகவராண்மையால் நிதிசார் உளவறிதற் கூறுக்கு வழங்கப்பட்ட தகவலையும் சட்டத்தை வலுவுக்கிடும் முகவராண்மையொன்றினால் அல்லது அரசாங்க நிறுவனமொன்றினால் அல்லது முகவராண்மையொன்றினால் நிதிசார் உளவறிதற் கூறுக்கு வழங்கப்பட்ட தகவலையும் அத்துடன் சட்டவிரோதமான செயற்பாடொன்றாக அமையும் சந்தேகத்திற்கிடமான செயலொன்றைப் பற்றி நிதிசார் உளவறிதற் கூறுக்கு தன்னிச்சையாக வழங்கப்பட்ட வேறு ஏதேனும் தகவலையும் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்;

(ஆ) சட்டவிரோதமான செயற்பாடொன்றாக அமையும் செயலொன்றுக்கு, பணம் தூயதாக்கல் அல்லது பயங்கரவாதத்திற்கு அல்லது பயங்கரவாத செயற்பாடொன்றிற்கு நிதியளித்தல் தவறொன்றுக்கு இயைபானதென நிதிசார் உளவறிதற் கூறு கருதுகின்ற ஏதேனும் தகவலை, அது பகிரங்கமாகக் கிடைப்பினுஞ்சரி, வர்த்தக ரீதியில் கிடைக்கக் கூடியதாகவுள்ள தரவுத் தளங்களில் திரட்டப்பட்ட அல்லது பேணப்பட்ட தகவலை, அரசாங்கத்தால் பேணப்பட்ட தரவுத் தளங்களில் திரட்டப்பட்ட அல்லது பேணப்பட்ட தகவலை, அரசாங்கத்தால் பேணப்பட்ட தரவுத் தளங்களில் தேக்கி வைக்கப்பட்ட தகவல் உட்பட திரட்டுதல் வேண்டும் அல்லது திரட்டுமாறு நிதிசார்ந்த நிறுவனமொன்றின் மேற்பார்வை அதிகாரசபையைத் தேவைப்படுத்துதல் வேண்டும்;

(இ) இச் சட்டத்தின் நோக்கங்களுக்காக ஏதேனும் அரசாங்க முகவராண்மையிடமிருந்தும், சட்டத்தை வலுவுக்கிடும் முகவராண்மையிடமிருந்தும் அத்துடன் மேற்பார்வை முகவராண்மையிடமிருந்தும் தகவலைக் கோரலாம்;

(ஈ) எல்லா அறிக்கைகளையும் தகவலையும் பகுப்பாய்வு செய்வதுடன் மதிப்பீடும் செய்யலாம்;

(உ) பதினெட்டாம் பிரிவில் தரப்பட்டுள்ளவாறு எல்லா நிறுவனங்களினதும் பரிசோதனையை மேற்கொள்ளுதல் வேண்டும்;

(ஊ) அதன் பாதுகாப்புகளினதும் மதிப்பீட்டினதும் அடிப்படையில் கொடுக்கல் வாங்கலானது இச் சட்டத்தின் கீழ்ப் புலனாய்விற்கு அல்லது குற்றவழக்குத் தொடுப்புக்கு அல்லது சட்டவிரோதமான செயற்பாடொன்றாக அமையும் செயலொன்றுக்கு இயைபானதாகும் எனச்சந்தேகிப்பதற்கு நிதிசார் உளவறிதற் கூறுக்கு நியாயமான ஏதுக்களிருக்குமாயின் ஏதேனும் கருமத்தை அல்லது ஏதேனும் அறிக்கையிலிருந்து பெறப்பட்ட ஏதேனும் தகவலை அல்லது அதனால் பெறப்பட்ட தகவலை சட்டத்தை வலுவுக்கிடும் உரிய முகவராண்மைக்கு ஆற்றுப்படுத்துதல் வேண்டும் என்பதுடன், அது தொடர்பில் நிதிசார் உளவறிதற்கூறு அத்தகைய ஆற்றுப்படுத்துகையை அல்லது தகவலை இயைபான மேற்பார்வை அதிகாரசபைக்கும் அனுப்பலாம் ;

(எ) அறிக்கை தொடர்பில் அல்லது ஆள் அல்லது அறிக்கை தொடர்பிலான கடைசிச் செயற்பாட்டின் தேதியிலிருந்து ஆறு ஆண்டுகளுக்கு அறிக்கையில் பெயர் குறிப்பிடப்பட்ட ஆள் தொடர்பில் மேலும் செயற்பாடு அல்லது தகவல் எதுவும் இல்லையெனில், அறிக்கை கிடைக்கப்பெற்ற அல்லது சேகரிக்கப்பட்ட தேதியிலிருந்து ஆறு வருடங்கள் கழிந்ததன் மீது சந்தேகத்திற்கிடமான கொடுக்கல் வாங்கல் பற்றிய அறிக்கையொன்றை அழித்துவிடுதல் வேண்டும்;

(ஏ) இச் சட்டத்துடன் இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்துவதற்கு நிதிசார் உளவறிதற் கூறினால் அல்லது சட்டத்தை வலுவுக்கிடும் முகவராண்மையொன்றினால் எதிர்பார்க்கப்பட்ட ஏதேனும் புலனாய்வுக்கு வசதியளிப்பதற்காக நிதிசார் உளவறிதற்

கூறினால் பெறப்பட்ட ஏதேனும் தகவல் அல்லது அறிக்கை தொடர்பில் சரியானதாகக் கூடியவாறு அத்தகைய நடவடிக்கைகளை எடுக்குமாறு நிறுவனமொன்றின் மேற்பார்வை அதிகாரசபைக்கு அறிவுறுத்தல் வேண்டும் அல்லது அதனைத் தேவைப்படுத்துதல் வேண்டும்;

(ஐ) புள்ளிவிவரங்களையும் பதிவேடுகளையும் தொகுத்தல் வேண்டும் என்பதுடன், இலங்கைக்குள் அல்லது வேறிடங்களில் தகவலைப் பரப்பலாம் அத்துடன் பெறப்பட்ட ஏதேனும் தகவலிலிருந்து எழுகின்ற விதப்புரைகளையும் செய்யலாம்;

(ஒ) வாடிக்கையாளரை இனங்காணல், பதிவேடு காத்தல், அறிக்கையிடும் கடப்பாடுகள், சந்தேகத்திற்கிடமான கொடுக்கல் வாங்கல்களை இனங்காணல் மற்றும் எந்த வேறு கருமங்கள் தொடர்பில் விதிகளை அல்லது வழிகாட்டு நெறிகளை வழங்குவதற்கு நிதிசார் உளவறிதற் கூறு இச் சட்டத்தின் கீழ்த் தத்துவமளிக்கப்பட்டுள்ளதோ அந்தக்கருமங்கள் தொடர்பில் விதிகளையும் வழிகாட்டு நெறிகளையும் வழங்குதல் வேண்டும் அல்லது நிறுவனமொன்றின் மேற்பார்வை அதிகாரசபையை வழங்கச் செய்வித்தல் வேண்டும்;

(ஓ) இச் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட அறிக்கைகளில் அல்லது தகவலிலிருந்து வருகின்ற வெளிப்பாடு தொடர்பாக எல்லா நிறுவனங்களுக்கும் வேறு இயைபான முகவராண்மைகளுக்கும் காலத்துக்குக்காலம் அறிக்கையிடுதல் வேண்டும்;

(ஔ) இச் சட்டத்தின்கீழ் அதற்குச் செய்யப்பட்ட அறிக்கையொன்றில் குறிப்பீடு செய்யப்பட்ட திறத்தவர்களை அல்லது கொடுக்கல் வாங்கல்களைப் பற்றி மேலும் தகவலைப் பெறலாம்;

(க) வாடிக்கையாளரை இனங்காணுதல், பதிவேடுகளை வைத்திருத்தல், கடப்பாடுகளை அறிக்கையிடுதல் அத்துடன் சந்தேகத்திற்கிடமான கொடுக்கல் வாங்கல்களை இனங்காணுதல் என்பன தொடர்பில் நிறுவனங்களுக்குப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தலாம்;

(ங) இச் சட்டத்தின்கீழ் அதன் கடமைகளையும் பணிகளையும் புரிவதற்கு அவசியமாகக் கூடியவாறான முறையான விழிப்புக் கவனத்தையும், செவ்வை பார்த்தலையும் வேறு விசாரணைகளையும் பொறுப்பேற்கலாம்;

(ச) பணம் தூய்தாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் போன்ற துறைகளிலும் மற்றும் பணம் தூயதாக்கலையும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலையும் கண்டுபிடிப்பதற்கும் தடைசெய்வதற்கும் தடுப்பதற்குமான மேம்பாடான வழிகளிலுமான திருப்பங்களையும் அபிவிருத்திகளையுமிட்டு ஆராய்ச்சியை மேற்கொள்ளலாம்;

(ஞ) பணம் தூய்தாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் என்பன தொடர்பிலான விடயங்கள் மீது பொதுமக்களுக்கு அறிவூட்டலாம் என்பதுடன், விழிப்புணர்வையும் உருவாக்காலாம்.;

(ட) நிதிசார் உளவறிதற் கூறின் பகுப்பாய்வின் அல்லது மதிப்பீட்டின் மீதான தகவல் சட்டவிரோதமான செயற்பாடாக அமையும் ஏதேனும் செயலை பணம் தூயதாக்கும் தவறொன்றைப் புலனாய்வு செய்வதற்கு அல்லது அதற்கெதிரான குற்றவழக்கு தொடுப்புக்கு இயைபானதாகும் என சந்தேகிப்பதற்கு அதற்கு நியாயமான ஏதுக்கள் இருக்குமாயின், 16ஆம்,17ஆம் பிரிவுகளில் தரப்பட்டுள்ளவாறு அது பெற்றுக்கொண்ட ஏதேனும் அறிக்கையை அத்தகைய அறிக்கையிலிருந்து பெறப்பட்ட ஏதேனும் தகவலை அல்லது வேறு ஏதேனும் தகவலை வெளிநாடொன்றில் நிறுவனமொன்றிற்கு அல்லது வெளிநாட்டு அரசாங்கங்களினால் தாபிக்கப்பட்டதும் நிதிசார் உளவறிதற் கூறின் தத்துவங்களையும் கடமைகளையும் ஒத்த தத்துவங்களையும் கடமைகளையுமுடையதுமான சர்வதேச ஒழுங்கமைப்பொன்றிற்கு வெளிவிடலாம்; அத்துடன்

(ண) தகவல் பரிமாற்றம் தொடர்பாக ஏதேனும் நாட்டின் அரசாங்க நிறுவனத்துடன் அல்லது முகவராண்மையுடன் ஏதேனும் உடன்படிக்கையை அல்லது ஏற்பாட்டைச் செய்து கொள்ளலாம்.

(2) கொடுக்கல் வாங்கல் அல்லது எத்தனிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கலொன்று -

(அ) ஏதேனும் சட்ட விரோதமான செயற்பாட்டிற்கு ஏற்றிக் கூறப்படற்பாலதான வருவாய்களை ஈடுபடுத்தக்கூடும்; அல்லது

(ஆ) 2006ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க, பணம் தூய்தாக்கலை தடைசெய்யும் சட்டத்தின் கீழ், பணம் தூய்தாக்கல் தவறைப் புரிவதுடன் தொடர்புடையதாயிருக்கலாம்; அல்லது

(இ) 2005ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க, பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாயச் சட்டத்தின் கீழ் தவறொன்றைப் புரிவதற்கான ஆயத்தமாக இருக்கலாம்,

எனச் சந்தேகிப்பதற்கு நிதிசார் உளவறிதற் கூறுக்கு நியாயமான ஏதுக்கள் இருக்குமிடத்து -

(i) கொடுக்கல் வாங்கல் அல்லது எத்தனிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல் தொடர்பாக அவசியமான விசாரணைகளைச் செய்வதற்கு; அத்துடன்

(ii) அது தோதானதென நிதிசார் உளவறிதற் கூறுகருதுமாயின், விசாரணைகளில் சட்டத்தை வலுவுக்கிடும் இயைபான முகவராண்மையுடன் கலந்தாலோசிப்பதற்கு அல்லது அதற்கு மதியுரை வழங்குவதற்கு.

என நிதிசார் உளவறிதற் கூறை அனுமதிப்பதற்காக நிதிசார் உளவறிதற் கூறினால் தீர்மானிக்கப்பட வேண்டிய காலப்பகுதியொன்றுக்கு (இது ஏழு நாட்களுக்கு மேற்படாதிருக்கலாம்) அக் கொடுக்கல் வாங்கல்களினால் அல்லது எத்தனிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கலினால் பாதிக்கப்பட்ட நிதிகள் தொடர்பில் கொடுக்கல் வாங்கலை அல்லது எத்தனிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கலை அல்லது வேறு ஏதேனும் கொடுக்கல் வாங்கலைத் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டாமென்று எழுத்தினால் அல்லது இருபத்துநாலு மணித்தியாலங்களுள் எழுத்தில் உறுதிப்படுத்தப்பட வேண்டிய தொலைபேசி அழைப்பினால் அது நிறுவனத்தைப் பணிக்கலாம்.

(3) நிதிசார் உளவறிதற் கூறு அத்தகைய விண்ணப்பத்திற்கான ஏதுக்களைத் தந்து (2)ஆம் உட்பிரிவில் விதித்துரைக்கப்பட்ட காலப்பகுதியின் நீடிப்பொன்றிற்கென கொழும்பில் நடைபெறும் மேல் மாகாணத்தின் மேல் நீதிமன்றத்திற்கு மறுகட்சியற்ற விண்ணப்பமொன்றைச் செய்யலாம்.

16. நிதிசார் உளவறிதற் கூறு ஏதேனும் அறிக்கையை அல்லது தகவலை, வெளிநாடொன்றின் அரசாங்கத்தினால் தாபிக்கப்பட்டதும் 17ஆம் பிரிவின் கீழ் அத்தகைய தகவல் பரிமாற்றம் தொடர்பில் நிதிசார் உளவறிதற் கூறுக்கும் நிறுவனம், முகவராண்மை ஒழுங்கமைப்பு அல்லது அதிகாரசபை ஒன்றிற்கும் இடையிலான உடன்படிக்கையில் அல்லது ஏற்பாட்டில் தரப்பட்டுள்ளவாறான அத்தகைய நியதி, நிபந்தனைகள் மீது நிதிசார் உளவறிதற் கூறின் தத்துவங்களையும் கடமைகளையும் ஒத்த தத்துவங்களையும் கடமைகளையும் கொண்டதுமான வெளிநாட்டு அரசொன்றின் அல்லது சர்வதேச ஒழுங்கமைப்பின் நிறுவனம் அல்லது குழுவுக்கு அல்லது வேறு நிறுவனத்திற்கு அல்லது முகவராண்மைக்கு வெளிவிடலாம்.

17. (1) நிதிசார் உளவறிதற்கூறு அமைச்சரின் அங்கீகாரத்துடன் -

(அ) வெளிநாட்டு அரசாங்கமொன்றினால் தாபிக்கப்பட்டதும் நிதிசார் புலனாய்வுக்கூறின் தத்துவங்களையும் கடமைகளையும் ஒத்த தத்துவங்களையும் கடமைகளையுடையதுமான வெளிநாட்டு அரசொன்றின் அல்லது வெளிநாட்டு அரசுகளின் அல்லது சர்வதேச ஒழுங்கமைப்பொன்றின் நிறுவனம் அல்லது முகவராண்மை ஒன்றுடன்; அத்துடன்

(ஆ) சட்டத்தை வலுவுக்கிடும் வெளிநாட்டு முகவராண்மையொன்றுடன் அல்லது வெளிநாட்டு மேற்பார்வை அதிகாரசபையொன்றுடன்,

நிதிசார் உளவறிதற் கூறுக்கும் நிறுவனத்திற்கும், அதிகாரசபைக்கும் அல்லது முகவராண்மைக்கும் இடையில் தகவல் பரிமாற்றம் தொடர்பில் எழுத்திலான உடன்படிக்கையொன்றை அல்லது ஏற்பாடொன்றைச் செய்துகொள்ளலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் பரிமாற்றம் செய்யப்பட்ட தகவலானது, சட்டவிரோதமான செயலொன்றாக அமையும் தவறொன்றின் அல்லது பொருளளவில் அத்தகைய தவறையொத்த தவறொன்றின் புலனாய்வுக்கு அல்லது அதற்கெதிரான குற்றவழக்குத் தொடுப்புக்கு இயைபானதாகும் எனச் சந்தேகிப்பதற்கு நியாயமான ஏதுக்கள் நிதிசார் உளவறிதற் கூறுக்கு , நிறுவனத்திற்கு அல்லது முகவராண்மைக்கு இருக்கின்றதான தகவலாதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைகள் அல்லது ஏற்பாடுகள் பின்வருவனவற்றை உள்ளடக்குதல் வேண்டும் :-

(அ) சட்டவிரோதமான செயலொன்றாக அமையும் ஏதேனும் செயலின் அல்லது பொருளளவில் அத்தகைய தவறையொத்த தவறொன்றின் புலனாய்வுக்கு அல்லது அதற்கெதிரான குற்ற வழக்குத் தொடுப்புக்கு இயைபான நோக்கங்களுக்கான தகவலின் பாவனையின் மீதான மட்டுப்பாடுகள் ; அத்துடன்

(ஆ) தகவல் அந்தரங்கமானதொரு முறையில் கையாளப்படுதல் வேண்டும் என்பதுடன், நிதிசார் உளவறிதற்கூறின் வெளிப்படையான சம்மதமின்றி மேலும் வெளிவிடப்படுதலாகாது என்ற விதப்புரை.

18. (1) நிதிசார் உளவறிதற் கூறு அல்லது அதனால் அது சார்பில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆள் 15ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (உ) என்னும் பந்தியின் தேவைப்பாடுகளுக்கமைய சட்டத்துடன் அல்லது சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட எவையேனும் பணிப்புக்கள், கட்டளைகள், விதிகள் அல்லது ஒழுங்கு விதிகளுடன் இணங்கியொழுகப்படுவதை உறுதிப்படுத்தும் நோக்கத்திற்காக நிறுவனமொன்றின் பதிவேடுகளைப் பரிசோதனை செய்யலாம் என்பதுடன், அதன் தொழிலை அல்லது தகவலையிட்டு விசாரணையும் செய்யலாம். அத்துடன் அந்நோக்கத்திற்காக-

(அ) இச்சட்டத்தின் பாகங்கள் 1, 11 மற்றும் 111 என்பவற்றின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு இயைபான பதிவேடுகள் உள்ளன என நியாயமான ஏதுக்களின்மீது நிதிசார் உளவறிதற் கூறு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆள் நம்புகின்ற எவையேனும் வளவுகளில் ஏதேனும் நியாயமான நேரத்தில் உட்புகலாம்;

(ஆ) வளவுகளுள் காணப்பட்ட கணனி முறைமையில் அடங்கியுள்ள அல்லது அதனிற் கிடைக்கக்கூடியதாகவுள்ள ஏதேனும் தரவைப் பரிசோதனை செய்வதற்காக அத்தகைய முறைமையை அல்லது தரவுவழிமுறைப்படுத்தும் முறைமையைப் பாவிக்கலாம் அல்லது பாவிக்கச் செய்விக்கலாம்;

(இ) தரவிலிருந்து அச்சுப்படியொன்றின் அல்லது வேறு தெளிவான வெளிவருகை வடிவத்தில் ஏதேனும் பதிவை மீள உருவாக்கம் செய்யலாம் அல்லது செய்விக்கலாம் என்பதுடன், அச்சுப்படியை அல்லது வேறு வெளிவிடுகையைப் பரிசோதனைக்காக அல்லது பிரதி பண்ணுவதற்காக அப்புறப்படுத்தலாம்; அத்துடன்

(ஈ) ஏதேனும் பதிவின் பிரதிகளை எடுப்பதற்கு வளவுகளில் ஏதேனும் பிரதிபண்ணும் உபகரணத்தைப் பயன்படுத்தலாம் அல்லது பயன்படுத்துவிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட வளவுகளின் சொந்தக்காரரும் அல்லது அவற்றிறக்குப் பொறுப்பான ஆளும் அத்துடன் அங்கு காணப்படும் ஒவ்வோர் ஆளும் நிதிசார் உளவறிதற் கூறிற்கு அல்லது எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட ஆளுக்கு அதன் அல்லது அவரின் பொறுப்புக்களை நிறைவேற்றுவதனை அதற்கு அல்லது அவருக்கு இயலச் செய்வதற்குத் தேவைப்படும் நியாயமான எல்லா உதவிகளையும் வழங்குதல் வேண்டும் என்பதுடன், இச்சட்டத்தின் பாகங்கள் 1, 11 மற்றும் 111 என்பவற்றின் அல்லது சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகளின் நிர்வாகம் தொடர்பில் அது அல்லது அவர் நியாயமாகத் தேவைப்படுத்தக் கூடியவாறான ஏதேனும் தகவலை அதற்கு அல்லது அவருக்குக் கொடுத்துதவுதலும் வேண்டும்.

(3) நிதிசார் உளவறிதற் கூறானது, அத்தகைய பரிசோதனையிலிருந்து கிடைத்த அல்லது அதிலிருந்து பெறப்பட்ட ஏதேனும் தகவல் சந்தேகத்திற்கிடமானது அல்லது இச்சட்டத்துடன் இணங்கியொழுகாமைக்கான அல்லது சட்டவிரோதமான செயற்பாடொன்றாக அமையும் தவறொன்றுக்கான புலனாய்வுக்கு இயைபானது எனச் சந்தேகிப்பதற்கு நியாயமான காரணத்தைக் கொண்டிருக்குமாயின். அத்தகவலை சட்டத்தை வலுவுக்கிடும் தோதான உள்ளூர் அல்லது வெளிநாட்டு அதகாரசபைக்கு அல்லது மேற்பார்வை அதிகாரசபைகளுக்கு அனுப்பிவைக்கலாம்.

19.(1) இச்சட்டத்தின் பாகங்கள் 1, மற்றும் 11 என்பவற்றால் அல்லது அவற்றின் கீழ் விதித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுமாறு தேவைப்படுத்தப்பட்ட ஆளொருவர் அவ்வாறு இணங்கியொழுகத் தவறுமிடத்து, இயைபான இணங்கியொழுகாமையின் தன்மையையும் பாரதூரமான தன்மையையும் கருத்திற்கொண்டு விதித்துரைக்கப்படக் கூடியவாறான தண்டப்பணமொன்றுக்கு ஆளாதல் வேண்டும்;

ஆயின் எவ்வாறாயினும் அத்தகைய தண்டப்பணம் ஏதேனும் குறித்த விடயத்தில் பத்து இலட்சம் ரூபா பணத்தொகையொன்றை விஞ்சுதலாகாது. முன்னைய சந்தர்ப்பமொன்றில் தண்டப்பணத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ள ஆளொருவர் அதனையடுத்து மேலும் ஏதேனும் சந்தர்ப்பத்தில் தேவைப்பாடொன்றுக்கு இணங்கியொழுகத் தவறுமிடத்து, அத்தகைய ஆள் அத்தகைய முதலாவது சந்தர்ப்பத்தின் பின்னரான ஒவ்வொரு இணங்கியொழுகாமைக்கும் முதலாவது சந்தர்ப்பத்தில் தண்டப்பணமொன்றாக விதிக்கப்பட்ட தொகையின் இரு மடங்கைக் கொண்ட பணத்தொகையான மேலதிகத் தண்டப்பணமொன்றைச் செலுத்துவதற்கு ஆளாதல் வேண்டும்.

(2) நிதிசார் உளவறிதற் கூறு இப்பிரிவால் விதிக்கப்பட்ட தண்டப்பணத்தைச் சேகரிப்பதற்கும் பொறுப்பாதல் வேண்டும் என்பதுடன், அவ்வாறு சேகரிக்கப்பட்ட பணம் திரட்டு நிதியத்திற்கு வரவு வைக்கப்படுதலும் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் நியதிகளின்படி தண்டப்பணமொன்றுக்கு ஆளாகும் ஆளொருவர் அத்தகைய தண்டப் பணத்தைச் செலுத்தத் தவறுவாராயின், கூறானது தண்டப் பணத்தின் கொடுப்பனவைத் தேவைப்படுத்தும் கட்டளையொன்றுக்காக கொழும்பில் நடைபெறும் மேல் மாகாணத்தின் மேல் நீதிமன்றத்திற்கு மறுகட்சியற்ற விண்ணப்பமொன்றைச் செய்யலாம் என்பதுடன், அத்தகைய கட்டளை ஆக்கப்படுவதன் மீது அத்தகைய தொகையானது நீதி மன்றத்தால் விதிக்கப்பட்ட குற்றப்பணமொன்று என்றாற் போன்ற அதே முறையில் அறவிடப்படற்பாலதாதலும் வேண்டும்.

(4) இப்பிரிவின் கீழ் தண்டப்பணமொன்று விதிக்கப்படுதலானது, அத்தகைய நிறுவனத்தை ஒழுங்கு முறைப்படுத்துவதற்கு அல்லது மேற்பார்வை செய்வதற்கு ஏதேனும் ஏல்தகவான எழுத்திலான சட்டத்தின் அல்லது விதிகளின் நியதிகளின்படி அனுமதிக்கப் படக்கூடியவாறு தொழில் அல்லது உயர்தொழிலொன்றைக் கொண்டு நடாத்துவதினின்று அத்தகைய நிறுவனத்தை இடைநிறுத்தம் செய்தல் அல்லது தொழில் அல்லது உயர் தொழிலைக் கொண்டு நடாத்துவதற்கு அளிக்கப்பட்ட உரிமமொன்றை அல்லது அதிகாரத்தை இல்லாதொழித்தல் உட்பட, ஆனால் அதற்கு மட்டுப்படுத்தப்படாமல் ஏதேனும் ஒழுங்குமுறைப்படுத்தும் அல்லது ஒழுங்காற்று நடவடிக்கைகளை எடுப்பதினின்றும் நிறுவனமொன்றின் மேற்பார்வை அதிகார சபையொன்றை அல்லது ஒழுங்குபடுத்தும் அல்லது சுய ஒழுங்குபடுத்தும் அதிகாரசபையொன்றைத் தடை செய்தலாகாது.

(5) இப்பிரிவின் கீழ் ஆட்கள் குழுவொன்றின்மீது தண்டப்பணமொன்று விதிக்கப்படுமிடத்து -

(அ) ஆட்கள் குழு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக இருப்பின் (1)ஆம் உட்பிரிவின் கீழ் தேவைப்பாடுகள் விதிக்கப்பட்ட நேரத்தில் அக்குழுவின் பணிப்பாளரொருவராக, பொது முகாமையாளராக, செயலாளராக அல்லது அதனையொத்த வேறு அலுவலர் ஒருவராக இருந்த ஒவ்வோராலும் ; அல்லது

(ஆ) அக்குழுவானது கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக இல்லாதவிடத்து, அத்தகைய தேவைப்பாடுகள் விதிக்கப்பட்ட நேரத்தின் அக்குழுவின் தலைவராக, முகாமையாளராக, செயலாளராக, பங்காளராக அல்லது அதனையொத்த வேறு அலுவலராக இருந்த ஒவ்வோராளும்.

தாம் தேவைப்பாட்டிற்கு இணங்கியொழுகத் தவறியமை பற்றி அறிந்திருக்கவில்லையென அல்லது அதனுடன் இணங்கியொழுகுவதை உறுதிப்படுத்துவதற்குத் தாம் எல்லா விழிப்புக் கவனத்தையும் பிரயோகித்தார் என எண்பித்தாலன்றி, அத்தகைய தண்டப்பணத்தைச் செலுத்துவதற்கு ஆளாதல் வேண்டும்.

(6) நிதிசார் உளவறிதற் கூறு (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்குப் பங்கமின்றி. ஏதேனும் நிதிசார்ந்த நிறுவனம் சொல்லப்பட்ட பாகங்களின்கீழ் அதன் கடப்பாடுகளுடன் இணங்கியொழுகுவதை உறுதிப்படுத்துவதற்கு அத்தகைய பணிப்புரையில் குறித்துரைக்கப்பட்ட

செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு அத்தகைய நிறுவனத்தைத் தேவைப்படுத்தி நியாயமான ஏதுமின்றி இச்சட்டத்தின் பாகம்1, 11 அல்லது 111 என்பதிலுள்ள எவையேனும் கடப்பாடுகளுடன் முழுமையாக அல்லது பகுதியளவில் இணங்கியொழுகத் தவறியுள்ள அத்தகைய நிறுவனத்திற்குப் பணிப்புரையொன்றை வழங்கலாம்.

(7) நிறுவனமொன்று (6)ஆம் உட்பிரிவின் கீழ் வழஙகப்பட்ட பணிப்புரையொன்றுடன் இணங்கியொழுகத் தவறுமிடத்து, நிதிசார் உளவறிதற் கூறு, கொழும்பில் நடைபெறும் மேல் மாகாணத்தின் மேல் நீதிமன்றத்திற்கு விண்ணப்பம் செய்து நிறுவனமொன்று அதனால் (6) ஆம் உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட பணிப்புரைக்கு நியாயமான காரணமின்றி முழுமையாக அல்லது பகுதியளவில் இணங்கியொழுகத் தவறியுள்ளதென நீதிமன்றத்தைத் திருப்திப்படுத்துவதன்மீது, அத்தகைய கடப்பாட்டுடன் இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்துவதற்கு அவசியமானதென நீதிமன்றம் கருதுகின்றவாறான அத்தகைய நியதிகளைக் கொண்ட கட்டளையொன்றை அந்நிறுவனத்திற்கும் அந்நிறுவனத்தின் எல்லா அலுவலா்களுக்கும் அல்லது ஊழியா்களுக்கும் எதிராகப் பெறலாம்.

20.(1) இப்பிரிவின் ஏற்பாடுகள் நிதிசார் உளவறிதற் கூறின் பணிப்பாளர், அலுவலர், ஊழியர் அல்லது முகவர் ஒருவராக இருக்கின்றவரான அல்லது இருந்துள்ளவரான எவரேனும் ஆள் தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(2) இச் சட்டத்தின் கீழ் தமது கடமைகளை நிறைவேற்றுகின்ற அல்லது தமது பணிகளைப் புரிகின்ற நோக்கத்திற்குத் தவிர,அல்லது ஏதேனும் நீதிமன்றத்தால் அவ்வாறு செய்யுமாறு சட்டமுறையாகத் தேவைப்படுத்துப்படுமிடத்து தவிர, (1)ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆள் இச்சட்டத்தின் கீழ் அவரது கடமைகளை நிறைவேற்றுகையில் அல்லது பணிகளைப் புரிகையில் அவரால் பெறப்பட்டுள்ள அல்லது அவர் அறிந்திருக்கும் ஏதேனும் தகவலை அல்லது கருமத்தை பின்வரும் நோக்கங்களுள் ஒன்றுக்காகவோ அல்லது பலவற்றுக்காகவோ தவிர, வெளிவிடுதலாகாது, அதாவது -

(அ) இச் சட்டத்தின் அல்லது அது தொடர்பிலான வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டில் அடங்கியுள்ள ஏதேனும் தேவைப்பாட்டுடன் இணங்கியொழுகுதலைப் பெறுவதற்கு அல்லது அதனைக் தட்டிக் கழிப்பதனைக் கண்டுபிடிப்பதற்கு;

(ஆ) 2006ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க, பணம் தூய்தாக்கலைத் தடைசெய்யும் சட்டத்தை அல்லது 2005ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க, பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாயச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு; அல்லது

(இ) (423ஆம் அத்தியாயமான) செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 50அ என்னும் பிரிவின் நோக்கங்களுக்கு.

21. நிதிசார் உளவறிதற் கூறு அல்லது அதன் நியதிச்சட்டப் பணிகளைப் புரிவதற்கென நிதிசார் உளவறிதற் கூறினால் நியமிக்கப்பட்ட எவரேனும் அலுவலர், முகவர் அல்லது ஆள இச் சட்டத்தின் கீழ் அதன் அல்லது அவரது நியதிச் சட்டப்பணிகள் எவற்றையும் புரிகையில் அல்லது அவற்றின் கருதப்பட்ட புரிகையில், ஏதேனும் சட்டமுறையான செயலுக்கு அல்லது செய்யாமைக்கு, அச்செயல் அல்லது செய்யாமை தீய எண்ணத்துடன் செய்யப்பட்டது எனக் காட்டப்பட்டாலன்றி, நட்டஈடுகளுக்கு ஆளாதல் ஆகாது.

## பாகம் IV

### நிறுவனமொன்றின் மேற்பார்வை அதிகாரசபையினதும் கணக்காய்வாளர்களினதும் பணிகள்

22. (1) நிறுவனமொன்றின் மேற்பார்வை அதிகாரசபையொன்று அல்லது கணக்காய்வாளர் ஒருவர் -

(அ) ஏதேனும் சட்ட விரோதமான செயற்பாட்டிற்காக ஆளொருவரின் அல்லது ஆட்களின் புலனாய்வொன்றுக்கு அல்லது குற்ற வழக்குத் தொடுப்புக்கு இயைபான;

(ஆ) 2006ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க, பணம் தூய்தாக்கலைத் தடைசெய்யும் சட்டத்தின் அல்லது 2005ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க, பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாயச் சட்டத்தின் ஏற்பாடுகளை வலுவுக்கிடுவதற்குத் துணைபுரிக்கின்ற;

(இ) சட்டவிரோதமான செயலொன்றாக அமையும் ஏதேனும் தவறைப் புரிதல் தொடர்பான; அல்லது

(ஈ) பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் என்னும் தவறுக்கு ஆயத்தம் செய்யும்.

ஏதேனும் கொடுக்கல் வாங்கல் அல்லது எத்தனிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல் தொடர்பான தகவலாக இருக்கக்கூடும் எனச் சந்தேகிப்பதற்கு நியாயமான ஏதுக்கள் இருக்குமிடத்து, அந் நிறுவனத்தின் மேற்பார்வை அதிகாரி அல்லது கணக்காய்வாளர் அந்தக் கொடுக்கல் வாங்கலை அல்லது எத்தனிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கலை நிதிசார் உளவறிதற் கூறுக்கு அறிவித்தல் வேண்டும்.

(2) மேற்பார்வை அதிகாரசபை நிதிசார் உளவறிதற் கூறின் வேண்டுகோளின் பேரில் நிறுவனம் தொடர்பிலான ஏதேனும் கொடுக்கல் வாங்கலை அல்லது வேறு கருமத்தையிட்டு ஏதேனும் பரிசோதனையை மேற்கொள்ளுதலும் அத்தகைய பரிசோதனையையிட்டு நிதிசார் உளவறிதற்கூறுக்கு அறிக்கையிடலும் வேண்டும்..

(3) நிதிசார் உளவறிதற் கூறு அத்தகைய மேற்பார்வை அதிகாரசபையால் ஒழுங்குபடுத்தப்படும் நிறுவனமொன்றுக்கு வழிகாட்டல்களை, பணிப்புக்களை அல்லது ஒழுங்குவிதிகளை வழங்குதல் தொடர்பில் மேற்பார்வை அதிகார சபையைக் கலந்தாலோசித்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட எல்லா வழிகாட்டல்களினதும் பணிப்புக்களினதும் அல்லது ஒழுங்கு விதிகளினதும் பிரதிகளை மேற்பார்வை அதிகாரசபைக்குக் கொடுத்துதவுதலும் வேண்டும்.

23. நிறுவனமொன்றின் இயைபான அதிகாரசபை -

(அ) கிரமமான பரிசோதனைகளின் ஊடாக நிறுவனமொன்று இச்சட்டத்துடன் இணங்கியொழுகுவதை சரிபார்த்தல் வேண்டும் என்பதுடன், ஏதேனும் இணங்கியொழுகாமையைப் பற்றி கூறுக்கு அறிவித்தலும் வேண்டும்;

(ஆ) சட்டவிரோதச் செயற்பாடொன்றாக அமையும் ஏதேனும் தவறு தொடர்பில் ஏதேனும் புலனாய்வில், குற்ற வழக்குத் தொடுப்பில் அல்லது வழக்கு நடவடிக்கைகளில் சட்டத்தை வலுவுக்கிடும் முகவராண்மைகளுடனும் நிதிசார் உளவறிதற் கூறுடனும் ஒத்துழைத்தல் வேண்டும்.

## பாகம் V

## எல்லைப்புறத்தில் நாணயத்தை அறிக்கையிடுதல்

24. (1) ஆளொருவர் -

(அ) இலங்கையை விட்டுச் செல்லவிருக்குமிடத்து அல்லது இலங்கையை வந்தடைந்திருக்குமிடத்து; அல்லது

(ஆ) கப்பலில் அல்லது வானூர்தியில் ஏறவிருக்குமிடத்து அல்லது புறப்படவிருக்குமிடத்து அல்லது ஏறியிருக்குமிடத்து அல்லடு புறப்பட்டிருக்குமிடத்து,

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் நியாயமானதும் அவசியமானதுமான அத்தகைய உதவியுடனும் அவசியமாக இருக்கின்ற பலவந்தத்தின் உபயோகத்துடனும் -

(i) ஆளொருவர் அவருடன் அல்லது அவரது பொதியில் வைத்திருக்கும் ஏதேனும் பொருளைப் பரிசோதிக்கலாம்; அத்துடன்

(ii) இச் சட்டத்தின் 27ஆம் பிரிவின் கீழ் தவறொன்று புரியப்பட்டிருக்கக்கூடும் அல்லது புரியப்படுகின்றது எனச் சந்தேகிப்பதற்கு அலுவலருக்கு நியாயமான ஏதுக்கள் இருப்பின், எந்தக்காசு அல்லது கொண்டு வருபவரால் கைமாற்றத்தகு சாதனங்கள் தொடர்பில் (5) ஆம் உட்பிரிவின்கீழ் அறிக்கையிடுதலொன்று தேவைப்படுத்தப்படுகின்றதோ அந்த ஏதேனும் பணத்தை அல்லது கொண்டு வருபவரால் கைமாற்றத்தகு சாதனங்களை அவ்வாள் தம்மகத்தே வைத்திருக்கின்றாரோ எனத் தீர்மானிக்கும் நோக்கத்திற்காக அவ்வாளைத்தேடுதல் செய்தல் வேண்டும்.

(2) ஆளொருவர் அதே பால் நிலையைத்தைச் சேர்ந்த ஆளொருவரால் தவிர தேடுதல் செய்யப்படுதலாகாது.

(3) அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் அத்துடன் அத்தகைய அலுவலருக்குத் துணைபுரியும் எவரேனும் ஆள் இப்பிரிவின் (1) ஆம் அல்லது (2)ஆம் உட்பிரிவுகளினால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகிக்கும் நோக்கங்களுக்காக ஏதேனும் கப்பலை, வானூர்தியை அல்லது ஊர்தியை நிறுத்தலாம், அதில் ஏறலாம் அத்துடன் தேடுகை செய்யலாம்.

(4) அதிகாரமளிக்கப்பட்ட அலுவலலொருவர் மேலே (1)ஆம் அல்லது (2)ஆம் உட்பிரிவுகளின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஒரு பரிசோதனையின் அல்லது தேடுகையின்போது காணப்பட்ட காசு அல்லது கொண்டு வருபவரால் கைமாற்றத்தகு சாதனம் சட்டவிரோதமான செயற்பாடொன்றைப் புரிதல் தொடர்பான சான்றை அளிக்கலாம் என நம்புவதற்கு நியாயமான ஏதுக்களைக் கொண்டிருக்குமிடத்து, அலுவலர் அப்பணத்தை அல்லது கொண்டு வருபவரால் கைமாற்றத்தகு சாதனத்தை இருபத்துநான்கு மணித்தியாலங்களுக்குள் பறிமுதல் செய்யலாம்.

(5) நாலாம் உட்பிரிவின் கீழ் காசையும் கொண்டுவருபவரால் கைமாற்றத்தகு சாதனத்தையும் பறிமுதல் செய்துள்ள அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் அத்தகைய பறிமுதலைக் கூறுக்கு அறிவித்தல் வேண்டும்.

25. அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் ஏதேனும் வடிவத்தில் அல்லது முறையில் இலங்கைக்குள் இறக்குமதி செய்யப்படுகின்ற அல்லது இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்ற ஏதேனும் காசு அல்லது கொண்டு வருபவரால் கைமாற்றத்தகு சாதனம் -

(அ) ஏதேனும் சட்டவிரோதமான தொழிற்பாட்டைப் புரிந்ததிலிருந்து பெறப்பட்டது; அல்லது

(ஆ) சட்டவிரோதமான செயற்பாடொன்றைப் புரிவதில் பயன்படுத்துவதற்கு எவரேனுமாளினால் முன்னப்பட்டது; அல்லது

(இ) 2005ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க, பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாயச் சட்டத்தின் நியதிகளின்படி பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பிலான ஏதேனும் தவறுக்கு அல்லது அது தொடர்பில் பயன்படுத்துவதற்கு முன்னப்பட்டது,

எனச் சந்தேகிப்பதற்கு நியாயமான ஏதுக்கள் இருப்பின் அவர் இப்பாகத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க அதனைப் பறிமுதல் செய்யலாம் என்பதுடன் தடுத்தும் வைக்கலாம்.

26. (1) இருபத்து நான்காம் பிரிவின் (4)ஆம் உட்பிரிவின் கீழ் அல்லது 25ஆம் பிரிவின் கீழ் பறிமுதல் செய்யப்பட்ட காசும் கொண்டுவருபவரால் கைமாற்றத்தகு சாதனங்களும் -

(அ) ஏதேனும் சட்டவிரோதமான செயற்பாட்டைப் புரிவதினின்று பெறப்பட்டன அல்லது தவறொன்றைப் புரிவதில் அல்லது 2005ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க, பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாயச் சட்டத்தின் கீழ் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பான தவறொன்று தொடர்பில் எவரேனுமாளினால் பயன்படுத்துவதற்கு முன்னப்பட்டது எனச் சந்தேகிப்பதற்கு நியாயமான ஏதுக்கள் உள்ளன; அத்துடன்

(ஆ) அவற்றின் மூலவள அல்லது பெறுகை மேலும் புலனாய்வு செய்யப்படும்பொழுது அவற்றைத் தொடர்ந்து தடுத்து வைத்தலானது நியாயப்படுத்தப்படுகின்றது.

என அதற்குச் செய்யப்பட்ட விண்ணப்பத்தின்மீது கொழும்பில் நடைபெறும் மேல் மாகாணத்தின் மேல் நீதிமன்றம் திருப்திப்படுவதன் மீது பறிமுதலின் தேதியிலிருந்து மூன்று மாதங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்குத் தொடர்ந்து தடுத்து வைப்பதற்கான கட்டளையொன்றை வழங்கினாலன்றி, பறிமுதலின் பின்னர் ஐந்த வேலை நாட்களுக்கு மேல் தடுத்துவைக்கப்படுதலாகாது.

(2) நீதிமன்றம், இயைபானவர்கள் என அது தீர்மானிக்கும் திறத்தவர்களுக்கான அறிவித்தலுடன் விசாரணையின் பின்னர் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட விடயங்களையிட்டுத் திருப்திப்படுமாயின் பின்னராக, காசும் கொண்டுவருபவரால் கைமாற்றத்தகு சாதனங்களும் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட வேண்டுமெனக் கட்டளையிடலாம். ஆனால், தடுத்து வைக்கும் மொத்தக் காலப்பகுதி கட்டளையின் தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகளை விஞ்சுதலாகாது.

(3) நாலாம் உட்பிரிவிற்கமைய இப்பிரிவின் கீழ் தடுத்துவைக்கப்பட்ட காசும் கொண்டு வருபவரால் கைமாற்றத்தகு சாதனங்களும்-

(அ) அவற்றைத் தொடர்ந்து தடுத்து வைத்திருத்தல் இனிமேலும் நியாயப்படுத்தப்படவில்லையென நீதிமன்றம் ஒன்றின் கட்டளையினாலும் அவை எந்த ஆளிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்டனவோ அந்த ஆளினால் அல்லது அதற்கு உரிமைக் கோரிக்கையைத் தாபிக்கும் எவரேனுமாளினால் அல்லது அவர் சார்பில் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றின் மீதும் ;

(ஆ) அவற்றைத் தொடர்ந்து தடுத்து வைத்திருத்தல் இனிமேலும் நியாயப்படுத்தப்படவில்லை எனத் திருப்திப்படின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரால்,

முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ, அவ்வாளுக்கு விடுவிக்கப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவின் கீழ் தடுத்துவைக்கப்பட காசு எதுவும் அல்லது கொண்டு வருபவரால் கைமாற்றத்தகு சாதனங்கள் எவையும் 2006ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க, பணம் தூய்தாக்கலைத் தடைசெய்யும் சட்டத்தின் கீழ் அல்லது 2005ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க, பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாயச் சட்டத்தின் கீழ் புலனாய்வுக்கு, குற்ற வழக்குத் தொடுப்புக்கு அல்லது வழக்கு நடவடிக்கை ஒன்றிற்கு இயைபானதாயிருக்குமிடத்து விடுவிக்கப்படுதலாகாது.

(5) காசு அல்லது கொண்டுவருபவரால் கைமாற்றத்தகு சாதனங்கள் அவை பறிமுதல் செய்யப்பட்டதிலிருந்து அல்லது தடுத்து வைக்கப்பட்டதிலிருந்து ஓராண்டிற்குள் எவரேனும் ஆளினால் உரிமை கோரப்படாதவிடத்து அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர், விடயத்திற்கேற்ப அத்தகைய காசு அல்லது கைமாற்றத்தகு சாதனம் அல்லது இலங்கை ரூபாவில் அதற்குச் சமமானது மத்திய வங்கிக்கு விற்பனை செய்யப்படுவதன்மீது திரட்டு நிதியத்திற்கு இழப்பிற்குச் செய்யப்படுதல் வேண்டும் என நீதிமன்றத்திற்கு விண்ணப்பம் ஒன்றைச் செய்யலாம்.

## பாகம் VI

### தவறுகளும் பொறுப்புக்களும்

27. நிகழ்வைப்பற்றி இயைபான அதிகாரிக்கு முதலில் அறிவிக்காமல் தம்மகத்தே அல்லது தமது பொதியில் காசாக அல்லது கொண்டு வருபவரால் கைமாற்றத்தகு சாதனங்களாக விதித்துரைக்கப்பட்டதைவிடக் கூடுதலான பணத் தொகையுடன் இலங்கையைவிட்டுச் செல்கின்ற அல்லது இலங்கைக்கு வந்தடைகின்ற ஆளெவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்தால் அல்லது ஒரு ஆண்டை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனை ஆகிய இரண்டாலும் தண்டிக்கப்படுதற்காளாதல் வேண்டும்.

28. (1) பிரிவு 6, 7, 8 அல்லது 22ஆம் பிரிவின் உட்பிரிவு(1) என்பதன்கீழ் அறிக்கையொன்றைச் செய்யும் ஆளொருவர் பொய்யாதென அல்லது முக்கியமானவொரு விவரத்தில் பிறழ்வழி இட்டுச் செல்கின்றதென அறிந்து கொண்டு ஏதேனும் கூற்றைச் செய்கின்ற அல்லது எந்தக் கருமம் அல்லது விடயமில்லாமல் அக்கூற்று பொய்யானதாகும் அல்லது முக்கியமான விவரமொன்றில் பிறழ்வழி இட்டுச்செல்லும் என அவ்வாள் அறிந்திருக்கும் ஏதேனும் கருமத்தை அல்லது விடயத்தை ஏதேனும் கூற்றிலிருந்து விட்டுவிடுகின்றவிடத்து, அவர் தவறொன்றிற்கு குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மீது ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப் பணத்தால் அல்லது ஒரு ஆண்டை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனையால் அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டினாலும் தண்டிக்கப்படுவதற்காளாதலும் வேண்டும்.

(2) ஆளொருவர் 9ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவை அல்லது 10ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவை, சட்டவிரோதமான செயற்பாடொன்றாக அமையும் தவறொன்றின், பணம் தூய்தாக்கலின் தவறொன்றின் அல்லது பயங்கரவாதத்திற்கு நிதியளிக்கும் தவறொன்றின் புலனாய்வைப் பங்கப்படுத்தும் முன்னத்துடன் அல்லது தமக்கு அல்லது வேறு எவரேனும் ஆளுக்கு நேரடியாகவோ அல்லது நேரடியாகவில்லாமலோ அனுகூலமொன்றை அல்லது பண ஆதாயமொன்றைப் பெறும் நோக்கத்திற்காக வேறு எவரேனும் ஆளுக்கு நட்டத்தை அல்லது பிரதிகூலத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன் மீறுவாராயின் அவர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்தால் அல்லது இரண்டு ஆண்டுகளுக்கு மேற்படாதவொரு காலப்பகுதிக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனையால் அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டாலும் தண்டிக்கப்படற்பாலதான தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(3) ஆளொருவர் நிதிசார் உளவறிதற் கூறை அல்லது 18ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் கீழான தத்துவங்களைச் சட்டமுறையாகப் பிரயோகிக்கையில் எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட ஆளை வேண்டுமென்றே தடுக்கின்ற அல்லது தடை செய்கின்ற அல்லது அதனுடன் அல்லது அவருடன் ஒத்துழைக்கத் தவறுவராயின் அல்லது 18ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவுடன் இணங்கியொழுகத் தவறுவாராயின் அவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன்; குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்தால் அல்லது இரண்டு ஆண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனையால் அல்லது அத்தகைய குற்றப்பணம் மறியற்றண்டனை ஆகிய இரண்டாலும் தண்டிக்கப்படுவதற்காளாதலும் வேண்டும்.

(4) ஆளொருவர் ஏதேனும் ஆவணம் அல்லது பொருள் 2006ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க, பணம் தூயதாக்கலைத் தடைசெய்யும் சட்டத்தின்கீழ் அல்லது 2005ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க, பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாயச் சட்டத்தின் கீழான தவறொன்றையிட்டு புலனாய்வொன்றுக்கு இயைபானது என அறிந்திருந்தும் அல்லது அவ்வாறு நம்புவதற்கான காரணமிருந்தும் ஏதேனும் ஆவணத்தை அல்லது பொருளைப் போலியாகப் புனைவாராயின், மறைப்பாராயின் அல்லது அதன் உண்மைத் தள்மையைப் பாதிப்பதற்கான வேறு ஏதேனும் செயலைச் செய்வாராயின், அவர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்தால் அல்லது ஒரு ஆண்டை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனையால் அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டாலும் தண்டிக்கப்படற்பாலதான தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(5) ஏதேனும் ஆவணத்தை அல்லது பொருளை 2006ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க, பணம் தூய்தாக்கலைத் தடைசெய்யும் சட்டத்தின் கீழ் அல்லது 2005ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க, பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாயச் சட்டத்தின் கீழான தவறொன்றின் புலனாய்வுக்கு இயைபானது என அறிந்துகொண்டும் அல்லது அவ்வாறு நம்புவதற்கான காரணம் இருக்கையில் அத்தகைய ஆவணத்தை அல்லது பொருளை அழிக்கின்ற அல்லது வேறுவகையில் கையுதிர்க்கின்ற ஆளெவரும் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்தால் அல்லது ஒரு ஆண்டை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனையால் அல்லது அத்தகைய குற்றப்பணம் மறியற்றண்டனை ஆகிய இரண்டினாலும் தண்டிக்கப்படற்பாலான தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(6) நிறுவனமொன்றுடன் ஒரு புனைப்பெயரில் அல்லது பொய்ப் பெயரில் கணக்கொன்றை ஆரம்பிக்கின்ற அல்லது தொழிற்படுத்துகின்ற அல்லது ஆரம்பிப்பதற்கு அல்லது தொழிற்படுத்துவதற்கு அதிகாரமளிக்கின்ற ஆளொருவர் தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டும்என்பதுடன் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாவொரு குற்றப்பணத்திற்கு அல்லது ஓராண்டை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

## பாகம் VII

## நானாவிதம்

29.(1) அமைச்சர், இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்படுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட அல்லது தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் விடயத்திற்கு அல்லது இச்சட்டத்தின் கோட்பாடுகளையும் ஏற்பாடுகளையும் கொண்டு நடாத்துகின்ற அல்லது அவற்றுக்குப் பயனளிக்கின்ற நோக்கத்திற்கென ஒழுங்கு விதிகளை ஆக்கலாம்,

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் பொதுமைக்குப் பங்கமின்றிப் பின்வரும் எல்லா விடயங்கள் தொடர்பிலும் அல்லது அவற்றுள் எவையேனும் தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படலாம் :-

(அ) நிதிசார்ந்த செயற்பாட்டுச் செயலணியின் விதப்புரைகளுக்கிணங்க தோதான எதிர்மறை விளைவுக் கட்டுப்பாட்டு முறைகளை இனம் காணுதல்;

(ஆ) நிறுவனங்களினால் தொழில் உறவுகளின் தொடர்ந்துறுகின்ற கண்காணிப்பானது மேற்கொள்ளப்பட வேண்டியமுறை;

(இ) எதிர்மறைவிளைவு பற்றிய நிதிசார்ந்த செயற்பாட்டுச் செயலணியின் விதப்புரைகளைப் பிரயோகிக்கும் நோக்கத்திற்கு-

(i) எதிர்மறை விளைவு முகாமைத்துவத்தின் நோக்கங்களுக்கென வாடிக்கையாளர்களை வகுப்பாக்கம் செய்கையில் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறையும் ஏற்புடைத்தாகும் வழிகாட்டு நெறிகளும்;

(ii) எதிர்மறை விளைவுகள் கூடிய வாடிக்கையாளர்களாக வகுப்பாக்கம் செய்யப்பட்ட வாடிக்கையாளர்களுடன் தொழில் உறவுகளைத் தாபிப்பதற்கு முன்னர் சிரேஷ்ட முகாமைத்துவ அங்கீகாரம் பெறப்பட வேண்டியமுறை.

(3) அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன்,அத்தகைய வெளியீட்டின் அத்தியன்று அல்லது ஒழுங்கு விதியில் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(4) அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் அது வர்த்தகமானியில் வெளியிடப்பட்டதன் பின்னர் வசதிப்படக்கூடிய வாறான விரைவில் பாராளுமன்றத்தின் முன்னிலையில் அதன் அங்கீகாரத்திற்கெனக் கொண்டுவரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி எதுவும் அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னராகச் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) ஒழுங்குவிதியொன்று எத்தேதியன்று இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படுகின்றதோ அத்தேதி பற்றிய அறிவித்தலானது வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

30.(1) இச் சட்டத்தின் ஏற்பாடுகள் எந்த நிறுவனங்களுக்கு ஏற்புடைத்தாகின்றதோ அந்த நிறுவனங்களால் இச்சட்டம் நடைமுறைக்கு வந்ததன்பின்னர் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல் தொடர்பில் மட்டுமே இச்சட்டம் ஏற்புடைத்தாதல் வேண்டும்.

(2) இச்சட்டம் எந்த ஆட்களுக்கு ஏற்புடைத்தாகின்றதோ அந்த எல்லா ஆட்களும் அப்போதைக்கு வலுவிலுள்ள எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தில் அடங்கியுள்ளவற்றிற்கு முரணாக எது எவ்வாறிருப்பினும் இச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கி யொழுகுமாறு தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் ஏற்பாடுகள் இதன் கண் தரப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் அப்போதைக்கு வலுவிலுள்ள வேறு ஏதேனும் சட்டத்திற்கு மேலோங்கி நிற்றல் வேண்டும்.

31. நிறுவனமொன்று, தகவலை வெளிவிடுதல் மீது எழுத்திலான ஏதேனும் சட்டத்தால் அல்லது வேறுவகையில் விதிக்கப்பட்ட இரகசியம் அல்லது வேறு மட்டுப்பாடு பற்றிய ஏதேனும் கடப்பாடு எவ்வாறிருப்பினும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகுதல் வேண்டும்.

32. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

33. இச்சட்டத்தில் சந்தாப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலன்றி -

"கணக்கு" என்பது, எந்த வசதியால் அல்லது ஏற்பாட்டால் நிறுவனமொன்று பின்வருவனவற்றுள் எதனையும் செய்கின்றதோ அந்த ஏதேனும் வசதி அல்லது ஏற்பாடு என்று பொருள்படும் :-

(அ) நாணயங்களின் வைப்பீடுகளை ஏற்றல்:

(ஆ) நாணங்களின் மீளப்பெறுதல்களை அனுமதித்தல்:

(இ) நிறுவனத்தின்மீது வரையப்பட்ட காசோலைகளை அல்லது கொடுப்பனவுக் கட்டளைச் செலுத்துதல், அல்லது நிதி நிறுவனமில்லாத வேறு ஆளொருவரின் சார்பில் காசோலைகளை அல்லது கொடுப்பனவுக் கட்டளைகளைச் சேகரித்தல்:

அத்துடன் பாதுகாப்பு வைப்பீட்டுப் பெட்டகம் ஒன்றுக்கான அல்லது வேறு ஏதேனும் வடிவத்திலான பாதுகாப்பு வைப்பீட்டிற்கான ஏதேனும் வசதியையும் அல்லது ஏற்பாட்டையும் உள்ளடக்கும்:

"அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்" என்பது -

(அ) உதவிப் பொலிசுக் கண்காணிப்பாளர் ஒருவரின் பதவி வரிசைக்கு மேற்பட்ட பொலிசு அலுவலர் ஒருவர் : அல்லது

(ஆ) சுங்கக் கண்காணிப்பாளர் பதவி வரிசைக்கு மேற்பட்ட சுங்க அலுவலர் ஒருவர்

என்று பொருள்படும்;

"காசு" என்பது, வழங்கப்படும் நாட்டில் சட்டமுறையான நாணயமாகக் குறித்தொதுக்கப்பட்ட ஏதேனும் நாணயக்குற்றி அல்லது கடதாசிப் பணம் என்று பொருள்படும் என்பதுடன் கொண்டுவருபவரால் மாற்றக்கூடிய முறிகள், பிரயாணிகளின் காசோலைகள், அஞ்சல் சீட்டுக்கள் மற்றும் காசுக் கட்டளைகள் என்பவற்றையும் உள்ளடக்கும்:

"நாணயம்" என்பது, சட்டமுறையான நாணயமாகக் குறித்தொதுக்கப்பட்டதும் சம்பிரதாய பூர்வமாக வழங்கப்படும் நாட்டில் பரிவர்த்தனை ஊடகமொன்றாகப் பயன்படுத்தப்படுவதும் அத்துடன் ஏற்றுக் கொள்ளப்பட்டதுமான இலங்கையின் அல்லது வெளிநாடொன்றின் நாணயம் என்று பொருள்படும் ;

"வாடிக்கையாளர்" என்பது, ஒரு கொடுக்கல் வாங்கல் அல்லது கணக்கொன்று தொடர்பில் -

(அ) எந்த ஆளின் பெயரில் ஒரு கொடுக்கல் வாங்கல் அல்லது கணக்கொன்று ஏற்பாடு செய்யப்படுகின்றதோ அல்லது பொறுப்பேற்கப்படுகின்றதோ அந்த ஆளையும்;

(ஆ) கொடுக்கல் வாங்கல் அல்லது கணக்கொன்றுக்கு கையொப்பமிடும் ஆளொருவரையும்;

(இ) எந்த ஆளுக்கு கொடுக்கல் வாங்கல் ஒன்று சாட்டுதல் செய்யப்பட்டுள்ளதோ அல்லது கைமாற்றப்பட்டுள்ளதோ அந்த எவரேனும் ஆளையும் ;

(ஈ) கொடுக்கல் வாங்கலொன்றை மேற்கொள்வதற்கு அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளையும்;அல்லது

(உ) விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய வேறு ஆளையும்,

உள்ளடக்கும்;

"குறித்தொதுக்கப்பட்ட நிதிசாரா தொழில் " என்பது -

(அ) தனியாள் அல்லது கூட்டமைப்பு முகாமைத்துவத்தையும்;

(ஆ) வேறு ஆட்களின் சார்பில் நிதியை அல்லது பணத்தை முதலீடு செய்தல், நிர்வகித்தல் அல்லது முகாமை செய்தல் என்பதையும்;

(இ) வேறு ஆட்கள் சார்பில் காசை அல்லது திரவப்பிணையங்களைப் பாதுகாப்பாக வைத்திருத்தலையும் நிர்வகித்தலையும்;

(ஈ) பாதுகாப்பு, கட்டுக்காப்புச் சேவைகளையும்;

(உ) காப்புறுதியைப் பொறுப்பேற்றலும் நிலை நிறுத்தலும் மற்றும் முகவர்களாலும் தரகர்களாலும் காப்புறுதி இடைவருகை செய்தலையும் ;

(ஊ) நம்பிக்கைப் பொறுப்பு நிருவாகம் அல்லது முதலீட்டு முகாமைத்துவம் அல்லது மூப்போய்வு உதவு தொகைத்திட்டம்;

(எ) கசினோக்கள், சூதாட்ட இல்லங்கள் அல்லது லொத்தர் ஒன்றை நடாத்துதல், தங்கள் வாடிக்கையாளர்கள் விதித்துரைக்கப்பட்ட தொடக்க நிலைக்குச்சமமான அல்லது அதற்கு மேற்பட்ட கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடும்போது, இணையத்தின் ஊடாக அத்தகைய தொழிலைக் கொண்டு நடாத்தும் ஆளொருவர் உட்பட;

(ஏ) ஆதன முகவர்கள், அவர்கள் ஆதனங்களின் கொள்வனவு மற்றும் விற்பனை தொடர்பில் தங்கள் வாடிக்கையாளர்களுக்காக கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடும்பொழுது;

(ஐ) விலையுயர்ந்த உலோகங்களின் வியாபாரிகளும் விலையுயர்ந்த கற்களிலும் ஓரளவு விலையுயர்ந்த கற்களிலும் வியாபாரம் செய்பவர்கள், அவர்கள் விதித்துரைக்கப்பட்ட தொடக்க நிலைக்குச் சமமான அல்லது அதற்கு மேற்பட்ட காசுக் கொடுக்கல் வாங்கலில் வாடிக்கையாளருடன் ஈடுபட்டிருக்கும்போது 1993ஆம் ஆண்டின் 50ஆம் இலக்க, இரத்தினக் கற்கள், ஆபரணங்கள் சட்டத்தினால் மேவப்பட்ட உலோகங்களும் கற்களும் உட்பட ஆனால் அவற்றிற்கு மட்டுப்படுத்தப்படாமல்;

(ஒ) சட்டவறிஞர்கள், நொத்தரிசுகள் வேறு சுயேச்சையான சட்ட உயர் தொழிலாளர்கள் மற்றும் கணக்காளர்கள்; அவர்கள் பின்வரும் எவையேனும் செயற்பாடுகள் தொடர்பில் தங்கள் வாடிக்கையாளர்களுக்காக கொடுக்கல் வாங்கலை ஆயத்தம் செய்யும்போது அல்லது கொண்டு நடாத்தும்போது:-

(i) ஆதனக் கொள்வனவு மற்றும் விற்பனை ;

(ii) வாடிக்கையாளரின் பணத்தை, பிணையங்களை அல்லது வேறு சொத்துக்களை முகாமை செய்தல்;

(iii) வங்கி, சேமிப்புக்கள் அல்லது பிணையங்கள் கணக்குகளை முகாமை செய்தல்;

(iv) கம்பெனிகளின் உருவாக்கத்திற்கு, தொழிற்பாட்டிற்கு அல்லது முகாமைத்துவத்திற்கு உதவு தொகைகளை ஒழுங்கு செய்தல் ; அத்துடன்

(v) சட்ட ஆட்களின் உருவாக்கம், தொழிற்பாடு அல்லது முகாமைத்துவம் அல்லது ஏற்பாடுகள் மற்றும் தொழில் அமைப்புக்களின் கொள்வனவும் விற்பனையும்;

(ஓ) ஒரு தொழில் ஏற்பாட்டாளர்களாகவும் மூன்றாம் திறத்தவர்களுக்கு பின்வரும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட சேவைகளின் ஏற்பாட்டாளர்களாகவும் இவ்வரைவிலக்கணத்தில் வேறுவகையில் மேவப்படாத ஒரு நம்பிக்கைப் பொறுப்பு அல்லது கம்பனிச் சேவை வழங்குநர் :-

(i) சட்ட ஆட்களை உருவமைத்தல் அல்லது முகாமை செய்தல் ;

(ii) கம்பெனியொன்றின் பணிப்பாளர் அல்லது செயலாளர் ஒருவராக, பங்காண்மையொன்றின் பங்காளர் ஒருவராக அல்லது வேறு சட்ட ஆட்கள் தொடர்பாக அதனையொத்த பதவியொன்றில் செயலாற்றுதல் அல்லது செயலாற்றுமாறு வேறோர் ஆளை ஒழுங்கு செய்தல் ;

(iii) கம்பனியொன்றுக்கு, பங்காண்மையொன்றுக்கு அல்லது வேறு எவரேனும் சட்ட ஆளுக்கு அல்லது ஏற்பாட்டிற்கு பதிவு செய்யப்பட்ட அலுவலகமொன்றை, தொழில் முகவரியொன்றை அல்லது இடவசதியை, கடிதத் தொடர்பை அல்லது நிர்வாக முகவரியை ஏற்பாடு செய்தல்;

(iv) வெளிப்படையான நம்பிக்கைப் பொறுப்பொன்றின் நம்பிக்கைப் பொறுப்பாளராகச் செயலாற்றுதல் அல்லது அவ்வாறு செயலாற்றுவதற்கு வேறோர் ஆளை ஏற்பாடு செய்தல்;

(v) வேறோர் ஆளுக்கு நியமத்தர், பங்காளர் ஒருவராகச் செயலாற்றுதல் அல்லது அவ்வாறு செயராற்றுவதற்கு வேறோர் ஆளை ஏற்பாடு செய்தல்;

(ஔ) கரைகடந்த கூறுகளுக்கு எழுத்திலான வேறு சட்டங்களில் ஏற்பாடு செய்யப்பட்ட வரைவிலக்கணங்களின்படியான கரைகடந்த கூறுகள் ; அத்துடன்

(க) தேசிய பொருளாதாரத்தின் நலனைக் கருத்திற் கொண்டு அமைச்சரால் காலத்துக்குக் காலம் விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய வேறு தொழில்;

“ஆவணம்” என்பது, தகவலின் ஏதேனும் பதிவேடு என்று பொருள்படும் என்பதுடன் -

(அ) எதன்மீது எழுத்துருவம் காணப்படுகின்றதோ அதனையும்;

(ஆ) எதன்மீது, அவற்றைப் பொருள் கொள்ளும் தகைமையுடைய ஆட்களுக்குக் கருத்தைத்தரும் குறிகள், எண்கள், அடையாளங்கள் அல்லது துளைகள் என்பன காணப்படுகின்றனவோ அதனையும்;

(இ) வேறு எதனதும் உதவியுடனோ அல்லது உதவியின்றியோ எதிலிருந்து ஒலிகளை, உருவங்களை அல்லது எழுத்துக்களை உண்டுபண்ண முடியுமோ அதனையும்;

(ஈ) ஒரு தேசப்படத்தையும், வரைபடத்தையும், வரைதலையும், புகைப்படத்தையும் அல்லது இதனையொத்த விடயத்தையும் ; அத்துடன்

(உ) இலத்திரனியல் வடிவத்தில் வைத்திருக்கப்பட்ட அல்லது பேணப்பட்ட மேற்கூறப்பட்ட எதனையும்.

உள்ளடக்கும்;

“நிதித்தொழில்” என்பது, பின்வரும் தொழில்களுள் எதனையும் உள்ளடக்கும் -

(அ) 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க, வங்கித் தொழிற் சட்டத்தில் வரைவிலக்கணம் கூறப்பட்டவாறான வங்கித் தொழில்;

(ஆ) 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க, நிதிக் கம்பெனிகள் சட்டத்தில் வரைவிலக்கணம் கூறப்பட்டவாறான நிதித் தொழில் (அது, சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப்பட்டோ அல்லது பதிவு செய்யப்பட்டோ இருப்பினுஞ்சரி அல்லாது விடினும்சரி);

(இ) கடன் வழங்குதல், பாவனையாளர் கடன், ஈட்டுக்கடன், இன்னொருவருக்காக தொழில் கொடுக்கல் வாங்கலை மேற்கொள்ளுதல் (உதவி பெற்றாயினுஞ்சரி அல்லாமலாயினுஞ்சரி) அத்துடன் வர்த்தகப் கொடுக்கல் வாங்கல்களுக்கு நிதியளித்தல்;

(ஈ) பாவனையாளர் உற்பத்திப் பொருட்கள் தொடர்பிலான கொடுக்கல் வாங்கலைத் தவிர்ந்த நிதிக்குத்தகை;

(உ) பணத்தின் அல்லது பெறுமதியின் கைமாற்றம் ;

(ஊ) பணம் அத்துடன் நாணயம் மாற்றும் சேவைகள்;

(எ) கொடுப்பனவு வழிமுறைகளை வழங்குதலும் முகாமை செய்தலும் (அதாவது கடன் அட்டைகள், பிரயாணிகள் காசோலைகள், காசுக் கட்டளைகள், வங்கியாளர் வரைவுகள் , அத்துடன் இலத்திரனியல் பணம்);

(ஏ) பாவனையாளர் கடன், உதவி பெற்றாயினுஞ்சரி அல்லாமலாயினுஞ்சரி இன்னொருவருக்காக தொழில் கொடுக்கல் வாங்கலை மேற்கொள்ளுதல் என்பன உட்பட ஆனால் அவற்றிற்கு மட்டுப்படுத்தப்படாமல், நிதிசார்ந்த உத்தரவாதங்களையும் கடப்பாடுகளையும் வழங்குதலும் அத்துடன் பறிமுதல் செய்தல் உட்பட வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்களுக்கு நிதியளித்தலும்;

(ஐ) அதன் சொந்தக் கணக்கிற்காக அல்லது வாடிக்கையாளர்களின் கணக்கிற்காக பணச்சந்தைச்சாதனங்கள் (அதாவது காசோலைகள், உண்டியல்கள், வைப்புச்சான்றிதழ்கள் அத்துடன் பெறுதிகள்) அந்நியச் செலாவணி, செலாவணி வட்டிவீதம், சுட்டிச்சாதனங்கள், வியாபாரப் பண்டங்கள், வருங்கால வியாபாரம், கைமாற்றத்துகு பிணையங்கள் என்பவற்றில் வியாபாரம் செய்தல்;

(ஒ) பிணையங்களின் வழக்கீடுகளில் பங்குபற்றுதலும் அத்தகைய வழக்கீடுகள் தொடர்பான நிதிச்சேவைகளை ஏற்பாடு செய்தலும்; அத்துடன்

(ஓ) தேசிய பொருளாதாரத்தின் நலனைக் கருத்திற் கொண்டு அமைச்சரால் காலத்துக்குக் காலம் விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய வேறு தொழில்;

“நிதிசார் உளவறிதற் கூறு” என்பது, வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம் அமைச்சரால் குறித்தொதுக்கப்பட்டதும், இச் சட்டத்தின் ஏற்பாடுகளின் நிர்வாகம் பொறுப்பிக்கப்பட வேண்டியதுமான அரசாங்கத் திணைக்களம் நியதிச் சட்டக்குழு பகிரங்கக் கூட்டுத்தாபனம், நிறுவனம் அல்லது அதிகாரசபை அல்லது அத்தகைய திணைக்களத்தின், குழுவின், கூட்டுத்தாபனத்தின், நிறுவனத்தின் அல்லது அதிகாரசபையின் ஏதேனும் பகுதி அல்லது கூறு என்று பொருள்படும்; அமைச்சர் கட்டளையை ஆக்குகையில் அதனது பணிகள் தொடர்பிலான குறித்தொதுக்கப்பட வேண்டிய அரசாங்கத் திணைக்களத்தின், பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின், நியதிச்சட்டக்குழுவின் அல்லது அதிகாரசபையின் செயலாற்றலையும் மனித வலுவையும் மற்றும் இச்சட்டத்தின்கீழ் பணிகளை நிறைவேற்றுகையில் வினைத்திறனுடன் செயலாற்றுவதற்கான அதன் பொதுப்படையான ஆற்றலையும் கருத்திற்கொள்ளுதல் வேண்டும்.

“நிறுவனம்” என்பது, இச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் ஏதேனும் நிதித் தொழிலில் அல்லது குறித்தொதுக்கப்பட்ட நிதிசாராத் தொழிலில் அல்லது குறித்தொதுக்கப்பட்ட நிதிசாராத் தொழிலில் ஈடுபட்டுள்ள அல்லது அதனைக் கொண்டு நடாத்துகின்ற எவரேனும் ஆள் அல்லது ஆட்கள் குழு என்று பொருள்படும்;

“பணம் அனுப்பும் சேவைகள்” என்பது, (மத்திய வங்கியால் உரிமமளிக்கப்பட்ட வங்கியொன்று தவிர்ந்த)-

(அ) காசை அல்லது பணத்தின் பெறுமதியைப் பரிவர்த்தனை செய்யும்;

(ஆ) வேறு ஆட்களின் சார்பில் நிதிகளை அல்லது பணத்தின் பெறுமதியைச் சேகரிக்கும், வைத்திருக்கும், பரிமாற்றம் செய்யும் அல்லது அனுப்பும் அல்லது வேறுவகையில் நிதியின் அல்லது பணத்தின் பெறுமதியின் கைமாற்றங்களை நிறைவேற்றும்;

(இ) நிதிகளை ஒப்படைக்கும்; அல்லது

(ஈ) பிரயாணிகளின் காசோலைகளை, காசக்கட்டளைகளை அல்லது அவற்றையொத்த சாதனங்களை வழங்கும், விற்பனை செய்யும் அல்லது மீட்டுக் கொடுக்கும்.

தொழிலைக் கொண்டு நடாத்துகின்ற ஆளொருவர் என்று பொருள்படும்;

“கொண்டுவருபவரால் மாற்றத்தகு சாதனம்” என்பது மாற்றுண்டியல்கள், வாக்குறுதிப் பத்திரங்கள், அல்லது வைப்புச் சான்றிதழ்கள் உட்பட கொண்டு வருபவருக்கு செலுத்தப்படற்பாலதாக்கப்படினுஞ்சரி அல்லாவிடினுஞ்சரி, தனிசுகளின் சொத்துவத்தை அல்லது கடப்பாடுகளைக் குறிக்கும் ஓர் ஆவணம் என்று பொருள்படும்;

“கரைகடந்த கூறு” என்பது, கரைகடந்த வங்கித் தொழிலைக் கையாளுகின்ற 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க, வங்கித் தொழிற் சட்டத்தின் பாகம் iv இன் ஏற்பாடுகளுக்கமைய வங்கித் தொழிலைக் கொண்டு நடாத்தும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றின் அல்லது உரிமம்பெற்ற விசேட வங்கியொன்றின் ஓர் கூறு அல்லது பகுதி என்று பொருள்படும்;

“ஆள்” என்பது, ஆளுமையுடையதாயினுஞ்சரி அல்லாவிடினும்சரி ஆட்களின் குழுவொன்று உட்பட எவரேனும் இயற்கை அல்லது சட்ட ஆள் என்று பொருள்படும் என்பதுடன், இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட அத்தகைய ஆளின் அல்லது ஆட்கள் குழுவின் கிளை ஒன்றையும் உள்ளடக்கும்;

“விதித்துரைக்கப்பட்ட”என்பது, இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளால் விதித்துரைக்கப்பட்ட என்று பொருள்படும்;

“பணம் தூய்தாக்கல் தவறு” என்பது, 2006ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க, பணம் தூய்தாக்கலைத் தடைசெய்யும் சட்டத்தின் 4ஆம் பிரிவில் வரைவிலக்கணம் கூறப்பட்டவாறான தவறொன்று என்று பொருள்படும்;

“பயங்கரவாதத்திற்கு நிதியளிப்புச் செய்யும் தவறு” என்பது, 2005ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க, பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாயச் சட்டத்தின் நியதிகளின்படி தவறொன்றாக அமையும் செயலொன்று என்று பொருள்படும்;

“ஆதனம்” என்பது, ஏதேனும் நாணயம் என்று பொருள்படுவதுடன் பருப்பொருளாயினுஞ்சரி பருப்பொருளற்றதாயினுஞ்சரி, அசைவுள்ளதாயினுஞ்சரி அசைவற்றதாயினுஞ்சரி, உருவமுள்ளதாயினுஞ்சரி, உருவமற்றதாயினுஞ்சரி, இலங்கையில்

அமைந்துள்ளதாயினுஞ்சரி, வேறெங்காவது அமைந்துள்ளதாயினுஞ்சரி, எத்தன்மைத்தானதுமான ஏதேனும் சொத்தையும் உள்ளடக்கும் என்பதுடன் இலத்திரனியல் அல்லது எண் வடிவம் உட்பட எததன்மையுமானதுமான ஏதேனும் வடிவத்திலான சட்ட ஆவணங்கள் அல்லது சாதனங்கள் எனவும், வங்கிக்கடன் பத்திரங்கள், பிரயாணிகள் காசோலைகள் வங்கிக் காசோலைகள், காசுக் கட்டளைகள், பங்குகள், பிணையங்கள் முறிகள், உண்டியல்கள் கடன்பத்திரங்கள் என்பன உட்பட ஆனால் அவற்றிற்கு மட்டுப்படுத்தப்படாமல், அத்தகைய சொத்துக்களுக்கான சாட்சியமாயமையும் உரித்து அல்லது அதிலான அக்கறை எனவும் பொருள்படும் என்பதுடன் அத்தகைய ஏதேனும் ஆதனத்தின் சட்டப்படியான அல்லது ஒப்புரவான அக்கறையையும் உள்ளடக்கும்;

"பதிவேடு" என்பது, எந்தப்பொருளில் ஆளொருவரினால், கணனி முறையினால் அல்லது வேறு உபாயத்தினால் வாசிக்கப்படும் அல்லது புரிந்துகொள்ளப்படும் ஆற்றலுள்ள தரவு பதில் செய்யப்பட்டுள்ளதோ அல்லது அடையாளமிடப்பட்டுள்ளதோ அந்த ஏதேனும் பொருள் என்று பொருள்படும்;

"சந்தேகத்திற்கிடமான கொடுக்கல் வாங்கல் அறிக்கை" என்பது, 6ஆம் பிரிவின் கீழ் செய்யப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட அறிக்கையொன்று எனப் பொருள்படும்;

"குறித்துரைக்கப்பட்ட அமைப்பு" என்பது -

(அ) பயங்கரவாதம் தொடர்பில் அப்போதைக்கு இலங்கையில் வலுவிலுள்ள எழுத்திலான ஏதேனும் சட்டத்தின் நியதிகளின்படி தவறொன்றாக அமையும் செயலொன்றுடன் தொடர்புபட்ட ஏதேனும் செயலை அறிந்திருந்தும்-

(i) புரிந்துள்ள ;

(ii) புரிய எத்தனித்துள்ள;

(iii) புரிவதில் பங்குபற்றியுள்ள; அல்லது

(iv) புரிவதற்கு வசதியளித்துள்ள;

அமைப்பொன்று ; அல்லது

(ஆ) 1968ஆம் ஆண்டின் 45ஆம் இலக்க, ஐக்கிய நாடுகள் சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் நியதிகளின்படி வெளிநாட்டலுவல்கள் அமைச்சரினால் விதித்துரைக்கப்பட்ட அமைப்பொன்று.

என்று பொருள்படும்;

"பயங்கரவாதச் செயல்" என்பது, பயங்கரவாதம் தொடர்பில் இலங்கையில் அப்போதைக்கு வலுவிலுள்ள எழுத்திலான ஏதேனும் சட்டத்தின் நியதிகளின்படி தவறொன்றாக அமையும் செயலொன்று எனப் பொருள்படும்;

"பயங்கரவாத ஆதனம்" என்பது -

(அ) பயங்கரவாதச் செயலொன்றைப் புரிவதினின்று பெறப்பட்ட வருவாய்கள்;

(ஆ) பயங்கரவாதச் செயலொன்றைப்புரிவதில் பயன்படுத்தப்பட்ட, பயன்படுத்தப்படுகின்ற அல்லது பயன்படுத்தப்படும் சாத்தியமுள்ள ஆதனம்;

(இ) பயங்கரவாதக் குழுவொன்றினால் பயன்படுத்தப்பட்ட, பயன்படுத்தப்படுகின்ற அல்லது பயன்படுத்தப்படும் சாத்தியமுள்ள ஆதனம்;

(ஈ) பயங்கரவாதக் குழுவொன்றுக்குச் சொந்தமான அல்லது அதனால் அல்லது அதன் சார்பில் கட்டுப்படுத்தப்படும் ஆதனம்;

(உ) பயங்கரவாதக் குழுவொன்றுக்கு ஆதரவளிக்கும் அல்லது பயங்கரவாதச் செயலொன்றுக்கு நிதியளிப்புச் செய்யும் நோக்கத்திற்காக சேகரிக்கப்பட்டுள்ள ஆதனம்.

என்று பொருள்படும்;

"கொடுக்கல் வாங்கல்" என்பது, நிதித் தொழிலுடன் அல்லது குறித்தொதுக்கப்பட்ட நிதிசாராத தொழிலுடன் தொடர்புடைய ஏதேனும் செயற்பாடு என்று பொருள்படும்;

"கொடுக்கல் வாங்கல்" என்பது, ஆதனம் தொடர்பில் -

(அ) ஒரு கொள்வனவு, விற்பனை, கடன், அறவீடு, ஈடு, சோந்தை, அடைமானம், அறுதி, ஒப்படைத்தல், சாட்டுதல் செய்தல், கடன்பற்றுறுதி மாற்றீடு, அனுப்புகை, கொடை, நன்கொடை, நம்பிக்கைப் பொறுப்பொன்றின் உருவாக்கம், கொடுத்துத்தீர்த்தல், ஏதேனும் பொருளின் வைப்பீடு உட்பட வைப்பீடு , சொத்துக்களிடையே கைமாற்றம், கடன் வசதி நீடிப்பு;

(ஆ) ஏதேனும் முகவராண்மை அல்லது அற்றோனிக் தத்துவமளிப்பு;

(இ) எவ்வாறாக விவரிக்கப்படினும் எவ்வாறான வடிவத்திலும் அல்லது எத்தன்மையதான விவரணத்திலும் அல்லது தன்மையிலுமான ஆதனத்தின் முழுமையான அல்லது பகுதியளவிலான ஏதேனும் உரிமை, உரித்து, அக்கறை அல்லது சிறப்புரிமை தற்காலத்திலாயினுஞ்சரி, வருங்காலத்திலாயினுஞ்சரி, உடைமையாக்கப்பட்டதாயினுஞ்சரி, பின் நிகழ்வதாயினுஞ்சரி அத்தகைய ஆதனம் எவரேனும் ஆளுக்கு உரித்தாக்கப்படுவதால் விளையும் வேறு ஏதேனும் ஆதனவளிப்பு அல்லது கையாளுகை.

என்று பொருள்படும் ; அத்துடன்

"சட்டமுறையற்ற செயற்பாடு" என்பது சட்டங்களின் கீழ் தவறு ஒன்றை உருவாக்குகின்ற ஏதேனும் செயல் எனப் பொருள்படும்

(அ) (அத்தியாயம் 218) நச்சுப்பொருள், அபின் மற்றும் அபாயகரமான ஔடதங்கள் கட்டளைச் சட்டம்;

(ஆ) பயங்கரவாதத் தடுப்பு மற்றும் ஒடுக்குதல் தொடர்பான அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் சட்டம் அல்லது ஒழுங்குவிதி;

(இ) (அத்தியாயம் 26) இலஞ்சச் சட்டம்;

(ஈ) (அத்தியாயம் 182) வெடிமருந்துகள் கட்டளைச் சட்டம், (அத்தியாயம் 183) வெடிப்பொருட்கள் கட்டளைச்சட்டம் அல்லது 1966ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க, தீங்கு விளைவிக்கும் ஆயுதங்கள் சட்டம்;

(உ) (அத்தியாயம் 423) செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம்;

(ஊ) 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க, வங்கித் தொழிற் சட்டத்தின் 83இ என்னும் பிரிவின் கீழான தவறொன்று;

(எ) நாடுகளுக்கிடையிலான ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல் தொடர்பான அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் சட்டம்;

(ஏ) கணனிவழிக் குற்றம் தொடர்பாக அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் சட்டம்;

(ஐ) சிறுவர்களுக்கு எதிரான தவறுகள் தொடர்பாக அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் சட்டம்; அத்துடன்

(ஒ) ஆட்களை விலைப்படுத்தலுடன் தொடர்புபட்ட தவறுகள் தொடர்பான அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் சட்டம்; அத்துடன்

(ஓ) மரண தண்டனை அல்லது ஏழு வருடகாலப்பகுதி ஒன்றுக்கான அல்லது அதற்கு மேலான காலப்பகுதி ஒன்றுக்கான மறியற்றண்டனை மூலம் தண்டிக்கப்படக் கூடியதான அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் வேறு சட்டத்தின் கீழான தவறொன்று.

# 2006ஆம் ஆண்டின் 09ஆம் இலக்க, பணச் சட்டம் (திருத்தச்) சட்டம்

[2006ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

**பணச்சட்டத்தை திருத்துவதற்கானதொரு சட்டம்**

1. இச்சட்டம் 2006ஆம் ஆண்டின் 09ஆம் இலக்க, பணச்சட்ட (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) (422ஆம் அத்தியாயமான) பணச்சட்டம் அதன் அத்தியாயம் V இன் பாகம் VII என்பதிற் காணப்படும் தலையங்கத்திற்குப் பதிலாகப் பின்வரும் தலையங்கத்தை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

" பாகம் VII

**வங்கித் தொழில் நிறுவனங்களினதும் உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கிகளினதும் கடன் தொழிற்பாடுகளின் மேலதிக ஒழுங்கு விதி "**

3. அத்தியாயம் V இன் பாகம் VII இன் 99ஆம் பிரிவுக்கு உடன் முன்னர் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 98ஆ, என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:

"பாகம் VII என் பதற் கான பொருள்கோடல்.

98ஆ. இச் சட்டத்தின் இப்பாகத்தின் நோக்கங்களுக்காக "உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கி" என்பது 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித் தொழிற் சட்டத்திலுள்ள அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்".

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 100ஆம் பிரிவு "வர்த்தக வங்கிகளால்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "வர்த்தக வங்கிகளாலும் உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கிகளாலும்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 101ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவிள் (1)ஆம் உட்பிரிவில் -

(அ) அதன் (அ) என்னும் பந்தியில் "வர்த்தக வங்கிகளைத் தடைசெய்யலாம்; " என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வர்த்தக வங்கிகளையும் உரிமமளிக்கப்பட்டவிசேட வங்கிகளையும் தடைசெய்யலாம்; " என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஆ) அதன் (அ) என்னும் பந்தியில் "எல்லையைநிர்ணயிக்கலாம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "எல்லையை நிர்ணயிக்கலாம் அல்லது" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(இ) அதன் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் :

"(இ) வர்த்தக வங்கிகளால் அல்லது உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கிகளால் பொருளாதாரத்தின் இனம் காணப்பட்டஏதேனும் துறைக்கு நீடிக்கப்படவுள்ள கடன்களின் குறைந்தபட்ச நூற்று வீதத்தை நிர்ணயிக்கலாம்;"; அத்துடன்

(ஈ) அதற்கான காப்புவாசகத்தில், "ஏதேனும் வர்தநக வங்கியைத் தேவைப்படுத்துவதற்காக" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஏதேனும் வர்த்தக வங்கியை அல்லது உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியை தேவைப்படுத்துவதாக" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

(2) அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவில் "வர்த்தக வங்கி ஒவ்வொன்றினதும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வர்த்தக வங்கி அல்லது உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கி ஒவ்வொன்றினதும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 102ஆம் பிரிவு "வர்த்தக வங்கிகளின் மூலதனமும் மிகையும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வர்த்தக வங்கிகளினதும் உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கிகளினதும் மூலதனமும் மிகையும்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

7. முதன்மைச் சட்டவாக்த்தின் 104ஆம் பிரிவு இத்தால் பின்வருவமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் அதன் (அ) அத்துடன் (ஆ) என்னும் பந்திகளில் காணப்படும் "வர்த்தக வங்கிகள் " என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வர்த்தக வங்கிகளும் உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கிகளும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவின் (3)ஆம் உட்பிரிவில் "வர்த்தக வங்கிகளால்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வர்த்தக வங்கிகளாலும் உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கிகளாலும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 105ஆம் பிரிவு "வங்கித் தொழில் நிறுவனங்களால்" அத்துடன் "அத்தகைய நிறுவனங்களால்" என்னும் சொற்களுக்குப்பதிலாக, முறையே "வங்கித் தொழில் நிறுவனங்களாலும் உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கிகளாலும்" அத்துடன் "அத்தகைய நிறுவனங்களாலும் வங்கிகளாலும்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

9. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## 2006ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க நிதிச் சட்டம்

[2006ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

**மோட்டார் வாகன சலுகை அளவீடொன்றினதும் தொலைக்காட்சி நாடக மற்றும் திரைப்பட அறவீடொன்றினதும் விதிப்பனவுக்கு ஏற்பாடு செய்வதற்கும் 2002ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க நிதிச் சட்டத்தினாலும் 2003ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க நிதிச் சட்டத்தினாலும் 2004ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க நிதிச் சட்டத்தினாலும் விதிக்கப்பட்ட குறித்த சில விதிப்பனவுகளினதும் அறவீடுகளினதும் திருத்தத்திற்கு ஏற்பாடு செய்வதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றிற்கு இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

1. இச்சட்டம் 2006ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க, நிதிச்சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

பாகம் I

### மோட்டார் வாகன சலுகை அறவீடு

2. (1) இச்சட்டம் நடைமுறைக்கு வருவதிலிருந்தும் அதன் பின்னரும் மோட்டார் வாகன சலுகை அறவீடு என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான அளவீடொன்று, (இது இதனகத்துப்பின்னர் "அறவீடு" எனக் குறிப்பீடு செய்யப்படும்)

(அ) மோட்டார் வாகனமொன்றை இறக்குமதி செய்கின்றவரான இலங்கைத் தேசத்தைக் கட்டியெழுப்பும் முறி (இ.தே.க.மு.) ஒன்றை முதனிலையாக வைத்திருப்பவர் ஒவ்வொருவரும் (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தினதும் 1989ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினதும் 2002ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க, சேர் பெறுமதி வரிச் சட்டத்தினதும் நியதிகளின்படி அவர் செலுத்துவதற்கு ஆளான ஏதேனும் வரிக்குப் பதிலாக அத்தகைய வாகனத்தின் விலை, காப்புறுதி, கேள்வுப் பெறுமதியின் மீது கட்டளையின் மூலம் அமைச்சரால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வீதப்படி அதன் பயன்பாட்டிற்கு மத்திய வங்கியின் பகிரங்க தனிசுக் கண்காணிப்பாளரால் செய்யப்படும் விதப்புரையொன்றின்மீது, அத்தகைய இறக்குமதியின் நேரத்தில்.

ஆயினும் பின்வரும் நிபந்தனைகளுக்கமைய :-

(i) இலங்கைத் தேசத்தைக் கட்டியெழுப்பும் முறிகளிலான (இ.தே.க.மு) கூட்டுமொத்த முதலீடு ஐக்கிய அரசுகள் டொலர்களில் அல்லது மேற்கூறப்பட்ட முறிகளின் கொள்வனவுக்கு ஏற்றுக் கொள்ளப்படற்பாலதான வேறு ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான மேற்கூறப்பட்ட கட்டளையில் அமைச்சரால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தொகையாதல் வேண்டும்

(ii) மோட்டார் வாகனத்தின் விலை, காப்புறுதி மற்றும் கேழ்வுப் பெறுமதி, இலங்கைத் தேசத்தைக் கட்டியெழுப்பும் முறிகளின் (இ.தே.க.மு) பெறுமதியின் மேற்கூறப்பட்ட கட்டளையில் அமைச்சரால் திர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய நூற்றுவீதத்தை விஞ்சுதலாகாது.

(ஆ) 2000ஏப்பிறல் 1ஆம் தேதி தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டிற் தொடங்கி அந்த வரிமதிப்பீட்டாண்டை உடனடுத்துவரும் ஐந்தாண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்குட்பட்ட ஒவ்வோர் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பிலும் 2006ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் நியதிகளின்படி இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாவுக்குக் குறையாத (ரூபா 250,000) தொகையொன்றினை வருமான வரியாகத் தொடர்ந்து செலுத்தியிருப்பதுடன் உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதியால் அவ்வாறு அத்தாட்சிப்படுத்தப்பட்டு, மோட்டார் வாகனமொன்றை இறக்குமதி செய்யும் தனியாள் ஒவ்வொருவரிடமிருந்தும் (235ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தினதும் 1989ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினதும் 2002ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க சேர்பெறுமதி வரிச் சட்டத்தினதும் நியதிகளின்படி அத்தகைய தனியாள் செலுத்துவதற்காளாகும் ஏதேனும் வரிக்கு அல்லது பிசுக்கால் அறவீட்டிற்குப் பதிலாக அத்தகைய வரிகளினதும் அறவீடுகளினதும் கூட்டு மொத்தத்தில் அமைச்சரால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய வீதப்படி கணிப்பிடப்பட்ட அறவீடொன்று அத்தகைய இறக்குமதியின் நேரத்தில் .

அறவிடப்படுதலும் விதிப்பனவு செய்யப்படுதலும் வேண்டும்.

(2) மேலே (அ) மற்றும் (ஆ) என்னும் பந்திகளின்கீழ் அமைச்சரால் ஆக்கப்படும் கட்டளை ஒவ்வொன்றும் அமைச்சர் அத்தகைய கட்டளையின் மீது அவரது கையொப்பத்தைப் பொறித்துள்ள தேதியிலிருந்து வலுவுக்கு வருதல் வேண்டும்.

3. இரண்டாம் பிரிவின் (அ) அத்துடன் (ஆ) என்னும் பந்திகளில் குறிப்பீடு செய்யப்படும் ஆட்கள் தொடர்பில் தேவைப்படுத்தப்பட்ட அத்தாட்சிப்படுத்துகை விடயத்திற்கேற்ப இலங்கை மத்திய வங்கியின் பகிரங்கத் தனிசுக் கண்காணிப்பாளரால் அல்லது உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதியால் செய்யப்படுவதன் மீது இறக்குமதியின் நேரத்தில் அத்தகைய ஆளினால் செலுத்தப்படற்பாலதான அறவீட்டைத் திரட்டுதலும் அதனை திரட்டு நிதியத்திற்கு அனுப்புதலும் சுங்கப்பணிப்பாளர் தலைமையதிபதியின் கடமையாதல் வேண்டும்.

4. திறைசேரிச் செயலாளர் சட்டத்தின் இப்பாகத்தின் நியதிகளின்படி அறவீட்டை நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய பொதுவான அல்லது விசேட பணிப்புகளை காலத்துக்குக் காலம் வழங்கலாம்

5. இரண்டாயிரத்து ஆறு மார்ச்சு 1ஆம் தேதியன்று தொடங்குவதும் இச் சட்டம் தொடங்கும் தேதியன்று முடிவடைவதுமான காலப்பகுதியின்போது 2ஆம் பிரிவின் (அ) அல்லது (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவரும் அவ்வாறு மோட்டார் வாகனமொன்றை இறக்குமதி செய்கின்றவருமான எவரேனும் ஆளிடமிருந்து 2ஆம் பிரிவின் கீழான கட்டளையால் குறித்துரைக்கப் பட்டவறான அத்தகைய தொகையினதான அறவீடொன்று இச் சட்டத்தின் இப்பாகத்தின் நியதிகளின்படி சுங்கப்பணிப்பாளர் தலைமையதிபதியால் திரட்டப்பட்டுள்ளவிடத்து அத்தகைய திரட்டுதலானது எல்லா நோக்கங்களுக்காகவும் செல்லுபடியானதாகச் செய்யப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய திரட்டுதல் தொடர்பில் சுங்கப்பணிப்பாளர் தலைமையதிபதி எல்லாக் குடியியல் அல்லது குற்றவியல் நடவடிக்கைகளிலுமிருந்து இத்தால் நட்டோத்திரவாதம் செய்யவும்படுகின்றார்.

பாகம் II

## தொலைக்காட்சி நாடகங்கள், திரைபடங்கள் அத்துடன் தொலைக்காட்சி வர்த்தக விளம்பரங்கள் என்பனமீது அறவீடொன்றை விதித்தல்

6.(1) இலங்கையில் தயாரிக்கப்படும் தொலைக்காட்சி நாடகங்களினதும் திரைப்படங்களினதும் வர்த்தக விளம்பரங்களினதும் தரத்தையும் தராதரத்தையும் மேம்படுத்தி ஒழுங்குபடுத்தும் நோக்கத்துடனும் அதன்மூலம் அத்தகைய தொலைக்காட்சி நாடகங்கள், திரைப்படங்கள், வர்த்தக விளம்பரங்கள் என்பன ஊடாக இலங்கையின் விழுமியங்கள் பரப்பப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காகவும் 1982ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனச் சட்டத்தின்கீழ் அல்லது காலத்துக்காலம் இனங்காணப்படக் கூடியவாறான அத்தகைய வேறு உரிமமளிக்கும் அதிகாரசபையினால் உரிமமளிக்கப்பட்ட நிறுவனம் ஒவ்வொன்றிடமிருந்தும் இலங்கைக்கு வெளியே தயாரிக்கப்பட்டு ஒளிபரப்பப்படும் நோக்கத்திற்காக இலங்கைக்குக் கொண்டுவரப்படுகின்ற அல்லது இறக்குமதி செய்யப்படுகின்ற தொலைக்காட்சி நாடகம், திரைப்படம் அல்லது வர்த்தக விளம்பரம் ஒவ்வொன்றின் மீதும் அத்துடன் அத்தகைய தொலைக்காட்சி நாடகத்தின், திரைப்படத்தின் அல்லது வர்த்தக விளம்பரத்தின் கால எல்லை தொடர்பில் தொலைக்காட்சி நிலையங்களுக்கு உரிமம் அளிக்கும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தொதுக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சருடனான கலந்தாலோசனையுடன் நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரால் விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய வீதப்படி தொலைக்காட்சி, திரைப்பட, வர்த்தக விளம்பரங்கள் அறவீடு என அழைக்கப்பட வேண்டிய அளவீடொன்று அறவிடப்படுதலும் விதிப்பனவு செய்யப்படுதலும் வேண்டும் (இது இப்பாகத்தில் “அறவீடு” எனக் குறிப்பீடு செய்யப்படும்)

ஆயின், எவ்வாறாயினும் மேற்படி அளவீடு -

(அ) இலங்கையில் ஒளிபரப்பப்படும் ஏதேனும் விவரணச்சித்திரம் இலங்கைக்கு வெளியே தயாரிக்கப்பட்டதைப் பொருட்படுத்தாமல் அத்தகைய விவரணச் சித்திரம்;

(ஆ) (i) கல்விசார் விழுமியங்களை ஊட்ட விளைகின்ற ; அல்லது

(ii) சிறுவர்களுக்குக் களிப்பூட்டும் நோக்கங்களுக்காக மாத்திரம் தயாரிக்கப்பட்ட ஏதேனும் திரைப்படம் அல்லது தொலைக்காட்சி நாடகம்;

(இ) ஒழுங்கு விதிகளால் விதித்துரைக்கப்படக் கூடியவாறான வேறு ஏதேனும் பிரிவைச் சேர்ந்த தொலைக்காட்சி நாடகங்கள், திரைப்படங்கள் அல்லது வர்த்தக விளம்பரங்கள் தொடர்பில்.

விதிப்பனவு செய்யப்படுதலாகாது.

(2) கொடுப்பனவுமுறை, விதம், கொடுப்பனவு செய்யும் நேரம், அதனைத் திரட்டுவதற்கான நடவடிக்கைமுறை அத்துடன் இந்தச் சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதில் அவசியமாகக் கூடியவாறான அத்தகைய வேறு நியதி நிபந்தனைகள் என்பன அதன்பொருட்டு ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளால் விதித்துரைக்கப்படுதல் வேண்டும்.

(3) மேலே (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்படும் கட்டளை ஒவ்வொன்றும் அத்தகைய கட்டளைமீது அமைச்சர் அவரது கையொப்பத்தைப் பொறித்துள்ள தேதியிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

7.(1) ஒழுங்கு விதிகளால் விதித்துரைக்கப்பட்ட முறையிலும் காலப்பகுதிக்குள்ளும் அறவீட்டின் கொடுப்பனவில் தவணை தவறுகின்ற ஆளெவரும் தவணை தவறிய ஒருவராகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) தவணை தவறியவர் ஒவ்வொருவரும் தொலைக்காட்சி நிலையங்களுக்கு உரிமங்கள் வழங்குதல் எந்த அமைச்சருக்குக் குறித்தொதுக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சின் அமைச்சுச் செயலாளருக்கு தவணை தவறுகையிலுள்ள அளவீட்டுத் தொகைக்கு மேலதிகமாகப் பின்வரும் முறையில் கணிக்கப்பட்ட மிகையிறுப்பனவொன்றைச் செலுத்துவதற்கு ஆளாதல் வேண்டும்:

(அ) அறவீடு செலுத்தப்படற்பாலதாயிருந்த தேதியிலிருந்து கணிப்பிடப்பட்ட அடுத்துறும் ஒருமாத காலப்பகுதிக்கு அல்லது அதன் பாகத்திற்கு தவணை தவறுகையிலுள்ளவாறான அத்தகைய அறவீட்டுத் தொகையின் பத்துச் சதவீதம் ; அத்துடன்

(ஆ) பந்தி (அ) என்பதில் குறித்துரைக்கப்பட்ட கொடுப்பனவு வருமதியாகவிருந்த தேதியிலிருந்து கணிக்கப்பட்ட அடுத்துறும் காலப்பகுதி ஒவ்வொன்றுக்கும் அல்லது அதன் பாகத்திற்கு தவணை தவறுகையிலுள்ளவாறான அத்தகைய அறவீட்டுத் தொகையின் இரண்டு சதவீதம்.

(3) தொலைக்காட்சி நிலையங்களுக்கு உரிமங்கள் வழங்குதல் எந்த அமைச்சருக்குக் குறித்தொதுக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அறவீட்டை அல்லது மூன்று மாதங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதியொன்றுக்கு தவணை தவறுகையிலுள்ள அறவீட்டின் அத்தகைய பாகத்தை அறவிடுவதற்கு இதன்பின்னர் குறித்துரைக்கப்பட்டவாறான முறையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(4) தொலைக்காட்சி நிலையங்களுக்கு உரிமங்கள் வழங்குதல் எந்த அமைச்சருக்குக் குறித்தொதுக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் தவணை தவறுகையிலுள்ள அறவீட்டை அதன்மீது திரண்ட மிகையிறுப்பனவுடன் சேர்த்து அறவிடுவதற்கென எவையேனும் நடவடிக்கைகளை எடுப்பதற்கு மூன்று வாரங்களுக்கு முன்னர், இப்பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி தவணை தவறுகையிலுள்ள அறவீட்டுத் தொகையையும் அதன்மீது திரண்ட மிகையிறுப்பனவின் தொகையையும் அறவிடுவதற்கு அவ்வாறு வழக்கு நடவடிக்கைகளைத் தொடுப்பதற்கான முன்னம்பற்றி தவணை தவறுநருக்கு அறிவிக்கும் அறிவித்தலொன்றை தவணை தவறுநருக்கு வழங்கச் செய்வித்தல் வேண்டும்.

(5) உரிமங்கள் வழங்குதல் எந்த அமைச்சருக்குக் குறித்தொதுக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் (4)ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி தவணை தவறுநருக்கு அறிவித்தலை வழங்கி, ஆனால் தவணை தவறுகையிலுள்ள அறவீட்டுத் தொகையையும் அதன்மீது திரண்ட மிகையிறுப்பனவுத் தொகையும் அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட மூன்றுவார காலப்பகுதி கழிந்துவிட்ட போதிலும் செலுத்தப்படாதிருக்குமிடத்து, செயலாளர் தவணை தவறுநரின் பெயரும் முகவரியும் தவணை தவறுகையிலுள்ள மொத்தப் பணத்தொகையும் அடங்கிய சான்றிதழொன்றை அவ்வாறு பெயர் குறிக்கப்பட்ட ஆள் இப்பிரிவில் தேவைப்படுத்தப்பட்டவாறான கொடுப்பனவைச் செய்வதில் தவணை தவறியுள்ளார் என்ற பயன்பாட்டிற்கு கூற்றொன்றுடன் சேர்த்து தவணை தவறுநர் வதிகின்ற அல்லது தொழிலைக் கொண்டு நடாத்துகின்ற பிரிவின்மீது நியாயாதிக்கம் கொண்டுள்ள நீதிவானுக்கு வழங்குதல் வேண்டும். தவணை தவறுநர் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக இருக்குமிடத்து சான்றிதழானது அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட அத்தகைய குழுவின் பணிப்பாளர் சபையின் தவிசாளரினதும் ஒவ்வொரு பணிப்பாளரினதும் அல்லது பிரதான அலுவலரினதும் பெயரைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(6) நீதிவான் (5)ஆம் உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட சான்றிதழ் கிடைக்கப்பெற்றதன்மேல், குறித்துரைக்கப்பட வேண்டியதொரு தேதியன்று தமது முன்னிலையில் தோற்றுமாறும் தவணை தவறுகையிலுள்ள அறவீட்டுத் தொகையையும் அல்லது அறவீட்டின் அத்தகைய பாகத்தையும் அதன்மீது திரண்ட மிகையிறுப்பனவின் தொகையையும் அறவிடுவதற்காக ஏன் தவணை தவறுநருக்கெதிராக வழக்கு நடவடிக்கை எடுக்கப்படக்கூடாது என்பதற்குக் காரணம் காண்பிக்குமாறு தவணைதவறுனரைத் தேவைப்படுத்தி அவருக்கு அழைப்பாணை வழங்குதல் வேண்டும். காண்பிக்கப்பட்ட காரணம் கொடுப்பனவு செய்யாமைக்கான காரணத்தை விளக்குவதற்குப் போதுமானதாக இல்லை என நீதிவானுக்குத் தோன்றுமிடத்து நீதிவான் அதனைப் பதிவு செய்தபின்னர் தவணை தவறுகையிலுள்ள அறவீட்டையும் அதன்மீது திரண்ட மிகையிறுப்பனவுத் தொகையையும் தவணை தவறுநரிடமிருந்து நீதிவானால் விதிக்கப்பட்ட குற்றப்பணமொன்றென்றாற்போன்று அறவீட்டிற்கான கட்டளையொன்றை ஆக்குதல் வேண்டும். அவ்வாறு அறவிடப்பட்ட பணம் தொலைக்காட்சி நிலையங்களுக்கு உரிமங்கள் வழங்குதலானது குறித்தொதுக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு அனுப்பப்படுதல் வேண்டும். அவர் அதனைத் திரட்டு நிதியத்தில் வரவு வைத்தல் வேண்டும்.

8.(1) அமைச்சர், விதித்துரைக்கப்பட வேண்டுமென இச்சட்டத்தால் தேவைப்படுத்தப்பட்ட எல்லாக் கருமங்களும் தொடர்பிலும் அல்லது எக்கருமங்கள் தொடர்பில் ஒழுங்கு விதிகள் ஆக்கப்பட வேண்டுமென இச்சட்டத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனவோ அல்லது அதிகாரமளிக்கப்படுகின்றனவோ அக்கருமங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்படும் ஒவ்வோர் ஒழுங்கு விதியும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், வெளியீட்டுத் தேதியன்று அல்லது அதன்கண் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்படும் ஒவ்வோர் ஒழுங்குவிதியும், அது வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின்னர் வசதியான விளைவாக அங்கீகாரத்துக்கெனப் பாராளுமன்றத்தின் முன்னர் இடப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒவ்வோர் ஒழுங்குவிதியும், அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) ஏதேனும் ஒழுங்குவிதி அவ்வாறு ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படும் தேதி பற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப் படுதல் வேண்டும்.

9. இப்பாகத்தின் நோக்கங்களுக்காக -

"திரைப்படம்" என்பது எத்தன்மையானதுமான ஏதேனும் வடிவத்தில் அல்லது வடிவமைப்பில் தயாரிக்கப்பட்டதும் உரிமையாளர்களால் திரையரங்கொன்றிலுள்ள திரையொன்றில் வெளிக்காட்டப்படுவதற்கென பிரதானமான முன்னப்பட்டதுமான சலனப்படிமம் ஒன்றின் ஏதேனும் கட்புல, செவிப்புல முன்னிலைப்படுத்துதல் என்று பொருள்படும்;

"தொலைக்காட்சி நாடகம்" என்பது, தொலைக் காட்சியில் ஒளிப்பரப்பாகும் ஒரு நாடகம் என்று பொருள்படும்.

## பாகம் 111

### 2005ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க, நிதிச் சட்டத்திற்கான திருத்தம்

10. (இப்பாகத்தில் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2005ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க நிதிச் சட்டம் அச் சட்டத்தின் பாகம் 1இன் 2ஆம் பிரிவில் (சமூக பொறுப்புடைமை அறவீடு) இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

"(1) ஆண்டிலிருந்தும் அத்துடன் அதன் பின்னர் ஒவ்வோராண்டும் 0.25 சதவீதப்படி விதிப்பனவு செய்யப்படுதல் வேண்டும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக;

"(அ) 2005, சனவரி 1ஆம் தேதியன்று தொடங்குவதும் 2005 திசெம்பர் 31ஆம் தேதியன்று முடிவடைவதுமான காலப்பகுதிக்கு 0.25 சதவீதப்படியும்,

(ஆ) 2006, சனவரி 1ஆம் தேதியன்று தொடங்கும் காலப்பகுதிக்கு 1 சதவீதப்படியும் விதிப்பனவு செய்யப்படுதல் வேண்டும்.". என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(2) அப்பிரிவுக்கான காப்புவாசகத்தை உடனடுத்துப் பின்வருவதனைச் சேர்ப்பதன்மூலமும்:-

"ஆயின் மேலும் இச்சட்டத்தின் இப்பாகத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி 2000ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க, உண்ணாட்டரசிரைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் வருமானவரியின்மீது விதிக்கப்படற்பாலதான சமூகப் பொறுப்புடைமை அறவீடானது -

(அ) 2006, சனவரி 1ஆம் தேதி தொடங்கி 2006, மார்ச்சு 31ஆம் தேதி முடிவடையும் காலப்பகுதி தொடர்பில் 0.25 சதவீதப்படி கணிப்பிடப்படுதல் வேண்டும்.;அத்துடன்

(ஆ) 2006, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று தொடங்கும் காலப்பகுதி தொடர்பில் 1 சதவீதப்படி கணிப்பிடப்படுதல் வேண்டும் .".

என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

11. இச் சட்டத்தின் இப் பாகத்தின் ஏற்பாடுகள் 2006 சனவரி 1ஆம் தேதியன்று நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

12. இச் சட்டத்தின் இப்பாகத்தின் நியதிகளின்படி முதன்மைச் சட்டவாக்கத்திற்கான முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட சட்டவாக்கங்களை நிர்வகிக்கையில் 2006 சனவரி 1ஆம் தேதியன்று தொடங்கி இச்சட்டம் தொடங்கும் தேதியன்று முடிவடையும் காலப்பகுதியின்போது இயைபான அதிகாரிகளால் சமூகப் பொறுப்புடைமை அறவீடாக ஏதேனும் தொகை திரட்டப்பட்டுள்ளவிடத்து சமூகப் பொறுப்புடைமை அறவீடாக அவ்வாறு திரட்டப்பட்டதொகை செல்லுபடியான முறையில் திரட்டப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அதனை அறவிடும் அந்தந்த இயைபான அதிகாரிகள் மேற்படி அறவீட்டைத் திரட்டுதல் தொடர்பில் எல்லாக் குடியியல் அல்லது குற்றவியல் நடவடிக்கைகளுக்கும் எதிராக இத்தால் நட்டோத்ரதிரவாதம் செய்யப்படுகின்றனர்.

## பாகம் 1V

### 2003ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க, நிதிச் சட்டத்தைத் திருத்துதல்

13. இரண்டாயிரத்து நான்காம் ஆண்டின் 11ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 2003ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பாகம் 11 (உல்லாசப் பயணத்துறை அபிவிருத்தி அறவீடு) அதன் 11ஆம் பிரிவில் அத்தகைய பிரிவுக்கான காப்பு வாசகத்திற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது:-

"ஆயின், எவ்வாறாயினும் 1968ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க, உல்லாசப்பணயத்துறை அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் உரிமமளிக்கப்பட்டபொது விற்பனை முகவர்கள் உட்பட பிரயாண முகவர்களிடமிருந்து விமானச் சீட்டுக்களின் விற்பனையின்மீது பெறப்படும் தரகின்மீது அத்தகைய அறவீடு விதிக்கப்படுதலாகாது."

## பாகம் V

### 2002ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க, நிதிச் சட்டத்தைத் திருத்துதல்

14. இரண்டாயிரத்து ஐந்தாம் ஆண்டின் 5ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான 2002ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பாகம் 1 (துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீடு) அதன் 2ஆம் பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவிற்கான முதலாவது காப்பு வாசகத்திற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்

"ஆயின், மேலே குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் பொருளின் விலை, காப்புறுதி, கேழ்வுப் பெறுமதி தொடர்பில் -

(அ) 2004, நவெம்பர் 19ஆம் தேதி தொடங்கி 2005 திசெம்பர் 31ஆம் தேதி முடிவடையும் காலப்பகுதி தொடர்பில் 1.5 சதவீதப்படி அறவீடொன்றும்; அத்துடன்

(ஆ) 2006, சனவரி 1ஆம் தேதி தொடங்கும் காலப்பகுதி தொடர்பில் 2.5 சதவீதப்படி அறவீடொன்றும்

அறவிடப்படுதலும் விதிப்பனவு செய்யப்படுதலும் வேண்டும்;";

(2) அப்பிரிவிற்கான இரண்டாம் காப்பு வாசகத்தை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துவதன்மூலமும்:-

"ஆயினும் மேலும், 2006, சனவரி 1ஆம் தேதியிலிருந்து முறைவழிப்படுத்தி மீள் ஏற்றுமதி செய்யும் நோக்கத்திற்காக அல்லது ஏற்றுமதிக்கான பண்டங்களின் உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்கென இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட ஏதேனும் பொருள் தொடர்பில் அறவீடெதுவும் விதிப்பனவு செய்யப்படுதலாகாது.".

15. இப்பாகத்தின் ஏற்பாடுகள் 2006, சனவரி 1ஆம் தேதியன்று பயனுறுவதாகக் கருதப்படுதல் வேண்டும்.

16. இரண்டாயிரத்து ஆறு சனவரி 1ஆம் தேதி தொடங்குவதும் இச்சட்டம் தொடங்கும் தேதியன்று முடிவடைவதும் காலப்பகுதியின்போது இச்சட்டத்தின் இப்பாகத்தின் நியதிகளின்படி துறைமுக, விமான நிலைய அறவீடொன்றாக, 2002 ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பாகம் 1இல் குறிப்பீடு செய்யப்பட்டவாறான ஏதேனும் பொருளை இறக்குமதி செய்யும் எவரேனும் ஆளிடமிருந்து பொருளொன்றின் விலை, காப்புறுதி மற்றும் கேழ்வுப் பெறுமதியின்மீது 2.5 சதவீதத்திற்குச் சமமான தொகையொன்று சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதியால் திரட்டப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய திரட்டுதலானது எல்லா நோக்கங்களுக்காகவும் செல்லுபடியான முறையில் திரட்டப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய திரட்டுதல் தொடர்பில் சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதி எல்லா குடியியல் அல்லது குற்றவியல் நடவடிக்கைகளுக்கெதிராக இத்தால் நட்டோத்திரவாதம் செய்யப்படுகின்றார்.

17. இச் சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## 2006ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க, வங்கித் தொழில் (திருத்தச் சட்டம்)

[2006ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

### 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க, வங்கித் தொழிற் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

1. இச்சட்டம் 2006ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க, வங்கித் தொழில் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க, வங்கித் தொழிற் சட்டத்தின் 19ஆம் பிரிவு அப்பிரிவின் 3(அ) என்னும் உட்பிரிவை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(3)(அ) பணச் சபையானது உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றின் -

(i) வைப்புப் பொறுப்புக்களை அல்லது எதிர்பாராப் பொறுப்புக்களுட்பட மொத்தப் பொறுப்புக்களை அல்லது மொத்தச் சொத்துக்களை அல்லது சொத்துக்களின் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் வகுதியை; அல்லது

(ii) வங்கித் தொழில் முறைமையின் இலாப வாய்ப்பையும் உறுதி நிலையையும் தேசிய பொருளாதாரத்தின் நலன்களையும் கருத்திற்கொண்டு,

இப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவின்கீழ் ஒப்புரவு மூலதனமாக உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றினால் பேணப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட ஆகக் குறைந்த தொகைகளெனக் குறித்துரைக்கப்பட்ட தொகைகளை காலத்துக்குக் காலம் வேறுபடுத்தலாம்.".

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 46ஆம் பிரிவு அதன் (1)ஆம் உட்பிரிவில் (ஈ) என்னும் பந்தியின் (ii) ஆம் உட்பந்தியின் (இ) என்னும் வாசகத்திற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பந்தியை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(இ) எந்தக் கம்பெனிகள் ஒவ்வொன்றிலும் விடயத்திற்கேற்ப தனியாள் ஒருவருக்கு அல்லது கம்பெனியொன்றுக்கு நேரடியாகவாயினுஞ்சரி, நேரடியாக அல்லாமலுஞ்சரி அல்லது பயனுள்ள வகையிலாயினுஞ்சரி கணிசமான அக்கறை அல்லது முக்கியமான முகாமைத்துவ அக்கறை ஒன்று உள்ளதோ அந்தக் கம்பெனிகளினால்"

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 76எ என்னும் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

"உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியொன்றினால் பேணப்பட வேண்டிய ஒப்புரவு மூலதனம்.

76எ.(1) மூன்றாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கி ஒவ்வொன்றும் எல்லா நேரங்களிலும் ஐம்பது மில்லியனுக்குக் குறையாத தொகையொன்றில் அல்லது தேசிய பொருளாதாரத்தின் நலன்களையும் வங்கித் தொழில் முறைமையின் இலாப வாய்ப்பையும் உறுதிப்பாட்டையும் கருத்திற் கொண்டு அமைச்சரின் ஒருப்பாட்டுடன் பணச்சபையானது, காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய வேறு தொகையொன்றில் ஆன ஒப்புரவு மூலதனமொன்றைப் பெறுதல் வேண்டும்;

(2) இப்பிரிவின் நோக்கத்திற்கு "ஒப்புரவு மூலதனம்" என்பது 19ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் அதற்குக் குறித்தொதுக்கப்பட்டுள்ள அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) (அ) பணச்சபையானது பின்வருவனவற்றைக் கருத்திற்கொண்டு இப் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் கீழ், ஒப்புரவு மூலதனமொன்றாக உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியொன்றினால் பேணப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட ஆகக் குறைந்த தொகைகளாகக் குறித்துரைக்கப்பட்ட தொகைகளைக் காலத்திற்குக் காலம் வேறுபடுத்தலாம்:-

(i) வங்கியொன்றின் எதிர்பாரா பின்னிகழ்வுப் பொறுப்புக்கள் அல்லது மொத்தப் பொறுப்புக்கள் அல்லது மொத்தச் சொத்துக்கள் அல்லது ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட பிரிவைச் சேர்ந்த பொறுப்புக்கள்; அல்லது

(ii) வங்கித் தொழில் முறைமையின் இலாப வாய்ப்பு உறுதிப்பாடு மற்றும் தேசிய பொருளாதாரத்தின் நலன்கள்.

(ஆ) தேவைப்படுத்தப்பட்ட குறைந்தபட்ச ஒப்புரவு மூலதனத்தைக் கணிப்பிடும் நோக்கத்திற்குப் பொறுப்புக்கள் அல்லது சொத்துக்கள் தொடர்பில் அத்தகைய தொகை விதித்துரைக்கப்படும்போது மூலதனம் அத்துடன் பொறுப்புக்கள் அல்லது சொத்துக்கள் இரண்டும் நாட்டின் பொருளாதாரத்தின் நலனைக் கருத்திற்கொண்டு பணச்சபை காலத்துக்குக்காலம் தீர்மானிக்கக்கூடிய அத்தகைய வகையினதாக இருத்தலும் அத்தகைய முறையில் கணிப்பிடப்படுதலும் வேண்டும்;

(இ) உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியொன்றினால் பேணப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட ஒப்புரவு மூலதனம் தொடர்பில் பணச்சபையால் செய்யப்பட்ட ஏதேனும் வேறுபாட்டை, பணச்சபையானது உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கிகள் எல்லாவற்றிற்கும் எழுத்தில் தெரிவித்தல் வேண்டும்;

(ஈ) ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கி அத்தகைய வேறுபாட்டினால் அதன் ஒப்புரவு மூலதனத்தை அதிகரிக்குமாறு தேவைப்படுத்தப்படுமிடத்து, பணச்சபைக்குச் செய்யப்படும் விண்ணப்பத்தின்மீது அத்தகைய தேவைப்பாட்டுடன் இணங்கியொழுகுவதற்குப் பன்னிரண்டு மாதங்களைக் கொண்டவொரு காலப்பகுதி அல்லது பணச்சபையால் அளிக்கப்படக் கூடியவாறான அதற்கு மேம்பட்ட அத்தகைய காலப்பகுதி அதற்கு வழங்கப்படுதல் வேண்டும்.

(4) எழுத்திலான ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டதும் அல்லது தாபிக்கப்பட்டதும் உரிமமளிக்கப்பட்டதுமான விசேட வங்கியின் விடயத்தில் அத்தகைய வங்கியின் மூலதனத்தில் வெளிநாட்டுப் பங்கேற்பின் வரையறையானது ஒவ்வொரு நேரத்திலும் பணச்சபையால் காலத்துக்குக் காலம் தாபிக்கப்பட்ட வரையறையை விஞ்சுதலாகாது.

(5) உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியொன்று பணச்சபையின் எழுத்திலான முன் அங்கீகாரமின்றி அதன் ஒப்புரவு மூலதனத்தைக் குறைத்தலாகாது.

(6) உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியொன்று அத்தகைய வங்கியின் ஏதேனும் செலுத்தப்படாத மூலதனத்தின்மீது பொறுப்பு எதனையும் உருவாக்குதலாகாது என்பதுடன் இந்த ஏற்பாடுகளை மீறி உருவாக்கப்படும் அத்தகைய பொறுப்பு எதுவும் வெற்றும் வறிதுமாதலும் வேண்டும்.

(7) (அ) உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கி ஒவ்வொன்றும் எல்லா நேரங்களிலும் பணச்சபையால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான போதுமாந்தன்மையதாக மூலதன விகிதாசாரமொன்றைப் பேணுதல் வேண்டும்; பணச்சபையானது பேணப்பட வேண்டிய அத்தகைய விகிதாசாரத்தை தீர்மானிக்குகையில் பேசிலில் சர்வதேசத் தீர்வுகளுக்கு வங்கியால் தரப்பட்ட மூலதனத்தின் போதுமாந் தன்மைக்கான வழிகாட்டிகளை சாத்தியப்படக் கூடிய அளவுக்குக் கடைப்பிடித்தல் வேண்டும்.

(ஆ) பந்தி (அ) என்பதில் குறிப்பீடு செய்யப் போதுமாந்தன்மையதான மூலதன விகிதாசாரத்திலான வேறுபாடு எதுவும் உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கி ஒவ்வொன்றிற்கும் பணச்சபால் எழுத்தில் தெரிவிக்கப்படுதல் வேண்டும்; ஆயினும் அதன் மூலதனத்தை அதிகரிக்குமாறு அத்தகைய வேறுபாட்டால் தேவைப்படுத்தப்பட்ட உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கி ஒவ்வொன்றும் அத்தகைய தேவைப்பாட்டுடன் இணங்கியொழுகுவதற்கு பன்னிரண்டு மாதங்களைக் கொண்டவொரு காலப்பகுதி அல்லது பணச்சபையால் அளிக்கப்படக் கூடியவாறான அதற்கு மேற்பட்ட அத்தகைய காலப்பகுதி அளிக்கப்படுதல் வேண்டும்.

(8) உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியொன்றின் ஒப்புரவு மூலதனம் அல்லது மூலதன நிதிகள் முற்போந்த ஏற்பாடுகளின் நியதிகளின்படி பற்றாக்குறையாகுமிடத்து பணச்சபையானது அத்தகைய பற்றாக் குறையை சீர்திருத்துவதற்கு நியாயமானவொரு காலப்பகுதியை அளித்தல் வேண்டும்.".

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 76எ என்னும் பிரிவில் அடங்கியுள்ள எதுவும் 1997 ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க, பிராந்திய அபிவிருத்தி வங்கிகள் சட்டத்தின் கீழ்த் தாபிக்கப்பட்ட பிராந்திய அபிவிருத்தி வங்கியொன்றிற்கு ஏற்புடைத்தாவதாகப் பொருள் கொள்ளப்படுதலாகாது;

ஆயின், எவ்வாறாயினும், பணச்சபையானது அத்தகைய பிராந்திய அபிவிருத்தி வங்கி தொடர்பில் மூலதனத் தேவைப்பாடுகளின் ஏற்புடைத்தான வரையறைகளைக் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கலாம்.;.

6. இரண்டாயிரத்து ஐந்தாம் ஆண்டின் 2ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 76ஒ என்னும் பிரிவு அதன் (1) ஆம் உட்பந்தியில் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:-

(1) பந்தி (ட) என்பதன் (ii) (ஆ) (ஏஏ) என்னும் உட்பந்தியை நீக்கிவிடுவதன் மூலமும் ; அத்துடன்

(2) பந்தி (ட) என்பதன் (ii) என்னும் உட்பந்தியின் (ஆ) என்னும் வாசகத்தை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துவதன் மூலமும் :-

(இ) எந்தக் கம்பெனிகள் ஒவ்வொன்றிலும், விடயத்திற்கேற்ப, தனியாள் ஒருவருக்கு அல்லது கம்பனியொன்றிற்கு நேரடியாகவாயினுஞ்சரி நேரடியாவல்லாமலாயினுஞ்சரி அல்லது பயனுள்ள வகையிலாயினுஞ்சரி கணிசமான அக்கறை அல்லது முக்கியமான முகாமைத்துவ அக்கறை ஒன்று உள்ளதோ அந்தக் கம்பெனி ஒவ்வொன்றும்,

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 19ஆம் பிரிவின் கீழ் அல்லது 76 என்னும் பிரிவின் கீழ் இச் சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் எந்நேரத்திலேனும் செய்யப்பட்ட அல்லது வழங்கப்பட்ட ஏதேனும் தீர்மானம், முடிபு அல்லது பணிப்பு, விடயத்திற்கேற்ப, இச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 19ஆம் பிரிவின் அல்லது 76எ என்னும் பிரிவின் நியதிகளின்படி செல்லுபடியானதாகச் செய்யப்பட்டுள்ளதாக அல்லது வழங்கப்பட்டுள்ளதாக எல்லா நோக்கங்களுக்காகவும் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்க அத்தகைய ஏதேனும் தீர்மானத்தின்கீழ், முடிபின்கீழ் அல்லது பணிப்பின்கீழ் எடுக்கப்பட்ட ஏதேனும் நடவடிக்கை செல்லுபடியானதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

8. இச் சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## 2006ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க, தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்

[2006ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 29ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

### தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் என அழைக்கப்படும் நிதியம் ஒன்றைத் தாபிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும் அத்துடன் அதனோடு தொடர்புடைய அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்

ஏனையவற்றுடன் சுகாதாரம், ஆளுக்குரியவிபத்து மற்றும் ஆதனங்களுக்கான சேதம் என்பன தொடர்பில் எதிர்பாரா ஆபத்துக்களுக்கெதிராக வர்த்தகக் காப்புறுதி ஒழுங்கமைப்புக்களாலும் அத்தகைய நோக்கத்திற்காகத் தாபிக்கப்பட்ட வேறு நிதியங்களாலும் தொழிற்படுத்தப்படும் உதவுதொகையளிக் காப்புறுதித் திட்டமொன்றின் ஊடாக அரசாங்கம், பகிரங்க சேவையிலும் மாகாண பகிரங்க சேவையிலுமுள்ள பகிரங்க அலுவலர்களுக்கு நலன்களும் பாதுகாப்புகளும் வழங்கியுள்ளதாதலாலும்:

அத்துடன், சமூர்த்தி பயனுகரிகள், விவசாயிகள், மீனவர்கள் அத்துடன் சுயதொழிலில் ஈடுபட்டுள்ள ஆட்கள் உட்பட கூடுதலாகப் பாதிப்பிற்குட்படும் சாத்தியமுள்ள சமதாயத்தின் பிரிவினரின் நன்மைக்கு அரசாங்கமும் நலன்பேனும் திட்டங்களையும் காப்புறுதித் திட்டங்களையும் தொழிற்படுத்துகின்றதாதலாலும்:

அத்துடன், அரசாங்கம் அத்தகைய காப்புறுதித் திட்டங்களையும் அத்தகைய வேறு திட்டங்களையும் சீராமைப்படுத்த விரும்புகின்றதாதலாலும் அத்துடன் அதன் பொருட்டு இச் சட்டத்தின் நியதிகளின்படி நன்மைகளுக்குத் தகுதியுடைய எல்லா ஆட்களுக்கும் அதிகபட்ச நலன்களை உறுதிப்படுத்தும் அதேவேளை மேலும் வினைத்திறனானம் ஒத்துழைக்கப்படுவதுமானமுறை ஒன்றில் மேற்கூறப்பட்ட வசதிகளை வழங்க இயலுமாயிருப்பதற்காக அரசாங்கம் தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு ஒன்றை நிறுவ முன்னுகின்றதாதலாலும்:

1. இச்சட்டம் 2006ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க, தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. இச்சட்டத்தின் ஏற்பாடுகள் பின்வருவோர் தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும்:

(அ) பகிரங்க அலுவலர்கள்;

(ஆ) பகிரங்க சேவையிலிருந்து ஓய்வுபெற்று அரசாங்கத்திடமிருந்து ஓய்வூதியம் ஒன்றைப் பெறும் ஆட்கள்;

(இ) மாகாண பகிரங்க சேவைகள் அலுவலர்கள் ;

(ஈ) மாகாண பகிரங்க சேவையிலிருந்து ஓய்வுபெற்று அந்தந்த மாகாண சபையிடமிருந்து ஓய்வூதியமொன்றைப் பெறும் ஆட்கள்;

(உ) உள்ளூராட்சி சபையின் உறுப்பினர்கள் ;

(ஊ) உள்ளூராட்சிச் சேவையிலிருந்து ஓய்வுபெற்று உள்ளூராட்சிச் சேவையிலிருந்து ஓய்வூதியமொன்றைப் பெறும் ஆட்கள்;

(எ) 1995ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க, சமூர்த்தி அதிகாரரச் சட்டத்தின் கீழ் நலன்களைப் பெறும் ஆட்கள்;

(ஏ) விவசாயிகளும் மீனவர்களும் சுயதொழிலில் ஈடுபட்டுள்ள ஆட்களும்;

(ஐ) இதன்கண் அடங்கியுள்ள எவையேனும் வரையறைகளுக்கமைய வர்த்தகமானியில் வெளியிடப்படும் கட்டளையின் மூலம் அமைச்சரால் காலத்துக்குக்காலம் இனம் காணப்படக்கூடியவாறான இல்லாக்குறையுடைய ஆட்கள் அல்லது ஆட்களின் குழுக்கள்;

(ஒ) வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளையின்மூலம் அமைச்சரால் காலத்துக்குக் காலம் இனம்காணப்படக் கூடிய ஏதேனும் அரசாங்கத்தின் ஆதனம்.

### பாகம் 1

### தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்

3. (இதனகத்துப் பின்னர் "நிதியம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் என் அழைக்கப்படவுள்ள நிதியமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும். இதிலிருந்து இச் சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும் ஆட்களுக்கு நன்மைகள் செலுத்தப்படுதல் வேண்டும். 18ஆம் பிரிவில் குறித்துரைக்கப்படுகின்றவறான அத்தகைய பணங்கள் நிதியத்திற்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

4.(1) (இதனகத்துப் பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியச்சபையொன்று தாபிக்கப்படுதல் வேண்டும். இது 6ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய ஆட்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) சபையானது (1)ஆம் உட்பிரிவால் அதற்குக் குறித்துரைக்கப்பட்ட பெயரைக்கொண்டு இடையறாவழியுரிமையையும் பொது இலச்சினையொன்றையும் கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும் என்பதுடன் அதன் கூட்டிணைக்கப்பட்ட பெயரில்

வழக்குத் தொடரப்படலாம்; என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடரப்படலாம்; அத்துடன் கூட்டிணைக்கப்பட்ட குழுக்கள் சட்டத்தால் புரியப்படக்கூடியவாறான அத்தகைய செயல்களைப்புரியலாம்.

5. (1) சபையின் இலச்சினை சபையால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய ஆளின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும்.

(2) சபையின் இலச்சினை சபையால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம்.

(3) சபையின் இலச்சினை சபையின் தவிசாளரினதும் சபையின் வேறொரு உறுப்பினரினதும் முன்னிலையிலன்றி சாதனம் அல்லது ஆவணம் எதிலும் பொறிக்கப்படுதலாகாது; இவர்களிருவரும் தாங்கள் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக அத்தகைய சாதனத்தில் அல்லது ஆவணத்தில் கையொப்பமிடுதல் வேண்டும்:

ஆயினும், சபையின் இலச்சினை ஏதேனும் சாதனத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக்கும் நேரத்தில் தவிசாளரால் சமுகமாயிருக்க இயலாதிருக்குமிடத்து, அதன் பொருட்டு தவிசாளரால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட வேறு எவரேனும் ஆள் இவ்வுட்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளுக்கிணங்க அத்தகைய சாதனத்தை அல்லது ஆவணத்தை கையொப்பமிடுவதற்குத் தகுதியுடைவராதல் வேண்டும்.

(4) சபையானது சபையின் இலச்சினை எந்தச் சாதனங்களுக்கு அல்லது ஆவணங்களுக்குப் பொறிக்கப்படுகின்றதோ அந்தச் சாதனங்கள் அல்லது ஆவணங்கள் ஒவ்வொன்றினதும் பதிவேடொன்றைப் பேணுதல் வேண்டும்.

6. (1) சபையானது அமைச்சரால் நியமிக்கப்படவேண்டியவர்களான பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) நிதி என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தொதுக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சரின் அமைச்சின் அலுவலரொருவர்;

(ஆ) நிதி என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தொதுக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சரின் அமைச்சின் பிரதம கணக்காளர்;

(இ) சுகாதாரம் என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தொதுக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சரின் அமைச்சின் அலுவலரொருவர்;

(ஈ) பொது நிர்வாகம் என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தொதுக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சரின் அமைச்சின் அலுவலரொருவர் ; அத்துடன்

(உ) நிதி, வங்கித் தொழில், காப்புறுதி முகாமைத்துறை அல்லது சட்டம் என்னும் துறைகளில் தகைமைகள் அல்லது நிபுணத்துவம் கொண்ட ஆட்களிடையேயிருந்து அமைச்சரால் பெயர்குறித்து நியமிக்கப்படவுள்ள மூன்று ஆட்கள்.

(2) சபையின் தவிசாளர் அமைச்சரால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

7. (1) பெயர் குறித்து நியமிக்கப்படும் உறுப்பினர் ஒவ்வொருவரும், அவர் இறப்பினால், பதவிதுறத்தலினால் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதனால் பதவியை முன்னரேவறிதாக்கினாலன்றி நியமனத்திலிருந்து ஐந்து ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(2) பெயர் குறித்து நியமிக்கப்படும் உறுப்பினர் ஒருவர் அவரது பதவியை வறிதாக்குதல் தொடர்பில் அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பப்பட்ட எழுத்திலான கடிதத்தின் மூலம் அவரது பதவியிலிருந்து விலகலாம்.

(3) அமைச்சரானவர் பெயர்குறித்து நியமிக்கப்படும் உறுப்பினர் எவருக்கும் முகவரியிட்டனுப்பப்பட்ட எழுத்திலான கடிதத்தின் மூலம் குறித்துரைக்கப்பட்ட காரணங்களுக்காக அத்தகைய உறுப்பினரைப் பதவியிலிருந்து அகற்றலாம்.

(4) எந்த பெயர்குறித்து நியமிக்கப்படும் உறுப்பினருக்கு (3)ஆம் உட்பிரிவின் முகவரியிட்டனுப்படுகின்றதோ அந்த நியமன உறுப்பினர் ஒருவர் அத்தகைய கடிதத்தில் குறித்துரைக்கப்படக் கூடியவறான அத்தகைய தேதியிலிருந்து பதவிவகிப்பதனை இல்லாதொழித்தல் வேண்டும்.

(5) பதவியிலிருந்து அகற்றப்பட்டிருக்கின்ற பெயர் குறித்து நியமிக்கப்படும் உறுப்பினரொருவர் சபையின் உறுப்பினரொருவராக அல்லது வேறு ஏதேனும் தன்மையில் சபையில் செயலாற்றுவதற்கான மீளநியமனத்திற்கு தகுதியுடையவராதலாகாது.

(6) பெயர் குறித்து நியமிக்கப்படும் உறுப்பினர் எவரும் பதவி வகித்தலை இல்லாதொழித்ததன்மீது, அமைச்சர் அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு வேறு எவரேனும் ஆளை நியமிக்கலாம் என்பதுடன் அத்தகைய ஆள் எந்த உறுப்பினரைப் பின்னுறுகின்றாரோ அந்த உறுப்பினரின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்குப் பதவிவகித்தலும் வேண்டும்.

(7) எவரேனும் உறுப்பினர் சுகயீனம் காரணமாக, இலங்கையில் இல்லாதிருப்பதன் காரணமாக அல்லது வேறு ஏதேனும் ஏதுவினால் அவரது பதவிக்குரிய கடமைகளைத் தற்காலிகமாக நிறைவேற்ற இயலாதிருக்குமிடத்து, அமைச்சர் அத்தகைய உறுப்பினரின் இடத்திற் செயலாற்றுவதற்கென எவரேனும் ஆளை நியமிக்கலாம்.

8. ஆளொருவர் -

(அ) பாராளுமன்ற உறுப்பினரொருவராக, மாகாணசபையொன்றின் உறுப்பினரொருவராக அல்லது ஓர் உள்ளூராட்சி மன்றத்தின் உறுப்பினரொருவராக இருப்பின்; அல்லது

(ஆ) இலங்கையில் அல்லது வேறு எதேனும் நாட்டில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின் கீழ் சித்தசுவாதீனமற்றவராகக் காணப்படின் அல்லது வெளிப்படுத்தப்படின்; அல்லது

(இ) இலங்கையில் அல்லது வேறு ஏதேனும் நாட்டில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின் கீழ் கடனிறுக்கவகையற்றவராக அல்லது வங்கிமுறிந்தவராக வெளிப்படுத்தப்பட்ட ஆளொருவராக இருப்பின் ; அல்லது

(ஈ) இலங்கையிலுள்ள அல்லது வெளிநாட்டிலுள்ள ஏதேனும் நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட மறியற் தண்டனைத் தீர்ப்பை அனுபவித்துக் கொண்டிருந்தால் அல்லது அனுபவித்திருந்தால்.

அவர் உறுப்பினரொருவராக இருப்பதிலிருந்து அல்லது தொடர்ந்திருப்பதிலிருந்து தகைமையிழந்தவராதல் வேண்டும்.

9. சபையின் செயற்பாடு அல்லது நடவடிக்கை எதுவும் அதன் உறுப்பினர்களிடையே வெற்றிடம் உள்ளது அல்லது அதன் எவரேனும் உறுப்பினர்களின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு உள்ளது என்ற காரணத்தினால் மாத்திரம் செல்லுபடியற்றதாதலாகாது.

10. சபையின் உறுப்பினர்களுக்கு நிதி என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தொதுக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சருடனான ஒருப்பாட்டுடன் சபையால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய முறையில் ஊதியமளிக்கப்படலாம் என்பதுடன் அவர்கள் அத்தகைய நியதி நிபந்தனைகளுக்கமைய தங்கள் பணிகளை நிறைவேற்றுதலும் வேண்டும்.

11.(1) இச்சட்டத்தின் வேறு ஏற்பாடுகளுக்கமைய. சபையானது சபையின் கூட்டங்கள் மற்றும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களை நிறைவேற்றுதல் தொடர்பில் அதன் நடவடிக்கை முறையை ஒழுங்குபடுத்தலாம்.

(2) சபையின் கூட்டமொன்றுக்கான கூட்ட நடப்பெண் மூன்று உறுப்பினர்களாதல் வேண்டும்.

12. சபையின் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும்.

(அ) சபையால் தொழிற்படுத்தப்படவுள்ள உதவுதொகையளிக் காப்புறுதித் திட்டமொன்றின் ஊடாக-

(i) விடயத்திற்கேற்ப பகிரங்க அலுவலர்கள், மாகாண பகிரங்க சேவை அலுவலர்கள் மற்றும் பகிரங்க சேவையிலும் மாகாண பகிரங்க சேவையிலும் உள்ளூராட்சிச் சேவையிலுமிருந்து ஓய்வுபெற்ற ஆட்கள், அத்துடன் அரசாங்கத்திடமிருந்து, மகாண சபையிடமிருந்து அல்லது உள்ளூராட்சிச் சேவையிலிருந்து ஓய்வூதியமொன்றைப் பெறுகின்ற ஆட்கள் ஆகியோருக்கும்;

(ii) 1995ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க, இலங்கை சமுர்த்தி அதிகாரசபைச் சட்டத்தின் விதிகளின்படி சமுர்த்தி பயநுகரிகளுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும்;

(iii) கமக்காரர்களுக்கும் மீனவர்களுக்கும் சுயதொழிலில் ஈடுபட்டுள்ள ஆட்களுக்கும்;

(iv) சபையின் விதப்புரையின்மீது அமைச்சரால் காலத்துக்குக்காலம் இனங்காணப்பட்ட இல்லாக்குறையுள்ள ஆட்களுக்கும் ஆட்கள் குழுக்களுக்கும்.

சபையால் தொழிற்படுத்தப்படவுள்ள உதவுதொகையளிக் காப்புறுதித் திட்டமொன்றின் ஊடாக சுகாதார ஆபத்துக்களுக்கும் ஆளுக்குரிய விபத்துக்கும் ஆதனத்திற்கும் எதிராக நலன்களையும் பாதுகாப்புக்களையும் வழங்கதல், வெவ்வேறு பிரிவுகளைச் சேர்ந்த பயனுகரிகள் தொடர்பில் வெவ்வேறு திட்டங்கள் ஏற்புடையனவாகும். வெவ்வேறு திட்டங்கள் தொடர்பில் ஏற்புடைத்தாகும் விடயங்கள் தொடர்பில் வெவ்வேஞ திட்டங்கள் ஏற்புடையனவாகும். வெவ்வேறு திட்டங்கள் தொடர்பில் ஏற்புடைத்தாகும் விடயங்கள் விதித்துரைக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) கூட்டிணைக்கப்பட்ட எந்தக் கம்பெனியின் பிரதான குறிக்கோள் சிறந்த சுகாதார சேவைகளை வழங்குவதற்கு அல்லது இனங்காணப்பட்ட சிகிச்சை அறைகளைக் கட்டியெழுப்புவதாக அல்லது அத்தகைய வசதிகள் இருக்குமிடத்து தற்பொழுது அத்தகைய வசதிகளை வழங்கும் எவையேனும் சிகிச்சை அறைகளைத் தரமுயர்த்துவதாக அந்த ஏதேனும் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனியில் ஒப்புரவு அக்கறையைப் பெறுவதன் ஊடாக பங்குகளைப் பெற்றுக் கொள்ளுவதில் பயனுகரியின் பங்கேற்பை ஊக்குவித்தலும்;

(இ) இச்சட்டத்தின்கீழ் நலன்களுக்கும் பாதுகாப்புக்களுக்கும் உரித்துடைய ஆட்களின் கடன்களுக்கு உத்தரவாதமளித்தலும்;

(ஈ) வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளையின் மூலம் அமைச்சர் காலத்துக்குக் காலம் இனம்காணக் கூடியவாறான அரசாங்கத்தின் ஏதேனும் ஆதனம் அல்லது ஆதனத்தின் பிரிவு வகுப்பு தொடர்பில் உத்தரவாதங்களை வழங்குதல்; அத்துடன்

(உ) மேற்படி குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமாகக் கூடியவாறான அல்லது உசிதமாகக் கூடியவாறான அத்தகைய வேறு எல்லாச் செயல்களையும் அல்லது விடயங்களையும் செய்தல்.

13. இச் சட்டத்தின் கோட்பாடுகளுக்கும் ஏற்பாடுகளுக்கும் பயனளிக்கையில், சபையானது -

(அ) அரசாங்கத்தாலும் பகிரங்க சேவை அலுவலர்காலும் மாகாணப் பகிரங்க சேவை அலுவலர்களாலும் பகிரங்க சேவை ஓய்வூதியர்களாலும் மாகாணப் பகிரங்க சேவை ஓய்வூதியர்களாலும், சமூர்த்தி பயனுகரிகள், கமக்காரர்கள், மீனவர்கள், சுயதொழிலாளர்கள் ஆகியோராலும் வேறு வறிய ஆட்களினாலம் அல்லது ஆட்கள் குழுக்களினாலும் உதவுதொகைகளாக இச் சட்டத்தின்கீழ் செலுத்தப்படும் எல்லாப் பணத் தொகைகளையும் நிதியத்தின் பணங்களின் முதலீட்டிலிருந்து ஏதேனும் வருமானத்தையும் அறவிடுதலும் பெறுதலும் வேண்டும் என்பதுடன், அத்தகைய பணத் தொகைகளை நிதியத்தில் வரவு வைக்கச் செய்வித்தலும் வேண்டும்;

(ஆ) நிதியத்தின் பணங்களை கட்டுக்காப்பில் வைத்திருத்தல் வேண்டும்.

(இ) இச்சட்டத்தின் கீழ் நலன்களுக்கு உரித்துடைய ஆட்களுக்கு ஏதேனும் விதந்துரைக்கப்பட்ட திட்டங்களின் நியதிகளின்படி வருமதியாகின்றவாறான அத்தகைய தொகைகளைச் செலுத்துதல் வேண்டும்;

(ஈ) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக உடனடியாகத் தேவைப்படாதவாறான நிதியத்தின் அத்தகைய பணங்களை அரசாங்க முறிகளில் அல்லது அரசாங்கப் பிணையங்களில் அல்லது இதன் நியதிகளின்படி எதிர்பார்க்கப்பட்ட வசதிகளை வழங்குவதற்கு இனம் காணப்பட்ட அறைகளைக் கட்டியெழுப்புவதற்கு அல்லது தரமுயர்த்துவதற்கு பிரதானமாக கூட்டிணைக்கப்பட்ட ஏதேனும் கம்பெனியின் பங்குகளில் முதலீடு செய்யலாம்;

(உ) நிதியம் தொடர்பில் பொதுக் கணக்கொன்றையும் நிதியத்தின் உறுப்பினர் ஒவ்வொருவர் தொடர்பிலும் புறம்பான தனித்தனிக் கணக்குகளையும் பேணுதல் வேண்டும்;

(ஊ) ஒவ்வோராண்டும் திசெம்பர் முப்பத்தோராம் தேதியன்றுள்ளவாறு நிதியம் தொடர்பிலான கணக்குப் புத்தகங்களை சமப்படுத்தச் செய்வித்தல் வேண்டும்;

(எ) ஒவ்வொரு நிதியாண்டிற்கும் நிதியம் தொடர்பில் பெறுதிகள் மற்றும் கொடுப்பனவுகள் பற்றிய கூற்றொன்றையும் வரவுசெலவுத் திட்ட கூற்றொன்றையும் அத்துடன் முதலீடு ஒவ்வொன்றினதும் முகப்புப் பெறுமதி, கொள்வனவு விலை, சந்தைப் பெறுமதி என்பவற்றைக் காட்டும் முதலீடுகள் பற்றிய கூற்றொன்றையும் தயாரிக்கச் செய்வித்தல் வேண்டும்;

(ஏ) ஒவ்வோராண்டு தொடர்பிலும் (எ) என்னும் பந்தியின் கீழ்த் தயாரிக்கப்பட்ட கூற்றுக்கள் ஒவ்வொன்றினதும் பிரதியொன்றை அடுத்துறும் ஆண்டின் செத்தெம்பர் முப்பத்தோராம் தேதிக்கு முன்னர் அமைச்சருக்கு அனுப்புதல் வேண்டும்.;

(ஐ) ஒவ்வோராண்டு தொடர்பிலும் நிதியத்தின் பணங்களின் முதலீட்டிலிருந்து பெறப்பட்ட வருமானத்திலிருந்து இச் சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துகையில் அவ்வாண்டில் சபையால் உறப்பட்ட செலவுகளைக் கழித்தல் வேண்டும்;

(ஒ) நிதியம் தொடர்பில் மேற்சொல்லப்பட்டவற்றைச் செயற்படுத்துவதற்கு அவசியமானவாறான இச் சட்டத்திற்கு ஒவ்வாதனவாயிராத அத்தகைய வேறு தத்துவங்களையும் கடமைகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.

14. (i) ஒரு பகிரங்க அலுவலராக, மாகாண பகிரங்க சேவை அலுவலராக அல்லது உள்ளூராட்சிமன்ற சேவை அலுவலராகவும்; அத்துடன்

(ii) விடயத்திற்கேற்ப அரசாங்கத்திடமிருந்து, ஒரு மாகாண சபையிடமிருந்து அல்லது உள்ளூராட்சி மன்ற சேவையிடமிருந்து ஓய்வூதியமொன்றைப் பெறுகின்ற ஆளொருவராகவும்; அத்துடன்

(iii) சமூர்த்தி திட்டத்தின் விவசாயிகள் ஓய்வூதியத் திட்டத்தின் உறுப்பினரொருவராகவும் அல்லது சுயதொழில் புரியும் ஆளொருவராகவும் உள்ள.

ஒவ்வோராலும் அத்துடன் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் நலன்களுக்கு உரித்துடையவர்களான ஆட்களும் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளையின் மூலம் அமைச்சரால் குறித்துரைக்கப்படக் கூடியவரான அத்தகைய பணத்தொகையிலும் நேரங்களிலும் நிதியத்திற்கு உதவுதொகையொன்றைச் செலுத்துதல் வேண்டும்.

15. சபையானது இச்சட்டத்தின் நோக்கத்திற்கு நிதியத்திலுள்ள ஏதேனும் பணத்தை -

(அ) பிரதானமாக இச்சட்டத்தில் உத்தேசிக்கப்பட்ட வசதிகளை வழங்குவதற்கு இனங்காணப்பட்ட சிகிச்சை அறைகளைக் கட்டியெழுப்புவதற்கு அல்லது தரமுயர்த்துவதற்கென கூட்டிணைக்கப்பட்ட ஏதேனும் கம்பெனியின் பங்குகளில் முதலீடு செய்வதன் மூலம்; அல்லது

(ஆ) சபையால் அங்கீகரிக்கப்படக் கூடியவறான அத்தகைய அரசாங்க முறிகளில் அல்லது அரசாங்கப் பிணையங்களில் பயன்படுத்தலாம்.

16. (1) கணக்காய்வாளர் தலைமையதிபதி அரசியலமைப்பின் 154ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கிணங்க சபையின் கணக்குகளை ஒவ்வோராண்டும் கணக்காய்வு செய்தல் வேண்டும்.

(2) ஓராம் உறுப்புரையின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் அமைச்சர் சபையின் கணக்குகளைக் கணக்காய்வு செய்வதற்கென நிதி என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தொதுக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சருடனான ஒருப்பாட்டுடனும் கணக்காய்வாளர் தலைமையதிபதியுடனான கலந்தாலோசனையுடனும் தகைமைபெற்ற கணக்காளர் ஒருவரை அல்லது கணக்காய்வாளர்களை நியமிக்கலாம். அமைச்சரால் அத்தகைய நியமனம் செய்யப்பட்டுள்ளவிடத்து, கணக்காய்வாளர் தலைமையதிபதி சபை தொடர்பில் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் கடமைகளையும் பணிகளையும் நிறைவேற்றுவதற்கும் புரிவதற்கும் அத்தகைய கணக்காய்வாளரின் அல்லது கணக்காய்வாளர்களின் சேவைகளைப் பயன்படுத்துவதற்குத் தாம் உத்தேசிப்பதாக அத்தகைய கணக்காய்வாளருக்கு அல்லது கணக்காய்வாளர்களுக்கு எழுத்தில் அறிவிக்கலாம் என்பதுடன், அதன்மீது அத்தகைய கணக்காய்வாளர் அல்லது கணக்காய்வாளர்கள் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் கீழும் கட்டுப்பாட்டின் கீழும் செயற்படுதலும் வேண்டும்.

(3)(அ) கணக்காய்வாளர் தலைமையதிபதி சபையின் கணக்குகளின் கணக்காய்வில் தமக்குத் துணைபுரியும் நோக்கத்திற்கு அவரது பணிப்பின் கீழும் கட்டுப்பாட்டின் கீழும் செயலாற்ற வேண்டியவரான தகைமைபெற்ற கணக்காய்வாளரின் அல்லது கணக்காய்வாளர்களின் சேவைகளைத் தொழிலுக்கமர்த்தலாம்.

(ஆ) சபையின் கணக்குகளின் கணக்காய்வுக்கு இயைபான ஏதேனும் தொழில்நுட்ப, உயர் தொழில்சார்ந்த அல்லது அறிவியல் ரீதியிலான பிரச்சனைகளின் பரிசீலனையில் உதவி பெறுவது அவசியமானதென கணக்காய்வாளர் தலைமையதிபதி அபிப்பிராயப்படுவாராயின் அவர் -

(i) சபையின் ஊழியர் ஒருவராக அல்லாத ஆளொருவரின் ; அல்லது

(ii) சபையின் அலுவல்களின் முகாமைத்துவத்தில் அக்கறை எதனையும் கொண்டுள்ள நிறுவனமொன்றல்லாத ஏதேனும் தொழில்நுட்ப, உயர்தொழில் சார்ந்த அல்லது அறிவியல் நிறுவனத்தின்,

சேவைகளை ஈடுபடுத்தலாம் என்பதுடன் அத்தகைய ஆள் அல்லது நிறுவனமானது அவரது பணிப்பின்கீழும் கட்டுப்பாட்டின் கீழும் செயற்படுத்தலும் வேண்டும்.

(4) (அ) கணக்காய்வாளர் தலைமையதிபதி அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆள் -

(i) சபையின் எல்லாப் புத்தகங்களக்கும் பதிவேடுகளுக்கும் விவரத் திரட்டுக்களுக்கும் வேறு ஆவணங்களுக்கும் அணுக்கம் பெறுவதற்கும் ;

(ii) சபையின் களஞ்சியத்திற்கும் வேறு ஆதனத்திற்கும் வேறு அணுக்கம் பெறுவதற்கும் ; அத்துடன்

(iii) சபையின் கணக்குகளின் கணக்காய்வை நிறைவேற்றுவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய தகவலையும் விளக்கங்களையும் சபையால் அல்லது அதன் அலுவலர்களால் கொடுத்துதவப் பெறுவதற்கும்

உரித்துடையவராதல் வேண்டும்.

(ஆ) சபையின் கணக்குகளைக் கணக்காய்வு செய்வதற்கென நியமிக்கப்பட்ட தகைமை பெற்ற கணக்காய்வாளர் ஒவ்வொருவரும் அல்லது அத்தகைய கணக்காய்வாளரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆள் சபை தொடர்பில் அதேபோன்ற அணுகத்திற்கும் தகவலுக்கும் விளக்கங்களுக்கும் உரித்துடையவராதல் வேண்டும்.

(5) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் நியமிக்கப்பட்ட தகைமைபெற்ற கணக்காய்வாளர் ஒவ்வொருவரும் அவரது அறிக்கையை அமைச்சருக்கு சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் அதன் பிரதியொன்றைக் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(6) இப்பிரிவின் நோக்கங்களுக்கு "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்னும் சொல்லமைப்பு -

(அ) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் அல்லது சட்டத்தால் தாபிக்கப்பட்ட வேறு எதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராக இருப்பவரும் கணக்காய்வாளர் ஒருவராகத் தொழில் புரிவதற்கு அத்தகைய நிறுவகத்தின் பேரவையால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டிருப்பவருமான தனியாளர் ஒருவர்; அல்லது

(ஆ) எந்தக் கணக்காளர் கழகத்தின் வதிவுள்ளபங்காளர் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும் கணக்காளர் ஒருவராகத் தொழில்புரிவதற்கு அத்தகைய நிறுவகத்தின் பேரவையால் வழங்கப்பட்ட சான்றிதலொன்றைக் கொண்டிருப்பவருமாக உள்ளாரோ அந்தக் கணக்காளர் கழகம்,

என்று பொருள்படும்.

(7) கணக்காய்வாளர் தலைமையதிபதி அவரது அறிக்கையை சபைக்கு அனுப்புதல் வேண்டும்.

17. சபையானது அதன் பணிப்பைப் பற்றிய அறிக்கையொன்றை ஆண்டுதோறும் தயாரித்து, அத்தகைய அறிக்கையை கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கையுடன் சேர்த்து, அவ்வறிக்கைகள் எந்த ஆண்டைத் தொடர்புறுத்துகின்றனவோ அந்த ஆண்டை அடுத்துறும் ஆண்டு முடிவடைவதற்கு முன்னர் அமைச்சருக்கு அனுப்புதல் வேண்டும். அமைச்சர் அத்தகைய அறிக்கைகளைப் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

18. (1) பின்வருவன நிதியத்திற்கு செலுத்தப்படுதல் வேண்டும்:-

(அ) பின்வருவனவற்றை ஈடுசெய்வதற்கு திரட்டு நிதியத்திலிருந்து பாராளுமன்றத்தின் தீர்மானத்தினால் தீர்மானிக்கக் கூடியவாறான அத்தகைய பணத்தொகைகள் :-

(i) இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதியன்று தொடங்கும் பன்னிரண்டு மாதங்களைக் கொண்டவொரு காலப்பகுதியின்போது இச்சட்டத்தின் ஏற்பாடுகளை நிறைவேற்றுகையில் சபையால்உறப்பட்ட மூலதனச் செலவினம் உட்பட எல்லாச் செலவினமும் ; அத்துடன்

(ii) இவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்படும் காலப்பகுதி முடிவுறுத்தப்படும் தேதியை உடனடுத்துவரும் நாளன்று தொடங்கும் இருபத்து நான்கு மாதகாலப்பகுதியின் பொது இச் சட்டத்தின் ஏற்பாடுகளை நிறைவேற்றுகையில் சபையால் கூறப்பட்ட எல்லா மூலதனச் செலவினமும்;

(ஆ) 2005 ஒத்தோபர் 19ஆம் தேதிய 1538ஆம் இலக்க, நம்பிக்கைப் பொறுப்பு உறுதியால் உருவாக்கப்பட்ட சமுர்த்தி சமூக அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தில் வரவிலிருக்கும் எல்லாப் பணங்களும்;

(இ) மக்கள் வங்கி, யூனியன் பிளேஸ் கணக்கில் கணக்கு இல. 014 -1 -001 - 1 -1194790 என்பதிலும் இலங்கை வங்கி கூட்டிணைப்புக் கிளையில் கணக்கு இலக்கம் 0000001829 என்பதிலும் 1987 நவெம்பர் 18ஆம் தேதிய அமைச்சரவை முடிவொன்றின் நியதிகளின்படி தாபிக்கப்பட்ட வேலை நிறுத்தம், கலவரம், குடியியல் கொந்தளிப்பு மற்றும் பயங்கரவாதம் சார்பாக நிதியத்தில் வரவிலிருக்கும் எல்லாப் பணங்களும்;

(ஈ) 1997 ஆம் ஆண்டு சனவரி 31ஆம் தேதிய 5/97 ஆம் இலக்க, பொது நிருவாகச் சுற்றறிக்கையால் தாபிக்கப்பட்ட அக்ரஹார காப்புறுதித் திட்டத்திற்காக பகிரங்க ஊழியர்களின் சம்பளத்திலிருந்து தற்பொழுது கழிப்பனவு செய்யப்படுவனவும் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினால் இலங்கை மத்திய வங்கியில் “அரசாங்க ஊழியர் காப்புறுதிக் கணக்கு” என்னும் தலைப்பிலான பிரதிச் செயலாளரின் கணக்கில் வைப்பீடு செய்யப்படுவனவுமான எல்லாப் பணத் தொகைகளும்;

(உ) சட்டத்தின் 14ஆம் பிரிவினதும் 20ஆம் பிரிவினதும் நியதிகளின்படி -

(i) பகிரங்க அலுவலர், மாகாணப் பகிரங்கசேவை அலுவலர் மற்றும் உள்ளூராட்சிச் சேவை அலுவலர் ஒவ்வொருவரிடமிருந்தும் ;

(ii) விடயத்திற்கேற்ப அரசாங்கத்திடமிருந்து, ஒரு மாகாண சபையிடமிருந்து அல்லது உள்ளூராட்சிச் சேவையிலிருந்து ஓய்வூதியமொன்றைப் பெறும் ஒவ்வோராளிடமிருந்தும்;

(iii) சமுர்த்தித் திட்டத்தினதும் விவசாயிகள் ஓய்வூதியத் திட்டத்தினதும் மீனவர் ஓய்வூதியத் திட்டத்தினதும் உறுப்பினர் ஒவ்வொருவரிடமிருந்தும் அத்துடன் சுயதொழில் புரியும் ஒவ்வோராளிடமிருந்தும்.

பெறப்படும் உதவு தொகைகள்.

(2) ஓராம் உட்பந்தியின் (அ) என்னும் பந்தியின் கீழ் திரட்டு நிதியத்திலிருந்து செலுத்தப்படும் பணத்தொகை ஒவ்வொன்றும் அரசாங்கத்திடமிருந்து சபைக்குக் கடனொன்றாக அமைதல் வேண்டும் என்பதுடன் அமைச்சரால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய நியதி நிபந்தனைக்களுக்கமைய மீளச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

19. நிதியத்திலிருந்து -

(அ) மருத்துவமனைகளின் இனங்காணப்பட்ட சிகிச்சை அறைகளில் சிகிச்சை பெறுபவர்களும் இச்சட்டத்தின் கீழ் நலன்களுக்கு உரித்துடையவர்களுமான ஆட்கள் தொடர்பில் செலவுகளை செலுத்தத் தீர்ப்பதற்குத் தேவைப்படுத்தப்பட்ட பணங்கள் யாவும்;

(ஆ) இச் சட்டத்தின் கீழ் நலன்களுக்கு உரித்துடைய ஆட்களுக்கு கடும் சுகயீனத்திற்கு சிகிச்சையளிப்பதற்கும் அத்தகைய சிகிச்சை கிடைக்கக்கூடிய மருத்துவமனையொன்றில் வித்துரைக்கப்பட வேண்டியவாறான அத்தகைய வீதங்களுக்கிணங்க செலவுகள் யாவும் ;

(இ) இச் சட்டத்தின்கீழ் நலன்களுக்கு உரித்துடைய ஆளின் வாழ்க்கைத் தொழில் தொடர்பில் இடம்பெறும் விபத்தின் காரணமாக ஏற்படும் இறப்பின் விடயங்களில் விதித்துரைக்கப்பட வேண்டிய அத்தகைய வீதங்களுக்கிணங்க செலவுகள் யாவும் ; ஆயின் இறப்பு ஓய்வு பெறும் வயதுக்கு முன்னர் இடம் பெற்றிருத்தல் வேண்டும்.

செலுத்தப்படல் வேண்டும் ;

ஆயின் ஓய்வு பெற்ற தேதியின் பின்னர் இடம்பெறும் இறப்பின் விடயத்தில் தங்கிவாழுநர்களுக்கு ஏதேனும் நலனின் கொடுப்பனவு எவும் செய்யப்படுதலாகாது.

20. சட்டம் ஏற்புடைத்தாகின்றவர்களும் இச்சட்டத்தின் நியதிகளின்படி நலன்களைப் பெறுவதற்கு உரித்துடையவர்களுமான எல்லா ஆட்களும் இச் சட்டத்தின் நியதிகளின்படி அவர்கள் பெறும் நலன்கள் தொடர்பில் அமைச்சரால் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளையின் மூலம் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய தொகையில் மாதாந்த உதவுதொகையொன்றைச் செலுத்துவதற்கு ஆளாதல் வேண்டும். அத்தகைய உதவுதொகை நிதியத்தில் வரவு வைக்கப்படுதல் வேண்டும். அத்தகைய உதவுதொகை விடயத்திற்கேற்ப முறையே அரசாங்கத்திடமிருந்து அல்லது மாகாணசபையிடமிருந்து அல்லது வேறு மூலத்திலிருந்து அத்தகைய தகுதிவாய்ந்த ஆள்பெறும் சம்பளத்திலிருந்து, ஓய்வூதியத்திலிருந்து, சமூர்த்தி நலனிலிருந்து அல்லது வேறு நலனிலிருந்து கழிப்பனவு செய்யப்படற்பாலதாதல் வேண்டும்.

## பாகம் 11

## சபையின் பணியாட்டொகுதி

21. (1) சபை அதன் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமென அது கருதுகின்றவாறான அத்தகைய வேறு அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட அலுவலர்களுக்கும் ஊழியர்களுக்கும் சபையால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய வீதங்களிலும் ஊதியம் வழங்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய சேவை நிபந்தனைகளுக்கு அமைந்தோராதலும் வேண்டும்.

(3) சபையின் வேண்டுகோளின் பேரில், பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் அந்த அலுவலரினதும் பொது நிருவாகம் என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தொதுக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினதும் சம்மதத்துடன் சபையின் பணியாட்டொகுதி அதேபோன்ற சம்மதத்துடன் சபையால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(4) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் சபையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து 1991ஆம் ஆண்டின் 37ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக் குழுச் சட்டத்தின் 14ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவு அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(5) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் சபையின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுமிடத்து 1991ஆம் ஆண்டின் 37ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14ஆம் பிரிவின் (3)ஆம் உட்பிரிவு அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(6) குறித்துரைக்கப்பட்டவொரு காலப்பகுதிக்கு அரசாங்கத்திற்கு சேவைபுரிய உடன்பட்டுள்ள எவரேனும் ஆளை சபை தொழிலுக்கமர்த்துமிடத்து அவ்வாளினால் சபைக்கான ஏதேனும் சேவைக்காலம் அத்தகைய உடன்பாட்டின் கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்திற்கு அரசாங்கத்திற்கான சேவையாகக்கருதப்படுதல் வேண்டும்.

(7) சபையின் வேண்டுகோளின் பேரில் உள்ளூராட்சி சேவையின் எவரேனும் உறுப்பினர் அல்லது உள்ளூரதிகார சபையொன்றின் வேறு எவரேனும் அலுவலர் அல்லது உறுப்பினர் அத்தகைய உறுப்பினரினதும் அலுவலரினதும் அல்லது சேவையாளரினதும் அத்துடன் விடயத்திற்கேற்ப உள்ளூராட்சிச் சேவை ஆலோசனைச் சபையினதும் அல்லது உள்ளூரதிகார சபையினதும் சம்மதத்துடன் அதேபோன்று சம்மதத்துடன் சபையால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு சபையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது சபையாலும் விடயத்துக்கேற்ப உள்ளூராட்சிச்சேவை ஆலோசனைச் சபையாலும் அல்லது உள்ளூதிகார சபையாலும் உடன்பட்டுக் கொள்ளப்படக்கூடியவாறு ஓய்வூதியம் அல்லது சேமலாபநிதிய உரிமைகள் தொடர்பிலான நியதி நிபந்தனைகள் உட்பட அத்தகைய நியதி நிபந்தனைகள் மீது அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(8) சபையின் வேண்டுகோளின்பேரில் பகிரங்கக் கூட்டுத்தாபனமொன்றின் எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர் அத்தகைய அலுவலரின் அல்லது சேவையாளரின் சம்மதத்துடன், அதேபோன்ற சம்மதத்துடன் சபையால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு சபையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது ஓய்வூதிய மற்றும் சேமலாப நிதிய உரிமைகள் தொடர்பான நியதி நிபந்தனைகள் உட்பட சபையாலும் சொல்லப்பட்ட பகிரங்கக் கூட்டுத்தாபனத்தாலும் உடன்பட்டுக் கொள்ளப்படக் கூடியவாறான அத்தகைய நியதிநிபந்தனைகளின்மீது அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(9) ஆளெவரும் (7)ஆம் உட்பிரிவை அல்லது (8) ஆம் உட்பிரிவைப் பின்பற்றி சபையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து அத்தகைய ஆள் அத்தகைய பணியாட்டொகுதியின் வேறெவரேனும் உறுப்பினரைப்போன்று அதே ஒழுங்காற்றுக் கட்டுப்பாட்டிற்கு அமைந்தவராதல் வேண்டும்.

## பாகம் III

### நானாவிதம்

22. சபை அல்லது சபையால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் பணிப்பில் குறித்துரைக்கப்பட்ட தேதியொன்றுக்கு முன்னர் சபைக்கு அல்லது அத்தகைய அலுவலருக்கு -

(அ) தொழில் தருநர் ஒருவரின் எல்லா ஊழியர்கள் தொடர்பிலும் அல்லது எவரேனும் ஊழியர் தொடர்பில் பணிப்பில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய விவரங்கள் அடங்கிய விவரத் திரட்டொன்றை;

(ஆ) அத்தொழில் தருநரால் கொடுத்துவப்பட்ட ஏதேனும் விவரத் திரட்டில் குறிப்பிடப்பட்ட எவையேனும் விவரங்கள் தொடர்பில் பணிப்பில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய தகவலை அல்லது விளக்கத்தை ; அத்துடன்

(இ) அத்தொழில் தருநரால் வைத்திருக்கப்பட வேண்டுமென இச் சட்டத்தால் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் பதிவேட்டின் அல்லது அத்தகைய பதிவேட்டின் ஏதேனும் பாகத்தின் உண்மைப்பிரதியொன்றை,

கொடுத்துதவுமாறு அத்தகைய தொழில்தருநரைப் பணிக்கலாம்.

23. சபையின் எவரேனும் உறுப்பினர் அல்லது சபையால் அதன்பொருட்டு அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் -

(அ) எவரேனும் ஊழியரின் சம்பாத்தியங்கள் தொடர்பில் ஏதேனும் இடாப்பை அல்லது பதிவேட்டை பரிசோதிப்பதற்காக எவையேனும் வளவுகளுள் அல்லது இடத்தினுள் பகலிலோ அல்லது இரவிலோ நியாயமான எல்லா நேரங்களிலும் பிரவேசித்துப் பரிசோதனை செய்யலாம்;

(ஆ) அத்தகைய இடாப்பின் அல்லது பதிவேட்டின் அல்லது அதன் பாகத்தின் பிரதிகளை எடுக்கலாம்;

(இ) எந்த ஆள் ஒரு தொழில்தருநர் என நம்புவதற்கு அவருக்கு நியாயமான காரணம் இருக்கின்றதோ அந்த எவரேனும் ஆளை அல்லது எவரேனும் ஊழியரைப் பரிசோதனை செய்யலாம் ; அத்துடன்

(ஈ) ஏதேனும் சேமலாப நிதியத்திற்கான உதவுதொகைகள் தொடர்பில் எவையேனும் பதிவேடுகளை அல்லது வேறு ஆவணங்களைப் பரிசோதனை செய்யலாம்.

24. (அ) இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்கு விதிகளின் ஏற்பாடுகளை மீறுகின்ற அல்லது அவற்றுடன் இணங்கியொழுகத் தவறுகின்ற; அல்லது

(ஆ) இச்சட்டத்தின் ஆக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்புடன் அல்லது கட்டளையுடன் இணங்கியொழுகுவதில் தவணை தவறுகின்ற ; அல்லது

(இ) இச் சட்டத்தின் கீழ்க் கொடுத்துவப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட விவரத் திரட்டிற்கு அல்லது தகவலுக்கப் பதிலாக ஏதேனும் பொய்யான விவரத்திரட்டை அல்லது தகவலை அறிந்திருந்தும் கொடுத்துதவ அல்லது கொடுத்துதவச் செய்கின்ற

ஒவ்வொராளும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதிவானொருவர் முன்னிலையில் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஆயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு அல்லது ஆறு மாதங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு ஆளாதலும் வேண்டும்.

25. இச் சட்டத்தின்கீழ் ஏதேனும் தவறு ஆட்களின் குழுமம் ஒன்றினால் புரியப்படுமிடத்து, அப்போது-

(அ) அந்த ஆட்களின் குழுமம் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாயின் அந்தக் கூட்டிணைக்கப்பட்ட குழுமத்தின் பணிப்பாளர் அத்துடன் அலுவலர் ஒவ்வொருவரும்; அல்லது

(ஆ) அந்த ஆட்கள் குழுமம் கழகமொன்றாயின் அக் கழகத்தின் பங்காளர் ஒவ்வொருவரும் ; அல்லது

(இ) அந்த ஆட்கள் குழு தொழிற்சங்கமொன்றாயின் அந்தக் கூட்டிணைக்கப்படாத குழுமத்தின் தலைவரும், முகாமையாளரும், செயலாளரும் அத்துடன் வேறு அலுவலர் ஒவ்வொருவரும்.

(ஈ) அந்த ஆட்கள் குழுமம் கூட்டிணைக்கப்படாத குழுமமொன்றாயின் அந்தக் கூட்டிணைக்கப்படாத குழுமத்தின் தலைவரும், முகாமையாளரும் செயலாளரும் அத்துடன் வேறு அலுவலர் ஒவ்வொருவரும்.

அத்தகைய தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதல் வேண்டும்.

ஆயின், அத்தகைய ஆளெவரும் அத்தகைய தவறு அவரது அறிவுக்கு எட்டாமலேயே புரியப்பட்டது அல்லது அத்தகைய தவறு புரியப்படுவதைத் தடுப்பதற்கு அவர் உரிய விழிப்புக் கவனத்தைப் பிரயோகித்தார் என எண்பிப்பாராயின் அவர் அத்தகைய தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதலாகாது.

26. இச் சட்டத்தின் கீழான தவறொன்றுக்கான துடர்ச்சி எதுவும் சபையால் அல்லது அதன் எழுத்திலான அனுமதியுடன் தவிர தொடரப்படுதலாகாது.

27. இச்சட்டத்தின்கீழ் ஏதேனும் தவறுக்காக இச் சட்டத்தின் கீழ் எவரேனும் ஆளுக்கெதிராகத் தொடரப்பட்ட துடர்ச்சி எதுவும் இச்சட்டத்தினின்றெழும் ஏதேனும் விடயம் தொடர்பாக அத்தகைய ஆளுக்கெதிராகக் கொணரப்படும் ஏதேனும் குடியியல் வழக்கிற்குத் தடையொன்றாதலாகாது.

28.(1) அமைச்சர், விதித்துரைக்கப்பட வேண்டுமென இச் சட்டத்தால் குறித்துரைக்கப்பட்ட அல்லது தேவைப்படுத்தப்பட்ட எல்லா விடயங்கள் தொடர்பிலும் அல்லது எக்கருமங்கள் தொடர்பில் ஆக்கப்பட வேண்டுமென இச் சட்டத்தால் தேவைப்படுத்தப்படுகின்றதோ அல்லது அதிகாரமளிக்கப்படுகின்றதோ அந்த எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் ஒழுங்கு விதிகளை ஆக்கலாம்.

(2) அமைச்சர் (1) ஆம் உட்பிரிவின் கீழான தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி பின்வரும் எல்லா விடயங்கள் தொடர்பில் அல்லது அவை எவற்றினதும் தொடர்பில் ஒழுங்கு விதிகளை ஆக்கலாம் -

(அ) இச்சட்டத்தின்கீழ் உதவுதொகைகளினதும் வேறு கொடுப்பனவுகளினதும் சேகரிப்பில் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைமுறை தொடர்பிலான அல்லது அதன் இடைநேர் விளைவான விடயங்கள்;

(ஆ) இச்சட்டத்தின் கீழ் பயனுகரிகளாகும் ஆட்களின் வெவ்வேறு பிரிவுகளைத் தீர்மானிக்கையில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய மூலப் பிரமாணங்களைக் குறித்துரைத்தல்;

(இ) இச்சட்டத்தின் கீழ் நலன்களுக்கு உரித்துடையவர்களாகும் ஆட்களின் வெவ்வேறு பிரிவுகளுக்கு ஏற்புடைத்தாகும் திட்டங்களின் வெவ்வேறு வகைகளையும் இச்சட்டத்தின் நியதிகளின்படி நலன்களாக அத்தகைய ஆட்களுக்கு செலுத்தப்படற்பாலனவான வெவ்வேறு வீதங்களையும் குறித்துரைத்தல்;

(ஈ) நிதியத்தை நிர்வகிக்கும் நோக்கத்திற்குத் தேவைப்படுத்தப்படக்கூடிய படிவங்களையும் வேறு ஆவணங்களையும் குறித்துரைத்தல்;

(உ) நிதியத்திற்கு அல்லது நிதியத்தினால் தவறுதலாக செலுத்தப்பட்ட ஏதேனும் பணத்தொகையை மீளளிப்புச் செய்யும் முறையைக் குறித்துரைத்தல்;

(ஊ) இச் சட்டத்தின்கீழ் ஏதேனும் நலனுக்கு உரிமைக் கோரிக்கையாளரான ஒரு சிறு பிள்ளையின் அல்லது அப்போதைக்கு அவ்வாறு செயலாற்ற இயலாதவராக இருக்கக்கூடிய ஒருவரின் சார்பில் இச்சட்டத்தின் கீழ் உரிமைக் கோரிக்கையாளர் எந்த உரிமையைப் பிரயோகிப்பதற்கு உரித்துடையவராக இருக்கக்கூடுமோ அந்த ஏதேனும் உரிமையைப் பிரயோகிப்பதற்கு எந்த முறையில் ஆளொருவர் நியமிக்கப்படலாமோ அந்த முறையைக் குறித்துரைப்பதற்கும்; அத்துடன் உரிமைக் கோரிக்கையாளருக்கு உரித்துடைய அத்தகைய நலனைப் பெறுவதற்கும் அதனைக் கையாள்வதற்குமான அவ்வாறு நியமிக்கப்பட்ட ஆளொருவருக்கு அதிகாரமளிப்பதற்கும் ஏற்பாடு செய்தல்;

(எ) அத்தகைய நலனுக்கான உரிமைக் கோரிக்கையின் மீதான தீர்மானம் அல்லது இச் சட்டத்தின் கீழான ஏதேனும் மேன்முறையீடு மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் மீளாய்வு செய்து முடிவுறாதிருக்கையில் இச்சட்டத்தின் கீழான ஏதேனும் நலனின் அளிப்பை இடைநிறுத்தம் செய்வதற்கு அறிவித்தல் கொடுக்கும் விதம்;

(ஏ) இச்சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட தீர்மானமொன்றின் கீழ் அல்லது ஏதேனும் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளின் பயனைக் கொண்டு எவரேனும் ஆளுக்கு முதலில் செலுத்தப்பட்ட ஏதேனும் பணத்தொகையானது -

(i) செலுத்தப்படற்பாலதல்ல எனப் பின்னர் தீர்மானிக்கப்படுமிடத்து, அது தகுந்த விதத்தில் செலுத்தப்பட்டதாகக் கருதுவதற்கும் ; அத்துடன்

(ii) பிழையாகச் செலுத்தப்பட்டதெனப் பின்னர் தீர்மானிக்கப்படுமிடத்து, அத்தகைய பணத்தொகையை அத்தகைய ஆளிடமிருந்து அறவிடுவதற்கும்

ஆன வழிகாட்டிகளைக் குறித்துரைத்தல் ;

(ஐ) இச் சட்டத்தின் ஏற்பாடுகளை நிறைவேற்றுகையில் தொழிலுக்கமர்த்தப்பட்ட அலுவலர்களுக்கும் சேவையாளர்களுக்கும் செலுத்தப்படற்பாலதான படிகளையும் அத்தகைய படிகளைக் கணிப்பிடும் முறையையும் குறித்துரைத்தல்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய வெளியீட்டின்மீது அல்லது ஒழுங்கு விதியில் குறித்துரைக்கப்படக் கூடியவறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின்கீழ் அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்பட்டதன் பின்னர் வசதிப்படக்கூடிய விரைவில் அங்கீகாரத்திற்கென பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) ஒழுங்குவிதியொன்று அவ்வாறு இல்லாதொழிக்கப்பட்ட தேதிபற்றிய அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

29. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

30. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் அவ்வாறு தேவைப்படுத்தினாலன்றி -

"இனம் காணப்பட்ட சிகிச்சை அறைகள்" எனபது, இச்சட்டத்தின்கீழ் நலன்களைப் பெறுவதற்கு உரித்துடைய ஆட்களுக்கு சுகாதாரக் கவனிப்பும் பராமரிப்பும் அளிக்கும் நோக்கத்திற்காக குறித்துரைக்கப்பட்ட மருத்துவமனைகளில் இனங்காணப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட சிகிச்சை அறைகள் என்று பொருள்படும்;

"கமக்காரர்"என்பது, 1987ஆம்ஆண்டின் 12ஆம் இலக்க, கமக்காரர் ஓய்வூதிய சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டச் சட்டத்தின் நியதிகளின்படி நலன்புரித் திட்டத்தில் சேர்ந்துள்ள ஒரு கமக்காரர் என்று பொருள்படும்;

"மீனவர்" என்பது, சீவனோபாயமொன்றாக மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ள ஆளொருவர் என்று பொருள்படும்;

"உள்ளூராட்சி சேவை உறுப்பினர்" என்பது, 1974ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க. உள்ளூராட்சிச் சேவைச் சட்டத்தின்கீழ் அமைத்துருவாக்கப்பட்ட உறுப்பினரொருவராக இருக்கின்ற அல்லது உறுப்பினரொருவராகக் கருதப்பட்ட ஆளொருவர் என்று பொருள்படும்;

"உள்ளூராட்சிச் சேவை ஓய்வூதியர்" என்பது, உள்ளூராட்சிச் சேவையிலிருந்து ஓய்வு பெற்றவரும் அத்தகைய சேவை தொடர்பில் ஓய்வூதியமொன்றைப் பெறுகின்றவருமான ஆளொருவர் என்று பொருள்படும்;

"மாகாண பகிரங்க சேவை அலுவலர்" என்பது, 1987ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க, மாகாண சபைகள் சட்டத்தின் நியதிகளின்படி மாகாணமொன்றின் மாகாணப் பகிரங்க சேவையில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள ஆளொருவர் என்று பொருள்படும்;

"மாகாணப் பகிரங்க சேவை ஓய்வூதியர்" என்பது, மாகாண பகிரங்க சேவையின் சேவையிலிருந்து ஓய்வுபெற்ற மாகாணசபையொன்றிலிருந்து ஓய்வூதியமொன்றைப் பெறுகின்றவருமான ஆளொருவர் என்று பொருள்படும்;

"பகிரங்க அலுவலர்" என்பது, சேவையில் உள்ளவரும் அறுபது வயதுக்குக் குறைந்தவருமான பகிரங்க அலுவலர் ஒருவர் என்று பொருள்படும்;

"பகிரங்க சேவை ஓய்வூதியர்" என்பது சேவையிலிருந்து ஓய்வுபெற்று அரசாங்கத்திடமிருந்து ஓய்வூதியமொன்றைப் பெறுகின்ற பகிரங்க அலுவலர் ஒருவர் என்று பொருள்படும்;

"சமுர்த்தி பயனுகரி" என்பது, 1995ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க, இலங்கை சமுர்த்தி அதிகாரச் சபைச் சட்டத்தின் நியதிகளின்படி நலன்களைப் பெறுவதற்கு உரித்துடைய ஆளொருவர் என்று பொருள்படும்; அத்துடன்

"சுயதொழில் புரியும் ஆள்" என்பது, தாமாகவே சீவனோபாயமொன்றைக் கொண்டுநடாத்துவதில் ஈடுபட்டுள்ள ஆளொருவர் என்று பொருள்படும்;

## 2006ஆம் ஆண்டின் 30ஆம் இலக்கக் கொடுப்பனவு உபாயங்களின் மோசடிகள் சட்டம்

[2006ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 12ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

**அதிகாரமளிக்கப்படாத அல்லது போலிபுனையப்பட்ட கொடுப்பனவு உபாயங்களை உடைமையில் வைத்திருப்பதனையும் பயன்படுத்துவதனையும் தடுப்பதற்கும்; அதிகாரமளிக்கப்படாத கொடுப்பனவு உபாயங்களை உடைமையில் வைத்திருத்தலுடன் அல்லது பயன்படுத்தலுடன் சம்பந்தப்பட்ட குறித்த சில தவறுகளை உருவாக்குவதற்கும்; அத்தகைய கொடுப்பனவு உபாயங்களைச் சட்டமுறையாக வழங்குகின்றவர்களும் பயன்படுத்துகின்றவர்களுமான ஆட்களைப் பாதுகாப்பதற்கும்; தவறாளர்களைப் புலனாய்வு செய்தல், அவர்களுக்கெதிராகக் குற்றவழக்குத் தொடுத்தல், அவர்களுக்குத் தண்டனையளித்தல் என்பனவற்றுக்காக ஏற்பாடு செய்வதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

1. இச்சட்டம் 2006ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க, கொடுப்பனவு உபாயங்களின் மோசடிகள் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. இச் சட்டத்தின் ஏற்பாடுகள், வழங்குநரொருவரினால் சட்டமுறையாக வழங்கப்படும் எல்லாக் கொடுப்பனவு உபாயங்களுக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

3. (1)(அ) புடைக்கச் செதுக்குகின்ற, மறைபொருள் குறிப்பிலக்கமிடப்படுகின்ற அல்லது மேலோட்டமாகப்படிகின்ற உபாயமொன்றுட்பட, கொடுப்பனவு உபாயங்களை ஆக்குவதற்கு அல்லது மாற்றுவதற்குப் பயன்படுத்தப்படும் சாதனங்களைச் சட்டமுறையான அதிகாரமின்றி உடைமையில் வைத்திருக்கின்ற அல்லது அந்த ஆளின் கட்டுப்பாட்டில் அல்லது கட்டுக்காப்பில் வைத்திருக்கின்ற;

(ஆ) கொடுக்கல் வாங்கல் தரவைப் பதிவதற்கு, சட்டமுறையான அதிகாரமின்றி, ஏதேனும் கொடுப்பனவு உபாயம் அல்லது அட்டை தயாரிக்கின்ற அல்லது மாற்றுகின்ற சாதனத்துடன் அல்லது உபாயங்களை ஏற்றுக் கொள்வதற்கான அல்லது செயல்முறைப்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்பட்ட ஏதேனும் சாதனத்துடன் கையிடுகின்ற அல்லது சில்லுகளை, தரவை அல்லது குரற்பதிவு உபாயங்களுட்பட்ட வெளிப் பொருட்களைப் புகுத்துகின்ற;

(இ) கொள்ளுநரின் விற்பனை வலையமைப்பு நிலையினூடாக அல்லது எந்திரமூலம் செயல் இயக்கப்பட்ட பொறிமுறை வலையமைப்பினூடாக ஊடுவுகின்ற அதிகாரவளிப்புத் தரவை ஈர்க்கும் நோக்கத்திற்காக ஏதேனும் குரல் அல்லது தரப்பதிவு உபாயமுட்பட சட்டமுறையான அதிகாரமின்றித் தொலைபேசியை இரகசியமாக ஒற்றுக்கேட்டல் உபாயமொன்றை அல்லது வேறு இதையொத்த உபாயத்தைப் பயன்படுத்துகின்ற;

(ஈ) வழங்குநரொருவரின் ஊழியரொருவராக அல்லது அதன் செய்முறைப்படுத்துநராக அல்லது உறுப்பினர் சேவை வழங்குநராக இருந்துகொண்டு, கொடுப்பனவு உபாத்தை வைத்திருப்பவரின் அதிகாரமின்றி அல்லது அனுமதியின்றி, அதிகாரமளிக்கப்படாத தனியாட்களுக்கு, தொகுதியினர்களுக்கு அல்லது கூட்டவைகளுக்கு எவரேனும் அட்டை வைத்திருப்பவர் பற்றிய தகவலை அல்லது முழுமார்க்கத் தரவை வழங்குகின்ற;

(உ) ஏதேனும் அதிகாரமளிக்கப்படாத அல்லது போலி புனையப்பட்ட கொடுப்பனவு உபாயத்தினைத் தனது கட்டுப்பாட்டில் அல்லது கட்டுக்காப்பில் உடைமை கொண்டிருக்கின்ற அல்லது வைத்திருக்கின்ற;

(ஊ) ஒரு கொடுப்பனவு உபாயத்துக்கான மோசடியான விண்ணப்பமொன்றை அல்லது மோசடியான வணிக விண்ணப்பமொன்றைச் செய்கின்ற;

(எ) அதிகாரமளிக்கப்படாத அல்லது போலி புனையப்பட்ட கொடுப்பனவு உபாயம் ஒன்றை அல்லது அதற்கு மேற்பட்டவற்றைப் பயன்படுத்துகின்ற, தயாரிக்கின்ற அல்லது அதனை அல்லது அவற்றை விலைப்படுத்துகின்ற;

(ஏ) அதிகாரமளிக்கப்படாத கொடுப்பனவு உபாயத்தினை அல்லது ஒன்றில் அதன் வழங்குநரிடமிருந்து அல்லது அதனை வைத்திருப்பவரிடமிருந்து அதற்கான அனுமதி பெறாமல் கொடுப்பனவு உபாயமொன்றைப் பயன்படுத்துகின்ற;

(ஐ) இச் சட்டத்தின் கீழான அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழான தவறொன்றைப் புரிவதற்கென செல்லுபடியான கொடுப்பனவு உபாயக் கணக்கிலக்கங்களைப் பயன்படுத்தும் நோக்கத்துக்காகக் கணக்கைத் தோற்றுகின்ற மென்கலத்தைப் பயன்படுத்தி, அத்தகைய கணக்கிலக்கங்களைத் தோற்றுவிக்கின்ற;

(ஒ) பண்டங்களை அல்லது சேவைகளைப் பெறும் நோக்கத்திற்காக, ஏதேனும் கொடுப்பனவு உபாயத்தில் அடங்கியுள்ள தகவலை, கொடுப்பனவு உபாயத்தை வைத்திருப்பவரின் அதிகாரமின்றி அல்லது அனுமதியின்றி, தொலைபேசி மூலம், தொலைநகல் மூலம், மின்னஞ்சல் மூலம், இணையத்தளத்தின் மூலம் அல்லது வேறு தொலைத் தொடர்பு முறைமூலம் அல்லது குரல்மூலம் அல்லது அஞ்சற் சேவையின் மூலம் கொடுத்துதவுகின்ற அத்துடன் பண்டங்களை அல்லது சேவைகளை வழங்குவதற்கான தகவலை ஏற்றுக்கொள்ளும்படி தகவலைப் பெறுவதற்காக ஆளைத் தூண்டுகின்ற;

(ஓ) கொடுப்பனவு உபாயத்தினை வைத்திருப்பவர் எந்தக் கொடுக்கல், வாங்கல்களுக்காகச் சட்டமுறையாக ஒப்பந்தஞ் செய்தாரோ அந்தக் கொடுக்கல் வாங்கல் தவிர்ந்த வேறு கொடுக்கல் வாங்கல்களை அத்தகைய கொடுப்பனவு உபாயத்தினை வைத்திருப்பவர் செய்து கொண்டாரென அதன் மூலம் தோன்றச் செய்யும்பொருட்டு, கொடுக்கல் வாங்கற் பதிவேடு, விற்பனை அனுப்பு பொருட்பட்டியல் அல்லது இவற்றையொத்த ஆவணம் என்பனபற்றிப் பல பெயர் விவரப் பொறிப்புகளை ஆக்குகின்ற;

(ஔ) கொடுப்பனவு உபாயமொன்று அதிகாரமளிக்கப்படாதென அல்லது போலி புனையப்பட்டதென அறிந்துகொண்டு, பண்டங்களுக்கான அல்லது சேவைகளுக்கான கொடுப்பனவு முறையொன்றாக அத்தகைய அதிகாரமளிக்கப்படாத அல்லது போலி புனையப்பட்ட கொடுப்பனவு உபாயத்தினை ஏற்றுக்கொள்ளுகின்ற;

(க) இணைந்த வணிகரொருவராகவிராமல், அதற்கு மறைமுக ஆதரவளிக்கும் இணைந்த வணிகரொருவர் மூலம், அத்தகைய கொடுக்கல் வாங்கற் பதிவேடு, விற்பனை அனுப்பு பொருட் பட்டியல் அல்லது இவற்றையொத்த ஆவணம் என்பவற்றைக் கொடுப்பனவு உபாயத்தை வழங்கியவரிடமிருந்து சேகரிப்பதற்கான கட்டளையொன்றைச் சமர்ப்பிக்கின்ற அல்லது இணைந்த வணிகரொருவராகவுள்ளாரெனப் பொய்யாகப் பாசாங்கு செய்து அத்தகைய கொடுக்கல் வாங்கற் பதிவேட்டை, விற்பனை அனுப்பு பொருட்பட்டியலை அல்லது இவற்றையொத்த ஆவணத்தைச் சேகரிப்புக்காக முன்வைக்கின்ற;

(ங) விற்பனை அனுப்பு பொருட்பட்டியலில் தோன்றுகின்ற ஏதேனும் தொகையை அல்லது வேறு தகவல்களை, கொடுப்பனவு உபாயத்தினை வைத்திருப்பவரின் அதிகாரமோ அல்லது அனுமதியோ இன்றி, மாற்றுகின்ற அல்லது இன்னுமோராளை மாற்றுவதனைச் செய்விக்கின்ற;

(ச) நேர்மையற்ற முறையில் நிதிசார் அனுகூலமொன்றை ஈட்டும் நோக்கத்திற்காக, கொடுப்பனவு உபாயமொன்றை அல்லது கொடுப்பனவு உபாயத்தில் பெயர் விவரப்பொறிப்புகளிடப்பட்டதகவலை, கொடுப்பனவு முறையொன்றாக ஏற்றுக் கொள்ளுகின்ற;

(ஞ) உண்மையில் அத்தகைய அங்கீகாரமெதுவும் அளிக்கப்பட்டிராத அல்லது உண்மையில் அங்கீகாரமளிக்கப்பட்டிருப்பினும் எழுதப்பட்டது வேண்டுமென்று அதிலிருந்து வித்தியாசப்படுகின்ற, அங்கீகாரம் பற்றிய நிகழ்வின் எண்பிப்பாகவுள்ள, கொடுப்பனவு உபாயத்தின் வழங்குனரிடமிருந்து அங்கீகார இலக்கங்களை விற்பனை அனுப்புப் பட்டியலில் எழுதுகின்ற அல்லது எழுதச் செய்கின்ற;

(ட) கொடுப்பனவு உபாயம், எந்த அனுப்பு பொருட் பட்டியல்கள், கார்பன் கடதாசி அல்லது வேறேதேனும் சாதனம் என்பனவற்றின் மீது எழுதப்பட்டுள்ளதோ, அச்சிடப்பட்டுள்ளதோ, புடைக்கச் செதுக்கப்பட்டுள்ளதோ அல்லது வேறுவகையாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதோ அந்த அனுப்பு பொருட்பட்டியல்கள், கார்பன் கடதாசி அல்லது வேறேதேனும் சாதனம் போன்ற ஏதேனும் பொருளை, கொடுப்பனவு உபாயத்தினை வைத்திருப்பவரிடமிருந்தான அல்லது வழங்குபவரிடமிருந்தான அதிகாரமின்றி அத்தகைய ஆளின் உடைமையில் வைத்திருக்கின்ற;

(ண) மோசடி செய்யும் உட்கருத்துடன், கொடுப்பனவு உபாயமொன்றின் பயன்பாட்டின்மூலம் பணத்தை அல்லது பண்டங்களைப் பெறுகின்ற ; அல்லது

(த) இப்பிரிவின் முற்போந்த பந்திகளிற் குறித்துரைக்கப்பட்ட செயல்களுள் எவற்றையும் புரிவதற்கு அல்லது அச்செயல்களுள் எவற்றிலும் ஈடுபடுவதனை, பிரதிபயனுக்காக அல்லது வேறு வகையாகத் தூண்டுகின்ற, ஆர்வப்படுத்துகின்ற அனுமதிக்கின்ற அல்லது ஏதேனும் முறையில் செய்யவிடுகின்ற,

எவரேனுமாள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(2) இச் சட்டத்தின் கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாகவுள்ள ஆளொருவர், மேல் நீதிமன்றத்தின் முன்னரான சுருக்க விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் -

(i) (அ),(ஆ),(இ),(ஈ),(உ),(எ),(ஏ),(ஐ),(ஒ) அல்லது (ண) என்னும் பந்தியின் கீழான தவறொன்றின் விடயத்தில், பத்தாண்டுகளை விஞ்சாத காலப்பகுதிக்கான மறியற்றண்டணைக்கு காலப்பகுதிக்கு அல்லது ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது அத்தகைய மறியற்றண்டன, குற்றப்பணம் ஆகிய இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்;

(ii) (ஓ) அல்லது (ட) என்னும் பந்தியின் கீழான தவறொன்றன் விடயத்தில், ஐந்தாண்டுகளை விஞ்சாத காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக் காலப்பகுதிக்கு அல்லது இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்;

(iii) (ஊ),(ஔ),(க),(ங),(ச) அல்லது (ஞ) என்னும் பந்தியின் கீழான தவறொன்றன் விடயத்தில், மூன்றாண்டுகளை விஞ்சாத காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கு அல்லது ஓர் இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது தவறாக அமைகின்ற செயலைப் புரிகின்றமையினால் பெறப்படும் பணப் பெறுமதியின் அல்லது தவறாக, அமைகின்ற செயலைப் புரிகின்றமையின் விளைவாக ஈட்டப்படும் நிதிசார் நன்மைப் பெறுமதியின் ஐந்து மடங்குகளுக்கு நீடிக்கக் கூடிய குற்றப்பணமொன்றுக்கு, இவற்றுள் எது கூடியதாகவுள்ளதோ அதற்கு, அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்;

(iv) ஸ்ரீ(த) என்னும் பந்தியின் கீழான தவறொன்றன் விடயத்தில், தவறாளா் எந்தத் தவறை இன்னுமோராள் புரிவதனைத் தூண்டுகின்றாரோ ஆர்வப்படுத்துகின்றாரோ அனுமதிக்கின்றாரோ அல்லது செய்யவிடுகின்றாரோ அந்தத் தவறுக்காக விதித்துரைக்கப்பட்ட தண்டனையின் ஒன்றரை மடங்குக்கு ஆளாதல் வேண்டும்.

4. இச் சட்டத்தின் கீழான தவறொன்றைப் புரிவதற்கு முயற்சிக்கின்ற அல்லது அத்தகையவொரு தவறு புரியப்படுவதனைச் செய்விக்கின்ற எவரேனுமாள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் அத்தகைய தவறுகளுள் ஒவ்வொன்றுக்கும் ஏற்பாடு செய்யப்பட்ட ஆகக்கூடிய குற்றப்பணத்தின் ஓரரைவாசியை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது அத்தகைய தவறுகளுள் ஒவ்வொன்றுக்கும் ஏற்பாடு செய்யப்பட்ட ஆகக்கூடிய குற்றப்பணத்தின் ஓரரைவாசியை விஞ்சாத காலப்பகுதிக்கு இருவரையிலொருவகை மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

5. (1) இச்சட்டத்தின் கீழான தவறொன்று புரியப்படுவதற்கு உடந்தையாக இருக்கும் ஏவரேனுமாள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் -

(அ) உடந்தையளிக்கப்பட்ட தவறு உடந்தையின் விளைவாகப் புரியப்படின், தவறுக்கு ஏற்பாடு செய்யப்பட்டவாறான அதே தண்டனைக்கு ஆளாதலும் வேண்டும்; அத்துடன்

(ஆ) தவறானது உடந்தையின் விளைவாகப் புரியப்படாவிடின், பின்வருவனவற்றுக்கு ஆளாதலும் வேண்டும் -

(i) ஆகக்கூடிய குற்றப்பணமொன்று அல்லது மறியற்றண்டனைக் காலப்பகுதியொன்று ஏற்பாடு செய்யப்படுமிடத்து, தவறுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட ஆகக் கூடிய குற்றப்பணமொன்று, அல்லது தவறுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட ஆகக் கூடிய காலப்பகுதியின் நான்கிலொன்றை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்; அத்துடன்

(ii) ஆகக் கூடிய குற்றப்பணம் அல்லது மறியற்றண்டனை ஏற்பாடு செய்யப்படாத விடயங்களில் இரண்டு இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஐந்தாண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) “உடந்தை” என்ற பதம் (19ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டகோவையின் 100ஆம் 101ஆம் பிரிவுகளிலுள்ளவாறன அதே பொருளையுடையதாதல் வேண்டுமென்பதுடன், தண்டனைச் சட்டகோவையின் 101அ, 103,104,105,106 மற்றும் 107 ஆகிய பிரிவுகளின் ஏற்பாடுகள் இச்சட்டத்தின் கீழான ஏதேனும் தவறுக்கான உடந்தை தொடர்பாக ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

6. (1) இச்சட்டத்தின் கீழான தவறொன்றைப் புரிவதற்குச் சதி செய்கின்ற எவரேனுமாள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், மேல் நீதிமன்றத்தின் முன்னரான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், அத்தவறு புரியப்படுவதற்கு உடந்தையளிப்பதற்காக விதித்துரைக்கப்பட்ட தண்டனையினால் தண்டிக்கப்படுதலும் வேண்டும்.

(2) “சதிசெய்தல்” என்ற பதம் (19ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டகோவையின் 113அ(2)ஆம் பிரிவில் உள்ளவாறான அதே பொருளை உடையதாதல் வேண்டும் என்பதுடன், அப் பிரிவின் ஏற்பாடுகள், இச்சட்டத்தின் கீழான ஏதேனும் தவறைப் புரிவதற்கான சதி தொடர்பாக ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

## பாகம் II

### புலனாய்வு

7. இச்சட்டத்தில் வேறுவகையாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தால் தவிர, இச் சட்டத்தின் கீழான எல்லாத் தவறுகளும் 1979ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கப் புலனாய்வு செய்யப்படுதல், விளங்கப்படுதல் அல்லது வேறுவகையாகக் கையாளப்படுதல் வேண்டும்.

8.(1) அமைச்சா், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம், இப்பிரிவின் கீழான தவறொன்று தொடர்பிலான எல்லாப் புலனாய்வுகளிலும் பொலிசாருக்கு உதவிபுரிவதற்கு, (இதனகத்துப் பின்னர் “நிபுணா்கள்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலத்திரனியற் பொறியியலில் அல்லது மென்பொருள் பொறியியலில் அல்லது அமைச்சரினால் அடையாளமிடப்பட்ட ஏதேனும் நிபுணத்துறையில் விதித்துரைக்கப்பட்ட தகைமைகளைக் கொண்டுள்ள ஆட்களிலிருந்து நிபுணா்கள் குழாமொன்றை நியமிக்கலாம்.

(2) நிபுணா்களாகச் சேவையாற்றுகின்ற ஆளிடமிருந்து ஆட்களிடமிருந்து தேவைப்படுத்தப்பட்ட தகைமைகளும் (இலத்திரனியற் பொறியியலிலான அல்லது மென்பொருள் பொறியியலிலான நிபுணத்துவத்தின் குறிப்பிட்ட துறைகளைக் கவனத்திற்கொண்டு) அத்தகைய நிபுணா்களின் நியமன முறையும் மாதிரியும், நியமன நிபந்தனைகளும், ஒழுங்கு விதிகளினால் விதித்துரைக்கப்பட்டவாறகவிருத்தல் வேண்டும்.

(3) ஐயத்தைத் தவிர்ப்பதற்காக, இச் சட்டத்தின் நோக்கங்களுக்காக "நிபுணர்" என்பது, எவரேனுமாளை, நிறுவனத்தை அல்லது ஏதேனும் ஆட்கள் குழுவை உள்ளடக்குவதாகக் கருதப்படுதல் வேண்டும் என இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது.

(4) இச்சட்டத்தின் கீழான புலனாய்வொன்றின் நோக்கத்துக்காக, ஒரு புலனாய்வில் பொலிசாருக்கு உதவும்படி கோரப்பட்ட நிபுணரொருவர்:-

(அ) உபபரிசோதகர் பதவி வரிசைக்குக் குறையாத பதவியிலுள்ள பொலிசு அலுவலரொருவருடன் எவையேனும் வளவுகளினுட் பிரவேசிப்பதற்கும்;

(ஆ) ஏதேனும் தகவல் முறைமையை, கணனியை அல்லது கணனி முறைமையை அல்லது அத்தகைய கணனியில் வைத்திருக்கப்படும் ஏதேனும் நிகழ்ச்சித் திட்டத்தை, தரவை அல்லது தகவலை அணுகுவதற்கும், மோசடியை அறிவிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட ஏதேனும் கணனியை அல்லது வேறேதேனும் உபாயத்தை, அத்தகைய நோக்கத்துக்காக அவசியமாகக் கூடியவாறான ஏதேனும் பணியைப் புரியும்படி செய்விப்பதற்கும்;

(இ) அத்தகைய புலனாய்வின் நோக்கத்துக்காக அவசியமானவாறான ஏதேனும் ஆவணத்தை, தகவலை, உபாயத்தை அல்லது வேறு பொருளைக் காண்பிக்கும்படி எவரேனுமாளைத் தேவைப்படுத்துவதற்கும்;

(ஈ) ஏதேனும் கடத்துகை தரவை வெளிக்காட்டும்படி எவரேனுமாளைத் தேவைப்படுத்துவதற்கும்;

(உ) எவரேனுமாளை வாய்மொழி மூலமாக விசாரணை செய்வதற்கும்; அத்துடன்

(ஊ) இச் சட்டத்தின் நோக்கங்களுக்காக நியாயமான முறையில் தேவைப்படுத்தப்படக் கூடியவாறான அத்தகைய வேறு காரியங்களைச் செய்வதற்கும்,

தத்துவமுடையவராதல் வேண்டும்.

(5) நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் கலந்தாலோசனையுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய ஊதியம் நிபுணரொருவருக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(6) இப் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட நிபுணரொருவர், இச் சட்டத்தின்கீழான தவறொன்றைப் புலனாய்வதில் எவரேனும் பொலிசு அலுவலருக்கு உதவிபுரியும்படி கோரப்படலாமென்பதுடன், அத்தகைய புலனாய்வின் நோக்கங்களுக்காகத் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய எல்லா உதவியையும் அளித்தல் அத்தகைய நிபுணரின் கடமையாதலும் வேண்டும். ஒரு புலனாய்வின் முடிவெடுப்புக்களின் விளைவாக எவையேனும் வழக்கு நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளவிடத்து, நிபுணரானவர், அத்தகைய புலனாய்வின்போது தம்மால் பெறப்பட்டிருக்கக்கூடிய ஏதேனும் தகவலை, தரவை, விடயத்தை அல்லது வேறு கருமத்தை அத்தகைய வழக்கு நடவடிக்கைகளின் நோக்கங்களுக்காகக் கிடைக்கக் கூடியதாக்குதலும் அத்தகைய வழக்கு நடவடிக்கைகளில் சான்றளிக்கும்படி கோரப்படுமிடத்து அவ்வாறு செய்தலும் அவரது கடமையாதல் வேண்டும்.

9.(1) ஏதேனும் தேடுகையை அல்லது சோதனையை நடாத்துகின்ற அல்லது புலனாய்வின்போது வேறேதேனும் காரியத்தைச் செய்கின்ற ஒவ்வொரு பொலிசு அலுவலரும் ஒவ்வொரு நிபுணரும், கொள்ளுநரொருவரின் விற்பனை வலையமைப்பு அல்லது எந்திரமூலம் செயல் இயக்கப்பட்ட பொறிமுறை வலையமைப்பு, எந்தச் சட்டமுறையான தொழிலின் சாதாரண நெறிக்காகப் பயன்படுத்தப்படுகின்றதோ அந்தச் சட்டமுறையான தொழிலின் சாதாரண நெறியானது அத்தகைய தேடுகையினால், சோதனையினால் அல்லது புலனாய்வினால் தடைசெய்யப்படாதிருப்பதனை உறுதிப்படுத்துவதற்கான எல்லா முயற்சிகளையும் எடுத்தல் வேண்டும் என்பதுடன் கொள்ளுநரின் விற்பனை வலையமைப்பை அல்லது எந்திர மூலம் செயல் இயக்கப்பட்ட பொறிமுறை வலையமைப்பை அல்லது அதன் பாகத்தைக் கைப்பற்றுதலானது, அத்தகைய வலையமைப்பு எந்தத் தொழிலின் சாதாரண நெறிக்காகப் பயன்படுத்தப்படுகின்றதோ அந்தத் தொழிலின் சாதாரண நெறியின் நடாத்துகையைப் பயன்படுத்துமாயின்-

(அ) அத்தகைய வலையமைப்பு அல்லது அதன் பாகம் அமைந்துள்ள வளவுகளில் சோதனையை நடாத்துவது இயலாததாகவிருந்தாலொழிய; அல்லது

(ஆ) அத்தகைய வலையமைப்பை அல்லது அப் பாகத்தைக் கைப்பற்றுதலானது, தவறு புரியப்படுவதனை அல்லது தவறு தொடர்ந்து புரியப்படுவதனைத் தடுப்பதற்கு அல்லது வேறுவகையில் இழக்கப்படும். அழிந்துபோகும், திரிபுபடுத்தப்படும் அல்லது கிடைக்கக்கூடியதல்லாததாக்கப்படும் ஏதேனும் தகவலின் கட்டுக்காப்பைப் பெறுவதற்கு அத்தியாவசியமாக விருந்தாலொழிய

அத்தகைய வலையமைப்பைக் கைப்பற்றுதலாகாது.

(2) சட்டத்தின் கீழான புலனாய்வொன்றை நடாத்துகின்ற பொலீசு அலுவலர் ஒருவர் அல்லது நிபுணர் ஒருவர் விடயத்தின் சூழ்நிலைகள் அனுமதிக்கின்றவாறு விரைவாக அத்தகைய புலனாய்வை நடாத்தி முடிவுறுத்தல் வேண்டும்.

10.(1) எவரேனும் பொலிசு அலுவலர், இச்சட்டத்தின் கீழான புலனாய்வொன்றின்போது, கைது செய்தல், தேடுகையிடுதல் அல்லது கைப்பற்றுதல் தத்துவங்களை, சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் பிரயோகிக்கலாம்:

ஆயின், இச்சட்டத்தின் கீழான தவறொன்றைப் புரிந்தவரெனச் சந்தேகிக்கப்படும் ஆளொருவரைப் பிடியாணையின்றிக் கைதுசெய்கின்ற பொலிசு அலுவலரொருவர், அவசியமற்ற தாமதமின்றியும் அத்தகைய கைது செய்ததிலிருந்து இருபத்திநான்கு மணித்தியாலங்களினுள்ளும், கைது செய்யப்பட்ட இடத்திலிருந்து நீதிவானின் முன்னிலைக்குச் செல்வதற்கான பிரயாணத்துக்காக எடுக்கப்படும் நேரம் புறநீங்கலாக, சந்தேகிக்கப்பட்டவர் எவ்விடத்தில் கைதுசெய்யப்படுகின்றாரோ அவ்விடத்துக்கு மிக்க அண்மையிலுள்ள நீதிமன்றத்தின் நீதிவான் முன்னர் அவரைக் கொண்டு வருதல்வேண்டும்.

(2) பொலிசு அலுவலரொருவர், இச்சட்டத்தின் கீழான புலனாய்வொன்றின் நோக்கத்துக்காக, அத்தகைய பொலிசு அலுவலர், தகவல், தொடர்பு, தொழினுட்பவியல் அல்லது இலத்திரனியல் அல்லது மென்கலப் பொறியியல் என்ற துறைகளில் போதிய அறிவும் தேர்ச்சியும் உடையவரென்றும், அத்தகையவொரு பணியைப் புரிவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட நிபுணத்துவத்தை உடையவரென்றும் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி எழுத்தில் அத்தாட்சிப்படுத்தினாலொழிய, ஏதேனும் கொடுப்பனவு உபாயத்தை கணனியை அல்லது கொள்ளுநரின் விற்பனை வலையமைப்பை அல்லது எந்திரமூலம் செயல் இயக்கப்பட்ட பொறிமுறை வலையமைப்பை அணுகுதலாகாது.

11.(1) இச்சட்டத்தின் கீழ் ஏதேனும் வெளியிடுகையைச் செய்யும்படி அல்லது புலனாய்வொன்றிற்கு உதவும்படி நிபுணர் ஒருவரால் அல்லது பொலீசு அலுவலர் ஒருவரால் தேவைப்படுத்தப்படுகின்ற எவரேனுமாள், அத்தகைய தேவைப்பாட்டுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

(2) நிபுணர் ஒருவருக்கு அல்லது பொலிசு அலுவலர் ஒருவருக்கு அளிக்கப்படும் தத்துவங்களின் சட்டமுறையான பிரயோகத்துக்கு முட்டுக்கட்டையிடுகின்ற அல்லது புலனாய்வொன்றின்போது அத்தகைய நிபுணரினால் அல்லது பொலிசு அலுவலரினால் விடுக்கப்படும் நியாயமான வேண்டுகோளுக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற ஆளொருவர், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஓராண்டுக்குக் குறையாததும் இரண்டாண்டுகளை விஞ்சாததுமானவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு, அல்லது அத்தகைய குற்றப்பணம் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

12.(1) இச்சட்டத்தின் கீழான புலனாய்வொன்றில் ஈடுபட்டுள்ள ஆள் ஒவ்வொருவரும், அத்தகைய புலனாய்வின்போது அவரது அறிவுக்கெட்டக்கூடியவாறான எல்லாத் தகவல் தொடர்பாகவும் கண்டிப்பான அந்தரங்கத் தன்மையைப் பேணுதல் வேண்டுமென்பதுடன், இச்சட்டத்தின் கீழ் அவரது கடமைகளை நிறைவேற்றுகையில் அல்லாது, அவ்வாறு பெறப்பட்ட ஏதேனும் தகவலை எவரேனுமாளுக்கு வெளிவிடுதலாகாது அல்லது எத்தகையதுமான ஏதேனும் நோக்கத்துக்காகப் பயன்படுத்துதலுமாகாது.

(2) எவ்வாளிடமிருந்து ஏதேனும் தகவல் வேண்டப்பட்டுள்ளதோ அல்லது பெறப்பட்டுள்ளதோ அவ்வாள் ஒவ்வொருவரும் அத்துடன் ஏதேனும் தகவலைப் பேணிக்காப்பதற்காக எவ்வாளுக்கு எழுத்திலான அறிவித்தலொன்று வழங்கப்பட்டுள்ளதோ அந்த எவரேனுமாளும், அத்தகைய தகவல் தொடர்பாகவும், அத்தகைய தகவல் வேண்டப்பட்டுள்ளது, பெறப்பட்டுள்ளது அல்லது பேணிக்காக்கப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்டுள்ளது என்ற நிகழ்வு தொடர்பாகவும் கண்டிப்பான அந்தரங்கத் தன்மையைப் பேணுதல் வேண்டுமென்பதுடன், சட்டமுறையான அதிகாரமின்றி அத்தகைய கருமங்கள் தொடர்பாக வெளிவிடுகை எதனையும் செய்தலுமாகாது.

(3) இப்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆளொருவர், இச்சட்டத்தின் கீழான புலனாய்வொன்றின் நோக்கங்களுக்காக ஏதேனும் தரவை அல்லது வேறு தகவலை வெளிவிடுவதற்காகக் குடியியல் அல்லது குற்றவியற் சட்டத்தின் கீழ் ஆளாகின்றவராகக் கொள்ளப்படுதலாகாது.

(4) ஓராம், (2) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனுமாள், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் மூன்று இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது இரண்டாண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

13. இச்சட்டத்தின் கீழான தவறொன்றுக்கான ஏதேனும் விளக்கத்தின்போது, குற்றஞ்சாட்டப்பட்டவரினால் உண்மையில் புரியப்பட்ட தவறானது, அவர் எந்தத் தவறுக்குக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளாரோ அந்தத் தவறுக்கு வித்தியாசமாகவுள்ளதென, அல்லது அவர் எந்தத் தவறுக்குக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளாரோ அந்தத் தவறைப் பார்க்கிலும் அது குறைந்ததான தவறொன்றாகவுள்ளதென முன்வைக்கப்பட்ட சான்றின் மூலம் தோன்றுமிடத்து, அப்போது, நீதிமன்றம், அதன் தற்றுணிபின்படி, குற்றப்பத்திரத்தை மாற்றலாமென்பதுடன், அத்தகைய மாற்றம் செய்யப்பட்ட பின்னர், மாற்றப்பட்ட குற்றப்பத்திரம் மூலம் குற்றப் பத்திரமாக இருந்தது என்றாற்போன்று விளக்கத்தை மேற்கொண்டும் நடாத்தலாம்.

14. இச் சட்டத்தின் கீழான தவறொன்று ஆட்கள் குழுவொன்றினால் புரியப்படுமிடத்து, அப்போது -

(அ) அவ்வாட்கள் குழு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாகவிருப்பின், அவ்வாட்கள் குழுவின் ஒவ்வொரு பணிப்பாளரும் அலுவலரும்; அல்லது

(ஆ) அவ்வாட்கள் குழு குழுமமொன்றாகவிருப்பின், அக்குழுமத்தின் ஒவ்வொரு பங்காளியும்,

அத்தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதல் வேண்டும்.

ஆயின் அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிப்பாளர் அல்லது அலுவலர் ஒருவர் அல்லது அத்தகைய குழுமத்தின் பங்காளி ஒருவர், அத்தகைய தவறு அவர் அல்லது அவள் அறியாமல் புரியப்பட்டதென அல்லது அத்தகைய தவறு புரியப்படுவதனைத் தடுப்பதற்கு

அவசியமானவாறான அத்தகைய எல்லா விழிப்புக் கவனத்தையும் அவர் அல்லது அவள் பிரயோகித்தாரென அத்தகைய பணிப்பாளர், அலுவலர் அல்லது பங்காளி எண்பித்தால், அத்தகைய தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதலாகாது.

15. இச்சட்டத்தின் 3ஆம் பிரிவின் கீழான தவறொன்றுக்காக நீதிமன்றமொன்றினால் குற்றப்பணமொன்று விதிக்கப்படுமிடத்து, அத்தகைய நீதிமன்றம் -

(அ) அறவிடப்படும் குற்றப்பணம் முழுவதும் அல்லது அதன் ஏதேனும் பாகம், கொடுப்பனவு உபாயத்தின் வழங்குனருக்கு, அல்லது அதன் மூலம் நட்டத்தை உற்றுள்ள வேறெவரேனும் ஆளுக்கு, அத்தகைய நட்டத்துக்கான நட்டஈடாகச் செலுத்தப்படும்படியும்; அத்துடன்

(ஆ) நீதிமன்றம் வேறுவகையாகப் பணித்தாலொழிய, புலனாய்வின்போது பொலிசாரினால் கைப்பற்றப்படும் எல்லாப் பணங்களும், பொருட்களும் அல்லது ஆதனங்களும், சட்டமுறையான சொந்தக்காரர் என்ற வகையாகக் கொடுப்பனவு உபாயத்தின் வழங்குநருக்கு அல்லது அத்தகைய பணங்களுக்கு, பொருட்களுக்கு அல்லது ஆதனங்களுக்குத் தனது சட்டமுறையான உரிமையை நிலைநாட்டுகின்ற ஆளுக்குத் திருப்பிக் கொடுக்கப்படுதல் வேண்டுமென்றும்,

பணிக்கலாம்.

16.(1) இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே அமைந்துள்ளதும், எழுத்திலான வடிவத்திலிருப்பினுஞ்சரி அல்லது முறைமையொன்றில் அல்லது கணனியில் அல்லது கொடுப்பனவு உபாயத்தில், இலத்திரனியல், காந்த, கட்புல அல்லது வெறெவையேனும் வழிவகைகள் மூலம் களஞ்சியப்படுத்தப்படினுஞ்சரி, ஒரு வழங்குநரின் அல்லது கொள்ளுநரின் சாதாரண தொழில்நெறியில் அத்தகைய வழங்குநரினால் அல்லது கொள்ளுநரினால் வைத்திருக்கப்படுவதும் ஆன ஒரு கொடுப்பனவு உபாயம் தொடர்பான ஏதேனும் பதிவின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்று, இச்சட்டத்தின் 3ஆம் பிரிவின் கீழான தவறொன்று தொடர்பில் ஒரு குற்ற வழக்குத் தொடுப்புத் தொடர்பாகச் சான்றில் ஏல்தகவுடையதாதல் வேண்டுமென்பதுடன், அதன் கண் கூறப்பட்ட நிகழ்வுகள் பற்றிய முதற்றோற்றச் சான்றாதலும் வேண்டும்.

(2) ஒவ்வோர் ஆவணமும், சான்றிதழும், பதிவேடும், இடாப்பும் அல்லது அதன் பொழிப்பும், ஒன்றில் இலங்கையில் அல்லது வெளிநாட்டில் நிபுணரொருவரினால் உரியமுறையில் கையொப்பமிடப்பட்டு வழங்கப்படின், அத்துடன் அத்தகைய ஆவணம், சான்றிதழ், பதிவேடு அல்லது இடாப்பு அல்லது அதன் பொழிப்பு, எந்த வழங்குநரின் அல்லது கொள்ளுநரின் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பானதோ அல்லது அக்கறைகள் தொடர்பானதோ அந்த வழங்குநரின், அல்லது கொள்ளுநரின் சிரேட்ட நிறைவேற்றலுவரினால் உரியமுறையில் மெய்யென்று உறுதிப்படுத்தப்படின், அதன்கண் கூறப்பட்ட நிகழ்வுகளின் முதற்றோற்ற எண்பிப்பாதல் வேண்டும்.

(3) ஓராம் உப்பிரிவில் "ஓர் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி" என்பது, பதிவின் பிரதியை உண்மைப் பிரதியென அத்தாட்சிப்படுத்தி வழங்குனரின் அல்லது கொள்ளுநரின் பிரதான நிறைவேற்றலுவலரினால் அல்லது அதன் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளுள் எவரினாலும் அப்பிரதியின் அடியில் எழுதப்பட்ட சான்றிதலொன்றுடன் பதிவின் பிரதியொன்றெனவும், அத்துடன் அத்தகையவொரு பதிவு தகவல் முறைமையொன்றில் அல்லது கணனியில் களஞ்சியப்படுத்தப்படுமிடத்து, இயைபான தகவல் முறைமையின் அல்லது கணனியின் தொழிற்பாடு தொடர்பாகப் பொறுப்புள்ள பதவியொன்றை வகிக்கின்ற அலுவரொருவரினால் உண்மைப் பிரதியென அத்தாட்சிப்படுத்தப்படும் அத்தகைய பதிவின் பிரதியொன்றெனவும் பொருளாகும்.

(4) சான்றுக் கட்டளைச் சட்டத்தில் அல்லது வேறேதேனும் சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், இப்பிரிவின் ஏற்பாடுகள் பனுடையனவாதல் வேண்டுமென்பதுடன், 3ஆம் பிரிவின் கீழான தவறுகளுக்கான குற்றவழக்குத் தொடுப்புக்கு ஏற்புடையனவாதலும் வேண்டும்.

17. (அ) போலிபுனையப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்படாத கொடுப்பனவு உபாயத்தை;

(ஆ) சட்டமுறையான அதிகாரமின்றி அட்டை தயாரிக்கின்ற அல்லது மாற்றுகின்ற ஏதேனும் சாதனத்தை;

(இ) ஒரு கொடுப்பனவு உபாயத்தை வைத்திருப்பவரின் அல்லது வழங்குபவரின் அதிகாரமின்றி அக் கொடுப்பனவு உபாயத்தை;

(ஈ) சட்டமுறையான அதிகாரமின்றி ஒரு கொடுப்பனவு உபாயத்தை ஏற்றுக்கொள்வதற்காக அல்லது செய்முறைப் படுத்துவதற்காகப் பயன்படுத்தப்படும் ஏதேனும் சாதனத்தை,

தனதுடைமையில், கட்டுப்பாட்டில் அல்லது கட்டுக்காப்பில் வைத்திருக்கின்ற எவரேனுமாள், முரணாக எண்பிக்கப்படும்வரை, அத்தகைய கொடுப்பனவு உபாயத்தை அல்லது சாதனத்தை இச்சட்டத்தின் கீழான தவறொன்றைப் புரிகின்ற நோக்கத்துக்காகத் தனதுடைமையில், கட்டுக்காப்பில் அல்லது கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றாரென ஊகிக்கப்படுதல் வேண்டும்.

18. (அ) ஒரு கொடுப்பனவு உபாயத்தின் வழங்குநரொருவருக்கு வருமதியான மொத்தத் தொகையை, வழக்குநரினால் அதற்கென அனுமதிக்கப்பட்ட காலப்பகுதியினுள் செலுத்தத் தவறியுள்ளவரும்; அத்துடன்

(ஆ) அத்தகைய கொடுப்பனவு உபாயத்துக்கான விண்ணப்பத்திற் கூறப்பட்டவாறான அவரது வதிவிடத்தை அல்லது தொழிலிடத்தை , அத்தகைய மாற்றம் பற்றி வழங்குநருக்கு அறிவிக்காமல் மாற்றுகின்றவருமான,

அத்தகைய கடன் அட்டையை அல்லது வேறு கொடுப்பனவு உபாயத்தை வைத்திருப்பர், அத்தகைய தொகையை வழங்குனரிடமிருந்து வேண்டுமென்று மோசடி செய்யும் உட்கருத்துடன் அவ்வாறு செய்தாரென ஊகிக்கப்படுதல் வேண்டும்.

19. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தெட்டாம் ஆண்டின் 2ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், இச்சட்டத்தின் கீழான ஒவ்வொரு தவறும், அரசியலமைப்பின் 154 ஞ என்னும் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட, கொழும்பில் நடாத்தப்படும் மேல்மாகாணத்துக்கான மேல் நீதிமன்றத்தினால் விளங்கப்படற்பாலதாதல் வேண்டும்.

20. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின் 15ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், இச் சட்டத்தின் கீழான தவறு ஒவ்வொன்றும், அச் சட்டகோவையின் கருத்துக்குட்படவும் அதன் நோக்கங்களுக்காகவும் பிடியாணையின்றிக் கைது செய்தகு தவறொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

21. இச் சட்டத்தின் கீழ் நிபுணர் ஒருவரால் அல்லது பொலிசு அலுவலர் ஒருவரால் செய்யப்படும் அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும் ஏதேனும் செயல் தொடர்பில் அவருக்கு அல்லது அவளுக்கு எதிராக நீதிமன்றமொன்றில் கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்குத் தொடுப்பில் அத்தகைய நிபுணரினால் அல்லது பொலிசு அலுவலரினால் உறப்படும் எவையேனும் செலவுகள், அச் செயலானது நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் தீர்ப்பிட்டால், அத்தவறு புரியப்பட்டதெனச் சார்த்துகின்ற விடயத்துக்கேற்ப, வழங்குநரின் அல்லது கொள்ளுநரின் நிதிகளிலிருந்து, அத்தகைய செலவு அத்தகைய துடர்ச்சியில் அல்லது குற்றவழக்குத் தொடுப்பில் அவரினால் அறவிடப்பட்டாலொழிய, செலுத்தப்படுதல் வேண்டும்.

22. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தேழாம் ஆண்டின் 8ஆம் இலக்க, மீளவொப்படைத்தற் சட்டத்துக்கான அதன் பாகம் - ஆ வுக்கு நேர்முன்னர் பின்வருவதனை உட்புகுத்துவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

"(48) 2006ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க, கொடுப்பனவு உபாயங்களின் மோசடிகள் சட்டத்தின் கருத்துக்குட்பட்ட ஒரு தவறு"

23. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தேழாம் ஆண்டின் 8ஆம் இலக்க, மீளவொப்படைத்தற் சட்டத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், இச் சட்டத்தின் நியதிகளின் கீழான தவறொன்று, அச்சட்டத்தின் கீழான மீளவொப்படைத்தல் நோக்கத்துக்காக மட்டும், நிதிசார் தவறொன்றுக்காக அல்லது அரசியற்றன்மைத்தான தவறொன்றாக, அல்லது அரசியற்றவறொன்றுடன் சம்பந்தப்பட்ட தவறொன்றாக, அல்லது அரசியல் நோக்கங்களினால் உந்தப்பட்ட தவறொன்றாக, இராதிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

24. இச்சட்டத்தின் கீழான தவறொன்றுக்குக் குற்றஞ்சாட்டப்பட்ட அல்லது குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட எவரேனுமாளை மீளவொப்படைப்பதற்காக இன்னுமொரு நாட்டின் அரசாங்கத்தினால் அல்லது அதன் சார்பில் இலங்கை அரசாங்கத்துக்கு வேண்டுகோளொன்று விடுக்கப்படுமிடத்து அமைச்சர் இலங்கை அரசாங்கத்தின் சார்பில் அத்தவறுக்காக அவ்வாளுக்கெதிராக குற்ற வழக்குத்தொடுப்பதற்காக அல்லது அவ்வாளை ஒப்படைப்பதற்காக இலங்கை அரசாங்கம் எடுத்துள்ள, அல்லது எடுப்பதற்கு உத்தேசிக்கின்ற வழிமுறைகள் பற்றி வேண்டுகோள் விடுக்கும் அரசின் அரசாங்கத்துக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

25. (1) இரண்டாயிரத்து இரண்டமாண்டின் 25ஆம் இலக்க, குற்றவியற் கருமங்களிலான பரஸ்பர உதவிச் சட்டத்தின் ஏற்பாடுகள், இச் சட்டத்தின் 3ஆம் பிரிவின் கீழான தவறொன்றைப் புலனாய்வு செய்து குற்ற வழக்குத் தொடுப்பதற்கு அவசியமானவிடத்தெல்லாம், இலங்கை அரசாங்கத்துக்கும், ஒன்றில் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 2ஆம் பிரிவின் கீழான கட்டளைமூலம் அமைச்சரினால் குறித்துரைக்கப்பட்ட பொதுநலவரசு நாடுகளாகவுள்ள, அல்லது இலங்கை அரசாங்கம் மேற்கூறப்பட்ட சட்டத்தின் நியதிகளின்படி, பொதுநலவரசு நாடுகளல்லாத எந்த நாடுகளுடன் உடன்படிக்கையொன்றைச் செய்து கொண்டுள்ளதோ பொதுநலவரசு நாடுகளல்லாத அந்த நாடுகளாகவுள்ள ஏனைய அரசுகளுக்கும் இடையே உதவி வழங்குவது தொடர்பில் ஏற்புடையதற்பாலதாதல் வேண்டும்.

(2) மேற்கூறப்பட்ட சட்டத்தின் 2ஆம் பிரிவின் கீழான கட்டளை மூலம் அமைச்சரினால் குறித்துரைக்கப்பட்ட பொதுநலவரசு நாடொன்றாகவோ அல்லது மேற்கூறப்பட்ட சட்டத்தின் நியதிகளின்படி இலங்கை அரசாங்கம் உடன்படிக்கையொன்றை செய்து கொண்ட பொதுநலவரசு நாடொன்றாகவோ இராத நாடொன்றின் விடயத்தில், அரசாங்கத்தின் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்குத் தேவைப்பட்ட அளவுக்கு (சான்றையும் கூற்றுக்களையும் எடுத்தல், மன்றாணை முதலியவற்றைச் சேர்ப்பித்தல், தேடுகைகளை நடாத்துதல் என்பன தொடர்பான உதவியுட்பட) 3ஆம் பிரிவின் கீழான தவறொன்றைப் புலனாய்வு செய்து குற்ற வழக்குத் தொடுப்பதற்கு அத்தகைய எல்லா உதவிகளையும் அளிப்பது அரசாங்கத்தின் கடமையாதல் வேண்டுமென்பதுடன், 3ஆம் பிரிவின் கீழான அத்தவறைப் புலனாய்வு செய்து குற்ற வழக்குத் தொடுப்பதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய எல்லா உதவிகளுக்காகவும் அமைச்சரின் மூலம் வேண்டுகோளையும் விடுக்கலாம்.

(3) நாடொன்றுக்கு உதவி வழங்குதலானது, அமைச்சர் தகுதியானவையென எண்ணுகின்றவறான அத்தகைய நியதி நிபந்தனைகளுக்கு அமைய வழங்கப்படலாம்.

26.(1) இலங்கைப் பிரசையல்லாத ஆளொருவர் இச் சட்டத்தின் கீழான தவறொன்றுக்காகக் கைது செய்யப்படுமிடத்து, அத்தகைய ஆள் -

(அ) அவர் எந்த அரசின் நாட்டவராக உள்ளாரோ அந்த அரசின் அல்லது அவரது உரிமைகளைப் பாதுகாப்பதற்கு வேறுவகையில் உரித்துடையதாகவுள்ள அரசின் மிக்க அண்மையிலுள்ள தோதான பிரதிநிதியுடன் அல்லது அவர் நாடற்ற ஆளொருவராகவிருப்பின், அவர் வழக்கமாக வதிபவராகவிருந்த ஆள்புலத்திலுள்ள அரசின்மிக்க அண்மையிலுள்ள தோதான பிரதிநிதிகளுடன் தாமதமின்றித் தொடர்பு கொள்வதற்கும் ; அத்துடன்

(ஆ) அவ்வரசின் பிரதிநிதியொருவர் அவரைச் சென்று பார்ப்பதற்கும் ,

உரித்துடையவராதல் வேண்டும்.

(2) இருபத்தைந்தாம் பிரிவின்கீழான வேண்டுகோளொன்று, 24ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதற்கான எதேனும் தவறுதல் காரணமாக எவையேனும் சட்ட வழக்கு நடவடிக்கைகளின் நோக்கங்களுக்காக செல்லுபடியற்றதாக்கப்பட்டதாகக் கருதப்படுதலாகாது; ஆயின், அவ்வேண்டுகோளைத் தகுந்த முறையில் அது நிறைவேற்றுவதனை இயலச் செய்வதற்கு அவ்வேற்பாடுகளுக்குப் போதிய இணங்கியொழுகுகை இருத்தல் வேண்டும்.

27.(1) இச்சட்டத்தின் கீழான தவறொன்றுக்காக ஆளொருவர் கைதுசெய்யப்படுமிடத்து, இச் சட்டத்தின் நிருவாகம் எவ்வமைச்சருக்குக் குறித்தளிக்கப்படுகின்றதோ அவ்வமைச்சர், அவ்வாளுக்கெதிராகக் குற்றவழக்குத் தொடுப்பதற்காக அல்லது அவ்வாளை மீளவொப்படைப்பதற்காக இலங்கை அரசாங்கம் எடுத்துள்ள அல்லது எடுப்பதற்கு உத்தேசிக்கின்ற வழிமுறைகள் பற்றி அத்தகைய ஆள் தொடர்பில் 24ஆம் மற்றும் 25ஆம் பிரிவுகளின்கீழ் வேண்டுகோளொன்றை விடுத்துள்ள வேறேதேனும் அரசிலுள்ள தோதான அதிகாரிகளுக்கு அறிவிக்கும்படி வெளிநாட்டலுவல்கள் என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சருக்கு அறிவித்தல் வேண்டும்.

(2) இச் சட்டத்தின் கீழான தவறொன்றுக்கு நேரொத்ததாகவுள்ள தவறொன்றுக்குக் குற்றஞ்சாட்டப்பட்ட அல்லது குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட எவரேனுமாளை மீளவொப்படைப்பதற்காக, ஏதேனும் அரசின் அரசாங்கத்தினால் அல்லது அதன் சார்பில் இலங்கை அரசாங்கத்துக்கு வேண்டுகோளொன்று விடுக்கப்படுமிடத்து, வெளிநாட்டலுவல்கள் என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர், இலங்கை அரசாங்கத்தின் சார்பில், அவ்வாளுக்கெதிராகக் குற்றவழக்குத் தொடுப்பதற்காக அல்லது அவ்வாளை மீளவொப்படைப்பதற்காக இலங்கை அரசாங்கம் எடுத்துள்ள, அல்லது எடுப்பதற்கு உத்தேசிக்கின்ற வழிமுறைகள் பற்றி வேண்டுகோள் விடுக்கின்ற அரசின் அரசாங்கத்துக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் கீழான தவறொன்றுக்கு நேரொத்ததாகவுள்ள தவறொன்றுக்குக் குற்றஞ்சாட்டப்பட்ட அல்லது குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட எவரேனுமாளை ஏதேனும் அரசின் அரசாங்கத்தினால் அச்சட்டத்தின் கீழ் அவரது மீளவொப்படைப்புக்காக விடுக்கப்பட்ட வேண்டுகோளொன்றைப் பின்பற்றி மீளவொப்படைத்தற் சட்டத்தின் கீழ் கட்டளையெதுவும் ஆக்கப்படலாகாதென முடிவுசெய்யப்படுமிடத்து, இலங்கை அரசாங்கத்தின் சட்டத்தின்கீழ் அத் தவறுக்கான குற்ற வழக்குத் தொடுப்பு, அல்லது வேறேதேனும் தோதான நடவடிக்கை கவனத்துட் கொள்ளப்படக் கூடியவகையில், அவ்விடயமானது சட்டவலுவுக்கிடும் அதிகாரிகளுக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

28. இலங்கை அரசாங்கத்துக்கும் வேறேதேனும் அரசின் அரசாங்கத்துக்கும் இடையே மீளவொப்படைப்பு ஒழுங்கேற்பாடொன்று வலுவிலுள்ளவிடத்து, அத்தகைய ஒழுங்கேற்பாடு 1977ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க, மீளவொப்படைத்தற் சட்டத்தின் நோக்கங்களுக்காக, இச்சட்டத்தின் கீழான தவறொன்று தொடர்பிலும், அத்தகைய தவறைப் புரிவதற்கு முயற்சித்தல் அல்லது சதிசெய்தல் மற்றும் அத்தகைய தவறு புரியப்படுவதற்கு உதவுதலும் உடந்தையாகவிருத்தலும் தொடர்பிலும், மீளவொப்படைப்பதற்கான ஏற்பாட்டை உள்ளடக்குவதாகக் கருதப்படுதல் வேண்டும்.

29. இச் சட்டத்தின்கீழான தவறொன்றுக்கு நேரொத்ததாகவுள்ள ஏதேனும் வெளிநாட்டரசின் சட்டத்தின் கீழான தவறொன்று தொடர்பில், எவரேனுமாளுக்கெதிராக அவ்வரசில் தொடுக்கப்பட்ட குற்றவியல் வழக்கு நடவடிக்கைகள் சம்பந்தமாக அவசியமாகக் கூடியவாறான அவ்வரசின் இயைபான அதிகாரிகளுக்கு (அதன் கையாளுகையிலுள்ள ஏதேனும் இயைபான சான்றை வழங்குதலுட்பட) அரசாங்கம் அத்தகைய உதவியை அளித்தல் வேண்டும்.

30.(1) இச்சட்டத்தின் நெறிகளையும் ஏற்பாடுகளையும் நிறைவேற்றும் அல்லது அவற்றுக்குப் பயன்கொடுக்கும் நோக்கத்துக்காகவும், விதித்துரைக்கப்பட வேண்டுமென இச் சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட கருமங்கள் தொடர்பிலும் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) அமைச்சரினால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும், வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அத்தகைய ஒழுங்குவிதியிற் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) அமைச்சரினால் ஆக்கப்படும் ஒவ்வோர் ஒழுங்கு விதியும், அது வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின்னர் வசதியானளவு விரைவாக, அங்கீகாரத்துக்காகப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி, அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) ஒழுங்கு விதியொன்று எத்தேதியன்று ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுகின்றதோ அத்தேதி பற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

31. இச் சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

32. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய -

"கொள்ளுநர்" என்பது, கொடுப்பனவு உபாயக் கொடுக்கல் வாங்கல்களை ஏற்றுக் கொள்வதற்கு வணிகர்களை நியமிப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்டதும், அல்லது கொடுப்பனவு உபாயம் வைத்திருப்போருக்குக் காசு செலவிடுதற் சேவைகளை அல்லது அத்தகைய இரு பணிகளையும் முனைகின்றதும் வணிகர்களினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொடுப்பனவு உபாயங்கள்

கணக்குத் தீர்த்துக் கொடுத்துத் தீர்க்கப்பட்டு, வரும்படிகள் கொள்ளுநரினால் அதற்கு மீளளிக்கப்படுவதுமான வங்கி அல்லது நிதி நிறுவனம் என்று பொருளாகும்;

"அதிகாரவளிப்பு" என்பது, கொள்ளுநரொருவர் ஒரு கொடுப்பனவு உபாயக் கொடுக்கல் வாங்கல்கலுக்காக வழங்குநரிடமிருந்து அங்கீகாரமொன்றை எந்தச் செய்முறை மூலம் பெறுகின்றாரோ அந்தச் செய்முறை என்று பொருளாகும். அதிகாரவளிப்புச் செய்முறை ஒன்றில் குரல் ஒப்புக்கொள்ளுதல் மூலமாக அல்லது இலத்திரனியல் வழிவகைகள் மூலமாக இருக்கமுடியும்;

"அட்டை வைத்திருப்பவர்" என்பது, கொடுப்பனவு உபாயமொன்றின் முகப்பில் பெயர் குறிப்பிடப்பட்ட எந்த ஆளுக்கு அல்லது ஒழுங்கமைப்புக்கு அல்லது எந்த ஆளின் அல்லது ஒழுங்கமைப்பின் நன்மைக்காக வழங்குநரொருவரினால் கொடுப்பனவு உபாயம் வழங்கப்படுகின்றதோ அந்த ஆள் அல்லது ஒழுங்கமைப்பு என்று பொருளாகும்;

"போலி புனையப்பட்ட கொடுப்பனவு உபாயம்" என்பது, ஒரு போலிபுனையப்பட்ட, பொய்யான, மாற்றப்பட்ட அல்லது கள்ளமாக எழுதப்பட்ட கொடுப்பனவு உபாயம் அல்லது அத்தகைய உபாயத்தின் அடையாளங் காணத்தகு ஆக்கக்கூறு போலி புனையப்பட்டதாகவுள்ள ஒரு கொடுப்பனவு உபாயம் என்று பொருளாகும்;

"அட்டை தயாரிக்கின்ற அல்லது மாற்றுகின்ற சாதனம்" என்பது கையினால் இயக்கப்பட்டதாயினுஞ்சரி, அல்லது இலத்திரனியல் காந்தமுறையாயினுஞ்சரி, அல்லது இலத்திரனியல் முறையானதாயினுஞ்சரி, ஏதேனும் கொடுப்பனவு உபாயத்தின் மீது புடைக்கச் செதுக்கப்படுவதற்காக, மறைபொருள் குறிப்பிலக்கமிடப்படுவதற்காக, பதிவதற்காக அல்லது தரவைக் களஞ்சியப்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்படுவதும், அத்துடன் போலிபுனையப்பட்ட கொடுப்பனவு உபாயங்களைத் தயாரிப்பதற்காகவும் பயன்படுத்தப்படக் கூடியதுமான சாதனத்தின் அல்லது எந்திரத் தொகுதியின் ஒரு பாகம் அல்லது அதன் முழுமையும் என்று பொருளாகும்;

"கணனி" என்பது தகவல் செய்முறைப்படுத்தல் ஆற்றல்களையுடையோர் இலத்திரனியல் அல்லது இதையொத்த உபாயம் என்று பொருளாகும்;

"தரவு" என்பது, ஒரு கணனியில் அல்லது ஒரு கொடுப்பனவு உபாயத்தில் பயன்படுத்தப்படுவதற்குப் பொருத்தமானவொரு வடிவத்தில் தயாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற அல்லது தயாரிக்கப்பட்டுள்ள அல்லது ஒரு கணனியினால் களஞ்சியப்படுத்தப்படுகின்ற அல்லது தோற்றுவிக்கப்படுகின்ற தகவல் பற்றிய அல்லது கருத்துக்கள் பற்றிய ஒரு பிரதிநிதித்துவம் என்று பொருளாகும்;

"மோசடியான விண்ணப்பம்" என்பது, எவையேனும் பொய்யாக ஆக்கப்பட்ட ஆவணங்களை, பொய்யான தகவலை, புனையப்பட்ட ஆளடையாளத்தையும் முகவரியையும் அல்லது வேறெவையேனும் பொய்யான பாசாங்குகளை அல்லது பிறழ் பிரதிநிதித்துவங்களைக் கொண்டுள்ளதும், கொடுப்பனவு உபாயமொன்றை வழங்குவதற்கு வழங்குநரை தூண்டுகின்றதுமான கொடுப்பனவு உபாயமொன்றைப் பெறுவதற்குச் செய்யப்பட்டவொரு விண்ணப்பம் என்று பொருளாகும்;

"மோசடியான வணிக விண்ணப்பம்" என்பது, கொடுப்பனவு உபாயத்தை வணிகர் ஏற்றுக் கொள்வாரெனக் கொள்ளுநரை நம்பச் செய்யும் வகையில் அவரைப் பிழைவழியுய்ப்பதற்கென, பொய்யான, பிழையான அல்லது பிழைவழியுய்க்கின்ற தகவலைப்பயன்படுத்த, வணிகரொருவராகப் பாசாங்குசெய்கின்ற ஓர் ஆளினால், ஆட்கள் குழுவினால், உருவாக்கத்தினால் அல்லது ஒழுங்கமைப்பினால் செய்யப்படுகின்றவொரு விண்ணப்பம் என்று பொருளாகும்;

"முழுமார்க்கத்தரவு" என்பது ஒரு கொடுப்பனவு உபாயத்தின் காந்த கோட்டின்மீது மார்க்கம் ஒன்று அல்லது இரண்டில் மறைபொருள் குறிப்பிலக்கமிடப்பட்ட தற்றுணிபுசார் தரவுட்பட்ட தரவு என்று பொருளாகும்;

"வைத்திருப்பவர்" என்பது, வழங்குனரொருவருக்கு வழங்கப்படும் விண்ணப்பமொன்றின்மேல் கொடுப்பனவு உபாயமொன்று எவ்வாளுக்கு வழங்கப்படுகின்றதோ அவ்வாள் என்று பொருளாகும்;

"தகவல்" என்பது தரவு, உரை, பிம்பங்கள், ஒலி, குறியீடுகள், கணனி நிகழ்ச்சிகள் தரவுத்தளங்கள் அல்லது நுண்படத்தகடு என்பவற்றை உள்ளடக்கும்;

"தகவல் முறைமை" என்பது குரலை அல்லது தரவை அல்லது இரண்டையும் சேகரிப்பதற்கு, செய்முறைப்படுத்துவதற்கு, களஞ்சியப்படுத்துவதற்கு, திறமையாக நடாத்துவதற்கு, முகாமை செய்வதற்கு, கடத்துவதற்கு வெளிக்காட்டுவதற்கு, பரப்புவதற்கு, மாற்றுவதற்கு, இடமாற்றுவதற்கு அல்லது பெறுவதற்குப் பயன்படுத்தப்படுகின்ற ஆட்களை எந்திரங்களை மற்றும் முறைகைளைக் கொண்டுள்ள (தொலைத் தொடர்புகள், கணனி அல்லது கணனி தொடர்பான அல்லது இடைத் தொடர்புச் சாதன முறைமை அல்லது உபமுறைமைகள் அல்லது அத்தகைய இரு முறைமைகள் அல்லது முறைமைகள் உட்பட்ட) எந்திரமூலம் செயல் இயக்கப்பட்டதாயினுஞ்சரி அல்லது கையினால் இயக்கப்பட்டதாயினுஞ்சரி முறைமையொன்றை உள்ளடக்குமென்பதுடன், மென்கலத்தையும், நிலை பொருளையும் வன்கலத்தையும் உள்ளடக்கும்;

"வழங்குநர்" என்பது, கொடுப்பனவு உபாயமொன்றை வழங்குவதற்குச் சட்டப்படி அதிகாரமளிக்கப்பட்டதும் அதன்மூலம் ஒப்பந்த ரீதியிலான உறவுமுறையை அதனை வைத்திருப்பவருடன் செய்துகொள்ளுகின்றதுமானவொரு வங்கித் தொழில் நிறுவனம் அல்லது வேறு குழு அதிகாரசபை அல்லது நிறுவனம் என்று பொருளாகும்;

"கொடுப்பனவு உபாயம்" என்பது -

(அ) ஏதேனும் கடன் அட்டை என்று பொருளாகுமென்பதுடன், அதன்கண் காந்த விசையூட்டப்பட்ட மறைபொருள் குறிப்பிலக்கமிடப்படுதல் நடைபெற்றுள்ள ஏதேனும் அட்டை, தகடு, குறியீடு, கணக்கிலக்கம், நுண்சில்லுகள் கட்புலச் சாதனம் அல்லது ஆவணம் என்பவற்றையும் உள்ளடக்கும் ; அல்லது

(ஆ) உபாயமொன்றை வைத்திருப்பவர் தொடர்பான கணக்கிலக்கங்களும் ஆணைமுறையான அல்லது தற்றுணிசார் தரவும் அல்லது தகவலும், பொறிமுறை, இலத்திரனியல், இலத்திரனியல் காந்த கட்புல அல்லது வேறு வழிவகைகள் மூலம் பதியப்பட்டுக் களஞ்சியப்படுத்தப்படுகின்ற அத்தகைய உபாயமொன்று என்று பொருளாகுமென்பதுடன், அத்தகைய உபாயம் அதனை வழங்குபவரினால் ஏற்றங்கீகரிக்கப்படுவதுடன், அத்தகைய அட்டை, அல்லது உபாயம் (வழங்குநரொருவரினால்) எந்த வைத்திருப்பவருக்குச் சட்டமுறையாக வழங்கப்பட்டுள்ளதோ அந்த வைத்திருப்பவருக்கு அல்லது அவரினால்

(i) பண்டங்களை அல்லது சேவைகளைப் பெறுவதற்காகக் கடனை நீடிப்பதற்கு ; அல்லது

(ii) ஒரு வங்கிக் கணக்குத் தொடர்பாக காசு மீளப்பெறுதல்களைச் செய்வதற்கும் மற்றும் ஏனைய செயல்களைப் புரிவதற்கு,

வசதியளிப்பதுமாகும்;

"கொடுப்பனவு உபாயத்தை வைத்திருப்பவர் தகவல்" என்பது, அதனை வைத்திருப்பவரின் கணக்கிலக்கம் அல்லது பெயர் அல்லது முகவரி போன்ற, அத்தகைய கொடுப்பனவு உபாயத்தில் பெயர் விவரப் பொறிப்பிடப்பட்ட, மறை பொருள் குறிப்பிலக்கமிடப்பட்ட அல்லது புடைக்கச் செதுக்கப்பட்ட ஏதேனும் தகவலையும் உள்ளடக்கும்;

"விற்பனை வலையமைப்பு நிலை" என்பது, கொள்ளுகின்ற வங்கியினால் பயன்படுத்தப்படும் விற்பனை நிலை முடிவிட வலையமைப்பு என்று பொருளாகும்;

"தயாரித்தல்" என்பது, வடிவமைத்தல், மாற்றுதல், மெய்யென்று உறுதிப்படுத்துதல், இரட்டித்தல் அல்லது பொருத்துதல் என்று பொருளாகும்;

"மோலோட்டமாக்கப்படிதல்" என்பது, வெள்ளைப் பிளாஸ்டிக்கு உட்பட்ட மறைபொருள் குறிப்பிலக்கமிடப்பட்ட தரவை காந்த கோட்டின்மீது ஒரு கொடுப்பனவு உபாயத்திலிருந்து இன்னுமோர் உண்மையான அல்லது போலிபுனையப்பட்ட உபாயத்தின் காந்தக் கோட்டின் மீது பிரதியெடுத்தல் என்று பொருளாகும்;

"கடத்துகை" என்பது, சட்டமுறையான அதிகாரமின்றி அல்லது நியாயமான காரணமின்றி ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட போலிபுனையப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்படாத கொடுப்பனவு உபாயங்களை தயாரித்தல், இறக்குமதி செய்தல், ஏற்றுமதி செய்தல், கைமாற்றுவதற்கான உட்கருத்துடன் வைத்திருத்தல், மறைத்துவைத்தல், வாங்குதல், விற்பனை செய்தல், கொடுத்தல், பெறுதல், களஞ்சியப்படுத்தல், நிருவகித்தல், இடம்பெயர்தல், கொண்டுசெல்லுதல், அனுப்புதல், ஒப்படைத்தல், பெற்றுக்கொடுத்தல், வழங்குதல் அல்லது விநியோகித்தல் என்பவற்றையும் உள்ளடக்கும்;

"கடத்துகைத் தரவு" என்பது,-

(அ) தகவல் முறைமை அல்லது கணனி முறைமை ஒன்றின் மூலம் ஒரு தொடர்பின் ஏற்றிக்கூறப்படற்பாலவை தொடர்பான தரவு;

(ஆ) சேவை வழங்குநரொருவரின் பாகமாகவுள்ளவொரு தகவல் முறைமையொன்றினால் தோற்றுவிக்கப்பட்ட தரவு;

(இ) தொடர்புகளின் மூலம், சேரிடம், மார்க்கம், நேரம், தரவு, அளவு, காலஎல்லை அல்லது ஒப்பப்பணம் செலுத்துநர் தகவல் என்பனவற்றைக் காட்டுகின்ற தரவு; அத்துடன்

(ஈ) தொடர்பு முறைமையொன்றினூடாகச் செல்லுகின்ற ஏதேனும் தரவு,

என்று பொருளாகும்.

"அதிகாரமளிக்கப்படாத கொடுப்பனவு உபாயம்" என்பது, களவாடப்பட்ட, காணாமற்போன, காலங்கடந்த, இல்லாதொழிக்கப்பட்ட, இல்லாதாக்கப்பட்ட, இடைநிறுத்தப்பட்ட அல்லது நிகழ்வுகளின் பிறழ்பிரதிநிதித்துவத்தின் மூலம் பெறப்பட்ட அல்லது பயன்படுத்தப்பட்ட ஏதேனும் கொடுப்பனவு உபாயத்துண்டு என்று பொருளாகும்.